
Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27°c 26°c

பக்கம் 32 ■ சுடர்: 28 ■ கதிர்: 323 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 29, புதன் 16.10.2013

வெளிநாட்டு விதை உ.கிழங்கு இம்முறை மானிய விலையில் 05
அ.தி.மு.கவுக்கு விரைவில் தகுந்த பாடம் புகட்டுவோம் 06
தளர்வுகள் வரலாற்றுத் தவறுகளாகும் 07
சென்றலைத் தோற்கடித்து சம்பியனானது ஸ்ரான்லி 22
சச்சின் டெண்டுல்கரிடம் கற்றவைகள் ஏராளம் 23

# வடக்குத் தேர்தலின் பின் படையினர் மீது சீண்டல்

## வவுனியாவில் கொந்தளித்தார் இராணுவத்தளபதி

யாழ்ப்பாணம், ஒக்.16

வட மாகாண சபைத் தேர்தலின் பின்னர் இராணுவத்தினரைச் சீண்டும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இதன் மூலம் எமது நாட்டைப் பிளவுபடுத்தும் நிலை ஏற்பட்டால், இராணுவம் அதனைத் தடுக்க - பதிலடி கொடுக்க - எப்போதுமே தயாராக இருக்க வேண்டும் - இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

இராணுவத்தளபதியாகப் பொறுப்பெடுத்த பின்னர் வட பகுதிக்கான பயணத்தை மேற்கொண்டுள்ள அவர் யாழ். மாவட்டத்தில் இராணுவத்தினருடனான சந்திப்புக்களை முடித்துக் கொண்டு வவுனியா மாவட்டத்துக்குச் சென்றிருந்தார்.

வன்னிப்பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில ஆண்டுகளுக்கு முன்னர் நாம் பதுங்கு குழிகளில் இருக்கும் போது எமக்கு எதிரான நடவடிக்கைகளை சிலர் மேற்கொண்டனர். அத்துடன் இராணுவத்தினரை நோகடிக்கும் செயற்பாடுகளை அவர்கள் முன்னெடுத்தனர். அப்போதெல்லாம், எமது இராணுவத்தினர் மிகவும் அமைதியாகவும் பக்குவமாகவும் செயற்பட்டனர்.

அதன் பின்னர் பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போது, எமது இராணுவத்தினர் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு நாட்டுக்கான பணியை மேற்கொண்டு பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்தனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற வட மாகாணசபைத் தேர்தலில் அரசு தோல்வியடைந்தது. மக்களுக்காக இராணுவத்தினர் பெரும் சேவைகளை செய்த போதிலும் அரசுக்கு தோல்வி ஏற்பட்டுள்ளதாக சிலர் தெரிவித்தனர்.



ஆனால் நாம் அரசியலுக்கு அப்பால் இந்த நாட்டின் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதில் வெற்றி கண்டுள்ளோம் என்பதில் பெருமையடைகின்றோம்.

தேர்தலின் பின்னர் இராணுவத்தினரைச் சீண்டும் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. அவ்வாறான நிலை ஏற்பட்டு நாடு பிளவுபடும் நிலைமை தோன்றினால் எமது இராணுவம் அதனைத் தடுக்க தயாராக இருக்க வேண்டும்.

இராணுவத்தினருக்கு உள்ளே இருக்கும் சிலரும் சூழ்ச்சிகள் மூலம் குழப்பங்களை ஏற்

21

# தமிழகத்தின் உணர்வுக்கு மதிப்பளித்தே இறுதி முடிவு

## பொதுநலவாயமாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங் கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.16

இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பது குறித்து இறுதி முடிவை தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் எடுப்பேன் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகளின் மாநாடு இடம்பெறவுள்ளது. ஈழத் தமிழர்களைக் கொன்றொழித்த இலங்கையில் இடம்பெறும் இந்த மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாதென்று தமிழகத்தைச் சேர்ந்த தி.மு.க, அ.தி.மு.க, ம.தி.மு.க,



பா.ம.க , விடுதலைச் சிறுத்தைகள் என்பன வலியுறுத்தி வருகின்றன.

இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து தோழர் தியாகு, உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்.

21

# காணாமற்போனோர் தொடர்பில் இரு தினங்களில் 1000 பேர் பதிவு

யாழ்ப்பாணம்,ஒக். 16

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் காணாமற்போனோரைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் கடந்த இரண்டு தினங்களாக மேற்கொள்ளப்பட்டன. காணாமற்போன சுமார் 1000 பேர் பற்றிய விவரங்கள் இதன்போது பதிவு செய்யப்பட்டன.

இந்தப்பதிவுநடவடிக்கை தொடர்ச்சியாக இன்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் என்று மன்னார் பிரஜைகள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

காணமற்போனோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவின் செயற்பாடுகளுக்கு மன்னார் பிரஜைகள் குழு ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்திருந்தது. இதற்கமைய காணாமற்போனோரின் உறவுகளிடமிருந்து விண்ணப்பங்களைப் பதிவு செய்து ஜனாதிபதி ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்க காணாமற்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின்

21

# தியாகுவின் உடல்நிலை மோசம்

கொழும்பு, ஒக்.16

இலங்கையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்ற கோரிக்கையை வலியுறுத்தி உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டு வந்த தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலர் தியாகுவின் உடல் நிலை மோசமானதையடுத்து அவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சென்னையில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்த தியாகுவைப் பரிசோதித்த மருத்துவர்கள், உடல்நிலை மோசமடைந்துள்ளது எனக் கூறியதை அடுத்து, நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் அவர் சென்னை ராஜீவ் காந்தி அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள தியாகு, அங்கும் எந்த

21

# கனடாவைப் போன்ற முடிவை இந்தியாவும் எடுக்கவேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கருத்து

கொழும்பு, ஒக்.16

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என சுயநலத்தைக் கருத்தில் கொள்ளாமல் கொள்கையின் அடிப்படையில் கனடா எடுத்துள்ள தீர்மானத்தைப் போன்று இந்தியாவும் எடுக்கவேண்டும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் உணர்வுகள் உள்ளிட்ட எல்லாக் காரணிகளையும் கருத்தில்கொண்டே இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய உச்சி மாநாட்டில் பங்கேற்பது தொடர்பில் முடிவெடுப்பேன் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்துள்ளார்.

அதேவேளை, இலங்கையில் நடைபெற

21

# மாவீரர் துயிலும் இல்லங்களை மீளவும் நிர்மாணிக்க வேண்டும்

## சாவகச்சேரி பிரதேச சபை தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஒக். 16

சிதைக்கப்பட்ட சகல மாவீரர் துயிலுமில்லங்களையும் உடனடியாக வடக்கு மாகாண அரசு மீள நிர்மாணிக்க வேண்டும் என்று சாவகச்சேரிப் பிரதேச சபையில் நேற்று முன்தினம் அதிரடியாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை தவிசாளர் த.துரைராசா தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பிரதேச சபை உறுப்பினரான ஶ்ரீரஞ்சன் , "எமது விடுதலைக்காக போராடிய ஆயிரக்கணக்கான இளைஞர்கள் வித்தாக வீழ்ந்தபோது அவர்களின் நினைவாகவும் வித்துடல்களை விதைக்கவும் உருவாக்கப்பட்ட மாவீரர் துயிலுமில்லங்களை இறுதிப் போரின் பின்னர் படையினர் அழித்து, அவற்றின் மேல் முகாம்களைஅமைத்துள்ளனர். தற்போது எங்களுக் கென வட மாகாண அரசு அமைந்துள்ள நிலையில் எமது இளைஞர்களின் உயிர்த்தி

21

# நாவற்குழியில் நேற்று காணி அளவீடு சிங்களக் குடும்பங்கள் படையெடுப்பு

யாழ்ப்பாணம்,ஒக். 16

நாவற்குழியில் அத்துமீறிக் குடியமர்ந்துள்ள சிங்கள மக்களுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்கும் பொருட்டு, அந்தப் பகுதியில் காணிகளை அளவீடு செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் தென்பகுதியிலிருந்து மேலும் பல சிங்களக் குடும்பங்கள் குறித்த காணியில் குடியேறும் நோக்கத்தோடு வந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2010 ஆம் ஆண்டு மீளக்குடியேறும் நோக்குடன் யாழ்.புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய சிங்களக்-ஆண்டு நவம்பர் மாதமளவில் விமல் வீரவன்ஸவின் அமைச்சுக்கு சொந்தமான தேசிய வீடமைப்பு அதிகார சபையின் காணிகளில் அத்துமீறிக்குடியமர்ந்தன.

இதன் பின்னர், காணியில்லாத தமிழ்க் குடும்பங்களும் அருகிலுள்ள காணியில் குடியே

21

# 15 இந்திய மீனவர்கள் எழுவை தீவில் கைது

யாழ்ப்பாணம், ஒக்.16

இலங்கை மீனவர்கள் 26 பேர் கடந்த 10 ஆம் திகதி இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அதற்குப் பதிலடியாக இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் 15 பேர் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் எழுவைதீவு கடற்பகுதிக்கு அண்மையாக வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 15 மீனவர்களும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்றைய தினம் முற்படுத்தப்பட்டபோது 28 ஆம் திகதி வரை அவர்களை விளக்

21

# இளைஞர்சேவை மன்ற யாழ். அதிகாரி திடீர் எனப் பதவியிலிருந்து நிறுத்தம்

## நிதி மோசடி என விசாரிக்க வருகிறது கொழும்புக் குழு

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பொறுப்பதிகாரி திடீரென பணியில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளார். இவர் பணி நிறுத்தம் செய்யப்பட்டமைக்கு பண மோசடி காரணமா என விசாரணை செய்ய கொழும்பில் இருந்து விசேட குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இந்த விடயம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

கடந்த 23 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் செயற்படும் இளைஞர் சேவைகள் மன்றத்துக்கு இதுவரை நிரந்தரக் கட்டடம் இல்லை. இந்த நிலையில் இளைஞர்களது வலுவூட்டல் செயற்பாடுகளுக்காக யாழ். மாவட்டத்தில் குறித்த மன்றம் செயற்பட்டு வருகின்றது:

அரச சார்பற்ற நிறுவனமான 'எயிட்' நிறுவனம் கடந்த ஜனவரி மாதம் இளைஞர் சேவை மன்றத்துக்கென மூன்றரைக் கோடிரூபாவை வழங்கியுள்ளது. வழங்கப்பட்ட நிதியில் ஒன்றரைக் கோடி வரையான நிதியைப் பயன்படுத்தி யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன. மீதி 2 கோடி ரூபா நிதியின் பயன்பாடு. தொடர்பான அறிக்கைகள் எவையும் சமர்ப்பிக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் வட மாகாண பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தில் நிதிக்கையாள்கையில் தெளிவான கணக்கறிக்கைகள் எதுவும் காட்டப்படவில்லை. இதனால் உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இ.ஈஸ்வரராஜா 6 மாத காலத்துக்கு பணியில் இருந்து இடைநிறுத்தப் பட்டுள்ளார். இது தொடர்பில் ஆராய்வதற்கு கணக்காய்வுக் குழுவினர் எதிர்வரும் 21. ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து ஆராயவுள்ளனர். அதன் பின்னரே நடந்தவற்றை எம்மால் கூற முடியும் என்றார். (ஜ-14)

# இயற்கை பேரிடர்களில் இருந்து மக்களைக் காக்க அர்ப்பணிப்போம்

## கிளி. அரச அதிபர் வேண்டுகோள்

அக்கராயன், ஒக். 16

இயற்கைப் பேரழிவுகளிலிருந்து மக்களை காக்க எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச இயற்கைப் பேரழிவுக் குறைப்பு தினத்தில் தலைமையுரை யாற்றும் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயற்கை அழிவுகளை எதிர்கொள்வதில் சிரமங்கள் உள்ள போதிலும் கடந்த காலங்களில் எமது மாவட்டத்தில் ஏற்பட்ட இயற்கை அழிவுகளை முன் ஏற்பாடுகள் இன்றி எதிர்கொண் டோம். எனினும் சிரமம் பாராது பலர் அர்ப் பணிப்புடன் சேவையாற்றினர். இதன் மூலம் பலத்த அழிவுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

இவ்வாறான அர்ப்பணிப்பாளர்களை நான் பாராட்டுகிறேன் - என்றார்.

இந்த நிகழ்வில் உலக தரிசன நிறுவனமும் கிளிநொச்சி அரச செயலக இடர் முகாமைத்துவ பிரிவும் இணைந்து நிகழ்த்திய நாடகம் ஒன்றும் அரங்கேற்றப்பட்டது. (ஜ-18)

# நாட்டுக்கு முஸ்லிம்களின் 'பங்களிப்பு அளப்பரியது

## ஹஜ் வாழ்த்தில் ஜனாதிபதி



'முஸ்லிம்களுடைய பிரார்த்தனைகள், எல்லா மக்களினதும் சமாதானத்திற்காகவும் கௌரவத்திற்காகவும் இருக்குமென்பதில் சந்தேகமில்லை" என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள ஹஜ் பெருநாள் வாழ்த் துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கைவாழ் முஸ்லிம்கள், உலகெங்குமுள்ள முஸ்லிம் சமூகத்துடன் இணைந்து கொண்டாடும் ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

முஸ்லிம் மக்கள் தமது நாளாந்த வேளைத் தொழுகையின்போது முன்நோக்குகின்ற திசையான புனித மக்கா நகரில் நான்கு மில்லியன்களுக்கும் அதிகமானவர்கள் ஒன்றுசேரும் புனித ஹஜ் உலகெங்கிலுமுள்ள முஸ் லிம் மக்களின் மிகவும் முக்கியமான வருடாந்த நிகழ்வாகும்.

இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு வருடாந்த ஹஜ் யாத்திரையில் கலந்துகொள்வதற் கான சகல வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அவர்கள் புனித அல்குர்ஆனினதும் முஹம்மத் நபியின் (ஸல்) போதனைகளுக்கான தமது அர்ப்பணங்களைப் புதுப்பித்து உலகெங்கிலுமுள்ள மக்கள் மத்தியில் சமாதானம், சகோதரத்துவம் மற்றும் புரிந்துணர்வு நிலவ வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றனர்.

புனித அல்குர்ஆனின் போதனைகளுக்கேற்ப இலங்கை வாழ் முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் எமது நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களுடன் ஐக்கியமாக வாழ்ந்துவருகின்றனர். எமது நாட்டின் முன்னேற்றத்திற்கும் எமது மக்களின் மகிழ்ச்சிக்கும் அவர்கள் குறிப்பிடத் தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளனர். இலங்கை வாழ் முஸ்லிம் மக்களுக்கு மகிழ்ச்சியும் அமைதியும் நிறைந்த ஈதுல் அல்ஹா வாழ்த்துக்கள். (சி)

# அனலைதீவு கிராம சேவகர் இனந்தெரியாதோரால் தாக்கு

யாழ்ப்பாணம், ஒக்.16

அனலைதீவு பகுதியில் கிராம சேவகர் ஒருவர் இனந்தெரியாத நபரால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 2.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் அனலைதீவு மேற்கு கிராம அலுவலரான வ. வடிவேல் அழகன் (வயது 40) என்பவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

அனலைதீவு பகுதியில் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் ஒருவரை பொலிஸாரிடம் பிடித்து கொடுத்துள்ளார் குறித்த கிராம சேவகர். இதனால் ஆத்திரம் அடைந்த அந்த நபர் கிராம சேவகரை தாக்கியதாக தெரிய வருகின்றது.

> “ சமூக விரோத செயற்பாட்டை தடுக்க முற்பட்டதால் வந்த வினை?

தொடர்ச்சியாக பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கு ஆளாகி வந்த அந்த நபரே தன்னை தாக்கியதாக குறித்த கிராம சேவகர் வேலணைப் பிரதேச செயலருக்கு தெரியப் படுத்தியதையடுத்து சம்பவம் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த நபரை கைது செய்ய முயன்ற வேளை அவர் தப்பித்து ஓடி விட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ஜ-5)

# கொள்ளையர்கள் நால்வருக்கு கடூழியச் சிறையும் தண்டமும்

## ஊர்காவற்றுறை நீதிமன்றில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 16

அத்துமீறி வீடு புகுந்து வீட்டில் இருந்தவர்களை கத்தியால் குத்திக் காயம் விளைவித்து நகைகள் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்த குற்றத்துக்காக நான்கு பேருக்கு அபராதமும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர். எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

நாரந்தனையில் 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் 30 ஆம் திகதி இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. அத்து மீறி வீடு புகுந்தவர்கள் வீட்டில் இருந்தவர்களைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தி விட்டு 10 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 3 லட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் சென்றனர். சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து நாரந்தனையைச் சேர்ந்த நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு தவணை இடப்பட்டு நடைபெற்றது. விசாரணைகளின் போது அவர்கள் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டது. இந்த நிலையில் நான்கு பேருக் கும் தலா 4 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப் பட்டதோடு அதனைச் செலுத் தத் தவறின் மூன்று மாதங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண் டும் என்றும், ஒவ்வொருவருக்கும் ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்தும் தீர்ப்பளித்தது நீதிமன்று. (ஜ-4)

# மாடு அறுப்பதற்கு எதிராக சிங்கள ராவய போர்க்கொடி

ஹஜ் பெருநாளில் சட்டவிரோதமான முறையில் மாடுகளை அறுக்க முஸ்லிம்கள் நடவடிக்கை மேற்கொண் டுள்ளனர் அவ்வாறானதொரு செயல் இடம்பெற்றால் அது நாட்டின் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்று சிங்களராவய அமைப்பு தெரிவித்தது.

எனவே, ஹஜ் பெருநாளான நாளை (இன்று) சட்டவிரோதமான முறையில் மாடுகள் அறுக்கப்படுவதை தடை செய்ய வேண்டுமென பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங் கக்கோனிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவ்வமைப்பின் தலைவர் வண.அக்மீமன தயாரத்தன தேரர் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் எல்லா மதத்தவருக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சுதந்திரத்தினூடாக ஒருவர் மற்றவரது மதத்துக்கு தாக்கத்தை ஏற்படுத்தும்படி செயற்படக் கூடாது. இலங் கையைப் பொறுத்தவரையில், பௌத் தர்களிடத்திலும், சிங்களவர்களிடத் திலும் புனிதமான ஒரு விலங்காக பசு இருக்கிறது. நாம் பசு வதையை எதிர்ப்பவர்கள்.

ஆனால், முஸ்லிம்கள் மாடுகளை அறுத்து உண்கின்றனர். நாளை (இன்று) ஹஜ்ஜுப் பெருநாளை முன் னிட்டு சட்டவிரோதமான முறையில் மாடுகளை அறுக்க முஸ்லிம்கள் பலர் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

கொழும்பில் ராகமையில் மட்டுமே மாடறுக்க முடியும். வேறு எந்த இடத்திலும் மாடறுக்க முடியாது. ஆனால் பல இடங்களில் மாடுகள் அறுக்கப்படுகின்றன. ஹஜ் பெருநாளில் பலிகொடுப்பதற்காக சுமார் 70 மாடுகள் மோதரை ஹெலிஹவுஸ் பூங்கா பகுதிக்கு சட்டவிரோதமாகக் கொண்டுசென் றுள்ளனர். இங்கு மாடுகள் அறுக்கப்படு வதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அனுமதி வழங்கப்பட்ட இடங்களில் மட்டுமே மாடுகளை அறுக்க முடியும். அதைவிடுத்து ஏனைய இடங்களில் மாடுகள் அறுக்கப்பட்டால் அது நாட்டின் சமாதானத்துக்கு அச்சுறுத்தலாகவே அமையும். எனவே, சட்டவிரோத மாடறுப்பைத் தடைசெய்யுமாறு பொலிஸ்மா அதிபரிடம் நாம் கோரிக்கை விடுக்கிறோம் - என்றார். (ங-சி)

# சுரேஷ் அணி இன்னமும் பதவியேற்க வில்லை

யாழ்ப்பாணம், ஒக்.16

பதவியேற்பு நிகழ்வைப் புறக் கணித்த வட மாகாண சபை உறுப்பினர்களில் ஈ.பி. ஆர். எல்.எப் அணியைச் சேர்ந்த நால்வர் இதுவரை சத்தியப் பிரமாணம் செய்து கொள்ள வில்லை என்று தெரிவிக்கப் படுகிறது.

ரெலோ, புளொட் கட்சிகளின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சத்தியப்பிரமாணம் செய்துள்ளநிலையில் சுரேஷ் பிரேமச்சந்திரன் அணியினர் இதுவரை சத்தியப் பிரமாணம் செய்ய வில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ஒருவர் கொழும்பு சென்று முதலமைச்சர் முன்னி லையில் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டுள்ளார். ஏனைய நால்வரும் எவர் முன்னிலையில் எப்போது சத்தியப்பிரமாணம் செய்வர் என்று அறிவிக்கவில்லை. (ஜ-86)



வடமாகாண சுகாதார மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் பி.சத்தியலிங்கம் நேற்று முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டு அங்குள்ள குறைபாடுகள் குறித்து ஆராய்ந்தார். இதன்போது மாஞ்சோலை வைத்தியசாலைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளையும் பார்த்து அறிந்தார். அமைச்சருடன் வடமாகாண சபை உறுப்பினர் அன்ரன் ஜெகநாதனும் கலந்து கொண்டிருந்தார். (ஐ)

# சிறுமியோடு சேர்ந்து வாழ்ந்தவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 16

சிறுமி ஒருவரை தனிமையில் அழைத்துச் சென்று வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அயலவர்களால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து குறித்த நபரை கைது செய்து யாழ். நீதிமன்றில் நிறுத்தினர் பொலிஸார். இதன்போது வழக்கை விசாரித்த நீதிபதி 15 வயது சிறுமியுடன் சேர்ந்து இருந்தார் என்ற சந்தேகத்தில் குறித்த இளைஞரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் சிறுமியை வைத்தியசாலையில் சேர்க்குமாறும் உத்தரவு இட்டார். (ஐ)



வவுனியா கிறிஸ்தவ குளத்தில் இடர் முகாமைத்துவம் தொடர்பான ஒத்திகை நிகழ்வொன்று கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது. வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ அதிகாரியான சூரியராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஏராளமானோர் பங்குபற்றினர். (க-402)

# உண்மை விதை வெங்காய செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஒக். 16

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உண்மை விதையைப் பயன்படுத்தி வெங்காய உற்பத்தியை மேற்கொள்வதில் குடாநாட்டு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருவதாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் க.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- சாதாரணமாக உற்பத்தி செய்யப்படுகின்ற வெங்காய உற்பத்தியை விட உண்மை விதையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் வெங்காய உற்பத்திக்கு செலவினங்கள் குறைவாக உள்ளதால் வெங்காய உற்பத்தியாளர்களது நன்மை கருதி இந்தியாவில் இருந்து உண்மை விதைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள வெங்காய உண்மை விதை யாழ்.மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்கத்தில் பங்கீட்டு அடிப்படையில் வெங்காயச் செய்கையாளர்கள் ஒருவருக்கு 7 ஆயிரத்து 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் வெங்காய விதைகளைப் பயன்படுத்தி நாற்று நடுகை மூலம் வேதாள வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் வெங்காய விதை ஒரு கிலோ 10 ஆயிரம் ரூபா வரை தனியார் துறையினரால் விற்பனை செய்யப்பட்டிருந்தது. (வ-14-11-17)

# அறிவகம் திறப்பு விழா

யாழ்ப்பாணம். ஒக்.16

முள்ளியவளை மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அறிவகம் திறப்பு விழா இன்று புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு. சங்கத் தலைவர் சி.சுதந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கரைத்துறைப் பற்று உதவிப் பிரதேச செயலாளர் ஆர்.குருபரன் கலந்து கொள்ளவுள்ளார். (வ-5)

# வளை ஓசை நூலுக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச கலாசார விழாவையொட்டி வெளிவரவுள்ள "வளை ஓசை" நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கண்டாவளை பிரதேச செயலக கலாசார பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும் கலாசார விழாவின், இவ்வாண்டுக்கான விழா நடைபெறவுள்ளது.

இந்நிலையில் இவ்விழாவின் போது வெளியிடப்படும் "வளை ஓசை" நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. பிரதேச அபிவிருத்தி தொடர்பான கவிதை. கட்டுரை மற்றும் கிராமங்களின் வரலாறுகள், ஆலய வரலாறுகள் தொடர்பான பல்வேறுபட்ட ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை கலாசாரப் பேரவை பிரதேச செயலகம், கண்டாவளை என்ற முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-6)

# வடக்குக் கடல் சீற்றத்தால் பாதிப்புற்றோருக்கு உதவி

## மாகாண கடற்றொழில் அமைச்சர் உறுதி

யாழ்ப்பாணம்.ஒக். 15

வடக்கு கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வடக்கு மாகாணசபையின் கன்னியமர்வில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உதவிகள் பெற்றுத் தரப்படும் எனவும் வடக்கு கடல்தொழில் அமைச்சர் பாலசுப்பிரமணியம் டெனீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்து தனது அமைச்சின் கடமைகளை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர், கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் சென்றார் அமைச்சர். மருதங்கேணியில் அமைந்துள்ள பருத்தித்துறை பிரதேசசபையின் உப அலுவலகத்தில், சபைத் தலைவர் பு.சஞ்சீவன் தலைமையில் சமாச மற்றும் சங்கத் தலைவர்களுடன் அமைச்சர் கலந்துரையாடல்களை நடத்தினார்.

இந்தக் கலந்துரையாடல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களான விந்தன் கனகரட்ணம், ச.சுகிரதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய அமைச்சர் பா.டெனீஸ்வரன், கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் விபரங்களைச் சரியான வகையில் திரட்டுமாறும் அவர்களுக்கு உடனடியாக நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தார்



பாதிக்கப்பட்ட மக்கள் பட்டினியால் வாடக் கூடாதெனத் தெரிவித்த அமைச்சர் நிவாரணங்கள் உடனடியாகக் கிடைக்கும் போதே அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு மத்திய அரசின் கீழுள்ள இடர்முகாமைத்துவப் பிரிவின் ஊடாக நிவாரணங்கள் பெறுவதற்குரிய ஒழுங்குகள் தொடர்பில் ஆராய்வதாகவும், எதிர்வரும் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள மாகாண சபையின் கன்னி அமர்வில் இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றி உதவிகள் வழங்க ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் பட்டினியால் வாடக் கூடாதெனத் தெரிவித்த அமைச்சர் நிவாரணங்கள் உடனடியாகக் கிடைக்கும் போதே அவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் எனவும் தெரிவித்தார். அத்துடன் சங்கங்கள், சமாசங்களின் கட்டமைப்புக்கள் ஒழுங்காக இயங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (கு-5)

# தேர்தல் பிரசுரங்களை அழிக்க அனுமதி கோருகிறது பொலிஸ்

தென்மராட்சி, ஒக்.16

தேர்தல் காலத்தில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட தேர்தல் பிரசார பிரசுரங்களை அழிப்பதற்கு அனுமதி கோரி அவை சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் காலத்தில் சுவரொட்டிகளாக பயன்படுத்த கட்சி அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த சுவரொட்டிகள் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தன.





அவற்றைத் தீயிட்டு அழிப்பதற்காக நீதிமன்றின் அனுமதி கோரி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட சுவ ரொட்டிகளையும் ஒப்படைத் துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# மீண்டும் பாவனைக்கு மன்ப உலூம் மதரசா



யாழ்ப்பாணம், ஒக்.16

23 வருடங்களுக்கு மேலாக பாவனை இன்றி இருந்த மன்ப உலூம் மதரசா திங்கட்கிழமை மாலை இஹா தொழுகையின் பின்னர் பொது மக்கள் பாவனைக்காக மதிரிஸா அவிருத்தி சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

புனரமைப்பின் பின்னர் வைபவ ரீதியாக பள்ளிவாசலின் நிர்வாகப் பொருளாளர் எம்.எஸ்.எஸ்.சாகுல் ஹமீட்டினால் மதரசா சங்க உறுப்பினர் ஜமாலிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் ஐயூப், ஜம்மியதுல் உலமா யாழ்.மாவட்ட தலைவர் மௌலவி எம்.ஏ.அஸீல் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ-10)





செரண்டிவ் மா ஆலை நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் பேக்கரி மாவை பயன்படுத்தி பேக்கரி உற்பத்திப் பொருள்களை தயாரிப்பது தொடர்பான செயல்முறை விளக்கங்களுடனான கருத்தமர்வு ஒன்று நேற்று 'கிறீன் கிறாஸ்' விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் செரண்டிப் நிறுவன முகாமையாளர் ரயல்ஜோசப் கருத்துரை வழங்குகிறார். உத்தியோகத்தர்களால் உற்பத்திகள் தொடர்பாக செய்முறை ரீதியில் விளக்கமளிக்கப்படுகின்றது. (வ-21)

# தனியார் கல்வி நிலைய மாணவன் மீது தாக்குதல்

வலி. வடக்கு. ஒக். 16

தனியார் கல்வி நிலைய மாணவன் ஒருவர் அயல் வீட்டுக்காரரால் கடுமையாக தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் சுன்னாகத்தில் இடம் பெற்றுள்ளது.

தனியார் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவன் ஏனைய மாணவர்களுடன் சோந்து பந்து விளையாடிய வேளையில் பந்து அடுத்த விட்டில் சென்று விழுந்துள்ளது. பந்தை மாணவன் எடுத்து வந்த நிலையில் இரண்டாம் நாள் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்ற குறித்த மாணவனை மயக்கம் அடையும் வரை தாக்கப்பட்டார்.

இதே வேளை தனியார் கல்வி நிலையமும் கூட இதனை யிட்டு கவனம் செலுத்தவில்லை என்று பலரிடம் இருந்தும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. சிறுவர் அமைப்பு அதிகாரிகள் இத்தகைய சம்பவங் களில் கவனம் செலுத்த முன் வரவேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-86)

### திருச்சி அகதிகள் முகாமில் கைகலப்பு இலங்கை அகதி கைது

திருச்சி, ஒக்.16
திருச்சியில் சிறப்பு அகதிகள் முகாம் சிறைச்சாலையில் இடம் பெற்ற முறுகல் நிலையால் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் இலங்கை அகதியொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
சிறையில் கைதிகளுக்குள் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக ஒருவருக்கு மண்டை ஓடு உடைந்துள்ளது.
இலங்கை அகதிகளை தடுத்து வைத்து கண் காணிக்க திருச்சி மத்திய சிறை வளாகத்தில், சிறப்பு முகாம் சிறை நிறுவப் பட்டுள்ளது.
இதில் அடைக்கப்பட்டுள்ள நிர்மல் ஆனந்த் (வயது 30) மற்றும் இலங்கநாதன் (வயது 32) ஆகியோருக்கு இடையே ஞாயிற்றுக்கிழமை இரவு, நிதி கொடுக்கல் வாங்கல் தொடர்பாக முறுகல்நிலை ஏற்பட்டு அது கைகலப்பில் முடிவடைந்தது. இருவருக்கும் இடம் பெற்ற கைகலப்பில் நிர்மல் குமாருக்கு மண்டை உடைந்தது.
தகவலறிந்த சிறைச்சாலைப் பொலிஸார் நிர்மல்குமாரை மீட்டு, சிறை வளாகத்தில் உள்ள மருத்து வமனையில் சேர்த்தனர்.
இதுகுறித்து கே.கே.நகர் பொலிஸார் வழக்கு பதிவு செய்து, இலங்கநாதன் என்பவரை கைது செய்தனர். (வ)

# பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக்கக்கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுக

## திருமாவளவன், ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஒக்.16
இலங்கையில் நடைபெற வுள்ள பொதுநலவாய மாநாட்டை இந்தியா புறக்கணிக்கக்கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல். திருமாவளவன், பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ராமதாஸ் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
இது குறித்து திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித் துள்ளதாவது:-
தமிழக சட்டசபை எதிர்வரும் 23 ஆம் திகதி கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்காடு சட்ட சபைக்கு இடைத் தேர்தல் அறிவிக் கப்பட்டிருக்கும் நிலையில் இந்தக் கூட்டத் தொடர் அதிக நாள்கள் நடப்பதற்கு வாய்ப்பில்லை.
எனினும் முக்கியத்துவம்வாய்ந்த காலகட்டத்தில் கூடவிருக்கும் இந்தக் கூட்டத்தொடரில் தமிழக மக்களின் நலன்களையும் உரி மைகளையும் பாதுகாக்கும் சில முடிவுகளை மேற் கொள்ளுமாறு தமிழக அரசை விடுதலைச் சிறுத் தைகள் கட்சி சார்பில் வேண்டு கிறேன்- என்றுள்ளது.



பொது நலவாய அமைப்பிலிருந்து ஒரு நாடு நீக்கப்படுவதற்கு என் னென்ன காரணங்கள் இருக்க வேண்டுமோ, அவை அனைத்தும் இலங்கைக்கு எதிராக உள்ளன.

இதேவேளை ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில தெரி வித்துள் ளதாவது:-
பொதுநலவாய அமைப்பில் ஒரு நாடு தொடர்வதற்கு என் னென்ன தகுதிகள் தேவையோ, அவற்றில் ஒன்று கூட இலங் கைக்கு இல்லை; பொது நல வாய அமைப்பிலிருந்து ஒரு நாடு நீக்கப்படுவதற்கு என் னென்ன காரணங்கள் இருக்க வேண்டுமோ, அவை அனைத் தும் இலங்கைக்கு எதிராக உள்ளன. எனவே பொதுநல வாய அமைப்பிலிருந்து இலங் கையை நீக்க வேண்டும் என்று கடந்த மார்ச் மாதமே மத்திய அரசை நான் வலியு றுத்தினேன்.
தொடர்ந்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் இதே கருத்தை வலியுறுத்தியுள் ளனர். மாணவர்கள் அமைப் பினரும் பல்வேறு போராட்டங் களை முன்னெடுத்தனர். ஆனால் மத்திய அரசோ கேளாக்காதினராய் இருந்து வருகிறது. மாறாக தமிழர்களின் உணர் வுகளை சிறிதும் மதிக்காமல் இலங்கைக்கு போர்க்கப் பல்களை வழங்குவது, இலங் கையில் மின் நிலையங்களை அமைத்துத் தருவது உள் ளிட்ட நடவடிக்கைகளில் மத் திய அரசு ஈடுபட்டு வருகிறது.
இந்திய அரசுக்கு நெருக்கடி தரும் கடமை தமிழக அரசுக்கு உள்ளது.
எனவே, பொதுநல வாய அமைப்பிலிருந்து இலங் கையை நீக்க வேண்டும்; பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்தக்கூடாது; அந்த மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி, வரும் 23 ஆம் திகதி கூட விருக்கும் சட்டப் பேர வைக் கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்ற வேண்டும். பின்னர் அனைத்துக் கட்சித் தலைவர் களுடன் பிரதமரை நேரில் சந்தித்து, தீர்மானத் தின் நகலைக் கொடுத்து அதில் இடம் பெற்றுள்ள கோரிக்கை களை வலியுறுத்த வேண் டும்- என்றுள்ளது. (வ)

## இலங்கை மாணவருக்கு ஜப்பானில் உயர் கல்வி

இலங்கை மாணவர்களுக்கு பகுதி நேரத் தொழில் வாய்ப்புடன் ஜப்பானில் உயர்கல்வியை மேற்கொள்ள வாய்ப்புக் கிடைத்துள்ளது. இது சம்பந்தமான புரிந்துணர்வு உடன் படிக்கை கொழும்பில் கைச் சாத்திடப்பட்டுள்ளது.
இந்த உடன்படிக்கையில் இலங்கை உயர்கல்வி அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரட்னவும், ஜப்பான் தொடர்பாடலுக்கான சர்வதேசப் பாடசாலையின் பிரதம பணிப்பாளர் டொமோகிரோ அன்ரகுவும் கையெழுத்திட்டுள்ளனர்.
புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்காக ஜப்பான் இலங்கை நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் செயலர் ஒதாசி மொட்டயுகி மற்றும் டொமொகிரு அன்ராகு ஆகியோர் தலைமையில் ஐவர் அடங்கியகுழு, கடந்த வார இறுதியில் கொழும்புக்கு வருகை தந்திருந்தது. இந்தக் குழுவினர் புரிந்துணர்வு உடன்படிக் கையில் கைச்சாத்திட்ட பின்னர் கொழும்பில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியுள்ளனர்.

ஜப்பானுக்கும் இலங் கைக்கு மிடையிலான கல்விப் பரிமாற்றத் திட் டத்தின் கீழ் இலங்கை மாணவர்கள் உயர் கல்வி யைத் தொடர்வ தற்கு வாய்ப்பு அளிக்கப் படவுள்ளது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் அவர்கள் தெரிவித்ததாவது:
ஜப்பானுக்கும் இலங்கைக்கு மிடையிலான கல்விப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் நாம் இலங்கை உயர்கல்வி அமைச் சுடன் புரிந்துணர்வு உடன் படிக்கை செய்து இருக்கின் றோம். இந்தத் திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு ஆரம்பப் பகுதி முதல் இலங்கை மாணவர் கள் எமது கல்லூரிகளில் சேர்க் கப்படுவார்கள் - என்றனர். (ச)



சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு இலங்கை தேசிய விழிப்புலனற்றோர் சம்மேளனத்தின் மத்திய மாகாண கிளை நடை பவனியொன்றை ஏற்பாடு செய்தது. இந்தநிகழ்வில் தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல, பிரதி அமைச்சர் ஏர்ள் குணசேகர உட்பட பலர் பங்கேற்றனர்.

## வினாடி வினாப் போட்டி

வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான கோட்டமட்ட வினாடி வினாப் போட்டி தெரிவுப் பரீட்சை நாளை வியாழக் கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற வுள்ளது. மருதங்கேணிக் கோட்டப் போட்டிகள் செம்பியன்பற்று அ.த.க. பாடசாலையிலும் கரவெட்டிக் கோட்டப் போட்டிகள் நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையிலும் பருத்தித்துறைக் கோட்டப் போட்டிகள் வட.இந்து ஆரம்பப் பாடசாலையிலும் நடைபெறவுள்ளன. (ரு-35)



## வளவை துப்புரவு செய்தவர் பாம்பால் கடியுண்டார்

தென்மராட்சி, ஒக். 15
டெங்கு நுளம்பு உற்பத்தியைத் தடுக்கும் வகையில் வளவைத் துப்புரவு செய்த இளைஞர் விஷப் பாம்பால் கடியுண்டார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலைமிருசுவில்,உசனில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் விஜிதரன் (வயது -21) என்பவர் பாம் பால் கடியுண்ட நிலையில் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்குகொண்டுசெல்லப்பட்டார். (வ-9)

### இலங்கையில் பொதுநலவாய மாநாடு வேண்டாம்

# மத்திய அரச அலுவலகங்களுக்கு பூட்டுப்போடும் நூதன போராட்டம்

### திராவிடர் கழகத்தின் ஏற்பாட்டில்

சென்னை, ஒக்.16
இலங்கையில் நடைபெறம் பொது நலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்பதை வலியுறுத்தி, சென்னையில் மத்திய அரசு அலுவல கங்களுக்கு பூட்டுப் போடும் போராட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் ஈடு பட்டனர்.
இலங்கையில் அடுத்த மாதம் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங் கேற்கக் கூடாதுஎன்பதை வலியுறுத்தி தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடு பட்டுவரும், தமிழ் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகுவுக்கு ஆதரவு தெரிவித்தே மத்திய அரசு அலுவலகங்களுக்கு பூட்டுப் போடும் போராட்டத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் ஈடுபட்டனர். (வ)


## மரண அறிவித்தல்



### திருநாவுக்கரசு தங்கவேல்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு தங்கவேல் நேற்று (15.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2013) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் மாமாவின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

(32850-23-14)

தகவல்:
ந.நாகராசா (மாமா)



## ஓராண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 01 07 1938
இறைவன் திருவடியில் 28' 09 2012

அமரர்
### விஜயரத்தினம் மகேஸ்வரி

திதி
திரியோதசி

அன்பின் திருவுருவே
ஆருயிராய் கலந்தவளே
இன்றுடனே ஓராண்டு ஓடி மறைந்ததம்மா
ஈரவிழிகளுடன்
உம்மை நாம் தேடுகின்றோம்.

(சி12900-23)

வேம்பன் வீதி,
உரும்பிராய் தெற்கு.

விஜயரத்தினம் (கணவர்)
தாரணி (மகள்)0212230913

## மாலி சந்தி இரத்ததான முகாமில் பலர் பங்கேற்பு

அல்வாய் கிழக்கு மாலி சந்தி மைக்கல்விளையாட்டுக்கழகம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய நடமாடும் இரத்த தான நிகழ்வில் நூற்றுக் கணக்கானோர் இரத்ததானம் செய்தனர்.

கழக மைதானத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி வைத்தியப் பொறுப்பதிகாரி மருத்துவர் எஸ்.வாசுதேவன் தலைமையிலான இரத்த வங்கிப் பிரிவினர் இந்த நடமாடும் சேவையை நெறிப்படுத்தினர். மூலம் இரத்தத்தைப் பெற்றுக் கொண்டனர்.

உயிர் காக்க இரத்தம் தேவைப்படுவதால் தமது கழகம் தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் இரத்ததான நிகழ்வை நடத்தி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு இரத்தத்தை வழங்கும் என கழகத் தலைவர் எஸ்.செல்வதீபன் தெரிவித்தார். (வ-8)




வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட முகப்பு பெயர்வளைவு திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் கலந்துகொண்டு பெயர்வளைவைத் திறந்து வைத்தார். (வ-9)

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி.கிழக்கில் மரநடுகை திட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 16

வலி.கிழக்கு பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மர நடுகைத் திட்டம் ஒன்றை சபை முன்னெடுக்கவுள்ளதாக சபையின் தலைவர் அன்னலிங்கம் உதயகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது :-

வாதரவத்தைப் பிரதேசத்தில் மர நடுகைத் திட்டம் ஒன்றை பெரியளவில் முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



பெரும்பாலும் மர நடுகைத் திட்டத்தை இந்த வாரத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாதரவத்தை குளம் மற்றும் வீரவாணி குளம் ஆகிய இணைப்பு குளக்கரையோரங்களில் மர நடுகை திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. குறித்த குளக்கரையோரங்களில் 150 மலை வேம்புகளையும் 75 மரமுந்திரிகைக் கன்றுகளையும் நடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அதனைவிட வலி.கிழக்குப் பிரதேசத்தின் பொது இடங்களிலும் பயன்தரும் மரங்கள் நடப்படவுள்ளன -என்றார். (வ-17)

## மீளக்குடியமர்ந்து 2 வருடங்களாகியும் திருத்தப்படாத வன்னியசிங்கம் வீதி

யாழ்ப்பாணம், ஒக்.16

வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் அந்தப் பகுதியிலுள்ள முக்கிய இணைப்பு வீதியான வன்னியசிங்கம் வீதி இன்னமும் திருத்தப்படாத நிலையிலேயே உள்ளது. வலி.வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகள் கடந்த 2010 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டது. இதில் வித்தகபுரம், கொல்லன்கலட்டி பிரதேசங்களில் முக்கிய பிரதான வீதியான வன்னியசிங்கம் வீதி விடுவிக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் புனரமைக்கப்படாமல் உள்ளது.

வல்வை-அராலி பிரதான வீதியையும், மாவிட்டபுரம்-கீரிமலை பிரதான வீதியையும் அம்பனைச் சந்தியிலிருந்து தச்சன் காட்டுச் சந்தி வரையும் இணைக்கும் 2.3 கிலோ மீற்றர் நீளமான வன்னிய சிங்கம் வீதியே மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது.

1990 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முன்னர் புனரமைக்கப்பட்டதன் பின்னர் குறித்த வீதி இன்னமும் புனரமைப்புச் செய்யப்படாமலேயே உள்ளது. 768 பஸ் வழித்தட சேவையின் முக்கிய வீதியாகவுள்ள இதனை புனரமைப்பதற்காக மாகாண வீதி அபிவிருத்தித் திணைக் களம் எந்த நடவடிக்கையையும் மேற் கொள்ளவில்லை.

குன்றும் குழியுமாக உள்ள குறித்த வீதியால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள், தொழில் நடவடிக்கைகளுக்குச் செல்வோர் எனப் பலரும் பாதிப்பை எதிர் கொள்கின்றனர். அத்துடன் வாகனங்களும் சேதமடைகின்றன.

இதன் காரணமாக குறித்த வீதியூடான போக்குவரத்துச் சேவை எதிர்வரும் மார்கழி மாதத்துடன் நிறுத்தப்படும் அபாயமும் தோன்றியுள்ளது.



மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான குறித்த வீதியைப் புனரமைப்பதற்கான நிதி தம்மிடம் இல்லையென்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண சபையைப் பொறுப்பெடுத் துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய நிர்வாகம், குறித்த வீதியைப் புனரமைத்துத் தர வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களால் வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது. (வ-5)

# வெளிநாட்டு விதை உ.கிழங்கு இம்முறை மானிய விலையில்


## செய்கையாளருக்கு வழங்க நடவடிக்கை

அச்சுவேலி, ஒக்.16

யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையாளர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு இந்த வருடம் 50 வீத மானிய விலையில் வழங்கப்படவுள்ளது. விவசாய அமைச்சின் தீர்மானத்துக்கு அமைய யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் இந்த விதை உருளைக் கிழங்கு விநியோகத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்ட விவசாயிகள் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் கடந்த காலத்தில் எதிர்கொண்டு வந்த பாதிப்புக்களைக் கருத்திற் கொண்டு யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு விதை உருளைக்கிழங்கு மானிய விலையில் வழங்கப்படவுள் ளது.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்கு அறுவடை செய்யப்படும் காலப் பகுதியில் அதன் விற்பனை விலையை உறுதி செய்யும் வகையில் வெளிநாடுகளில் இருந்து உருளைக்கிழங்கு இறக்குமதியை மட்டுப்படுத்துவதோடு அதற்கான இறக்குமதி வரியையும் அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் விதை உருளைக்கிழங்கு தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்டு அதி உச்ச விலைக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. 50 கிலோ கொண்ட பொதி 13 ஆயிரம் ரூபா வரை விலை போனது.



ஒரு கிலோ விதை உருளைக் கிழங்கு 200 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்பட்டது. கிழங்கின் தரநிலை மற்றும் யாழ்.மாவட்ட கால நிலைக்கு ஏற்ற வகையில் வளர்ச்சி மற்றும் நோய்த்தாக்கம் என்பனவும் உரிய கட்டுப்பாட்டு நிலை யில் இல்லாமல் இருந்தமையால் விவசாயிகள் எதிர்பாராத பாதிப்புக்களை எதிர்நோக்கினர்.

யாழ்.மாவட்ட உருளைக் கிழங்கு அறுவடை செய்யப்படும் காலப்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து உணவுத் தேவைக்கான கிழங்கு கட்டுப்பாடின்றி இறக்குமதி செய்யப்பட்டமையால் உள்ளூர் உருளைக்கிழங்கின் சந்தை விலை மிகத் தாழ் நிலைக்குச் சென்றது. இதனால் உற்பத்தியாளர்கள் நட்டமடைய வேண்டி ஏற்பட்டது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டே விதை உருளைக் கிழங்கை 50 வீத மானிய விலையில் வழங்கல், உள்ளூர் கிழங்கு அறுவடை செய்யும் காலப்பகுதியில் உணவுக்கான கிழங்கு இறக்குமதியை குறைத்தல், அதன் இறக்குமதி வரியை அதிகரித்தல் என்னும் தீர்மானங்கள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

மானிய விலை விதை உருளைக்கிழங்கு விநியோகம் தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்ததாவது:-

"யாழ்.மாவட்ட உருளைக் கிழங்குச் செய்கையாளர்கள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தேவையான விதை உருளைக்கிழங்குக்கு குறித்த விலையில் 50 வீதத்தை முற்பணமாகச் செலுத்திய பின்னர் ஒரு குறிப்பிட்ட காலக்கிரமத்தில் விதை உருளைக் கிழங்கு வழங்கப்படும். கல்வைற், அனோவா, றெட் லைட் சோடா போன்ற யாழ். மாவட்டத்துக்கு ஏற்ற தரமான விதை உருளைக் கிழங்கு இனங்கள் அமெரிக்கா, ஹொலன்ட் ஆகிய நாடுகளில் இருந்து இறக்கு மதி செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளன.

விதை உருளைக்கிழங்கு விநியோகம் உருளைக் கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் உருளைக்கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சமாசம் ஆகியவற்றின் உதவியுடன் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்" எனத் தெரிவித்தார். (வ-11)

## தமிழ் மொழியில் ஒத்த கருத்துச் சொல் என எதுவும் இல்லை

### பேராசிரியர் சிவலிங்கராஜா கருத்து

யாழ்ப்பாணம், ஒக்.16

தமிழ் மொழியில் ஒத்த கருத்துள்ள சொல் என்று எதுவும் இல்லை என்பதை பத்திரிகையாளர்கள் மட்டுமன்றி அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை பேராசிரியர் சிவலிங்கராஜா தெரிவித்தார்.

உதயன் பணிமனையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற நவராத்திரி பூசை நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

"பொன்னைக் கொடுத்து பிள்ளைக்கு கல்வியை வாங்கினார் ஹென்ஸ்மன் முருகப்பா.

***கல்வியைப் போற்றும் நன்னாளில் புலமைப் பரிசில் மாணவர்களுக்கும் ஏதாவது வழி ஏற்படுத்த வேண்டும். அந்தப் பரீட்சை மாணவர்களை மழுங்கடிக்கின்றது.***

இன்றும் யாழ்ப்பாணத்தில் பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். எனினும் கல்வித் தரத்தில் நாம் பின் தங்கியே உள்ளோம்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாக்கள் தெளிவில்லாத் தன்மையை உருவாக்குகின்றன. தமிழில் ஒத்த சொல் என்ற ஒரு பதம் இல்லை.

குறிப்பாக நீர் வேறு, தண்ணீர் என்பது வேறு. இரண்டும் ஒன்றல்ல. கல்வியைப் போற்றும் நன்னாளில் புலமைப் பரிசில் மாணவர்களுக்கும் ஏதாவது வழி ஏற்படுத்த வேண்டும். அந்தப் பரீட்சை மாணவர்களை மழுங்கடிக்கின்றது.

தாயை, பெண்களை மதிப்பவர்களே நவராத்திரி விழா கொண்டாட உகந்தவர்கள். நாம் கேட்பவற்றை எல்லாம் கொடுக்கும் தெய்வமாக அம்பிகை உள்ளாள். இன்றைய காலத்தில் இரக்கம் இல்லாது போகின்றது. சமயத்தை வைத்து பல் கொலைகள் இடம்பெறுகின்றன.

சமயங்களுள் இந்து சமயம் சிறந்த நிலையில் உள்ளது. எந்தவொரு சமயமும் பிழையானவையல்ல. சமயிகளே பிழை விடு கின்றனர்".-என்றார்.

இந்த நிகழ்வில் நிறுவன அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ஙு-10-20)

## வாசிப்பு மாதத்தையொட்டி நடமாடும் நூல் சேவை

### வலி.கிழக்கு பிரதேச சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 16

வலி.கிழக்குப் பிரதேச சபை வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடமாடும் நூல் சேவை ஒன்றை நடத்தவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள சபையின் நூல் நிலையங்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் இந்த நடமாடும் சேவையை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

குறித்த நடமாடும் நூல் சேவையில் பங்கு கொண்டு பயன் பெற்றுக் கொள்ளுமாறு சபையின் தலைவர் அ.உதயகுமார் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

சபையின் சகல நூல் நிலையங்களிலும் இதற்கென தெரிவு செய்யப்பட்ட சிறந்த நூல்களை காட்சிப்படுத்தி அதன் மூலம் மக்களது வாசிப்பு மற்றும் அறிவுத் திறனை வளர்ப்பதற்கு முடியும் என்றார். (வ-17)

# அ.தி.மு.கவுக்கு விரைவில் தகுந்த பாடம் புகட்டுவோம்

## மு.க.ஸ்டாலின் கூறுகின்றார்

சென்னை, ஒக்.16
சர்வாதிகார ஆட்சி நடத்தும் அ.தி.மு.க. அரசுக்கு விரைவில் தகுந்த பாடம் புகட்டுவோம். அதற்காகவே ஏற்காடு இடைத்தேர்தலில் போட்டியிட தி.மு.க. முடிவெடுத்துள்ளது என்று தெரிவித்துள்ளார் தி.மு.க. பொதுச் செயலர் மு.க.ஸ்டாலின்.
சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:
"இந்தத் தேர்தலில் நாம் வெற்றிபெற்றே தீரவேண்டும் என்று போட்டியிடவில்லை. இப்போது நடைபெறும் ஆட்சிக்கு பாடம் புகட்டவே போட்டியிடுகிறோம். இந்தத் தேர்தல் ஆட்சி மாற்றத்துக்கான தேர்தல் இல்லை. ஆளுங் கட்சியின் தவறுகளை சுட்டிக் காட்டவும், திருத்தவும் மட்டுமே தேர்தல் நடைபெறுகிறது. இதை மனதில் வைத்து கட்சியினர் தேர்தல் பணியாற்ற வேண்டும். தேர்தலின் போது, ஆளுங்கட்சியினர் பொலிஸாரை வைத்து மிரட்டக்கூடும். அதை எதிர்கொள்ள தி.மு.க.வில் சட்டத்தரணிகள் அணி 24 மணி நேரமும் தயாராக உள்ளது." என்றார். (ற)




# நரேந்திர மோடி தொடர்பில் பீதியைக் கிளப்புகிறது காங்.

## ஜமாத் இ உலமா இந்த் அமைப்பு தெரிவிப்பு

ஜெய்ப்பூர், ஒக்.16
"பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி குறித்து பீதியைக் கிளப்பி முஸ்லிம்களின் வாக்குகளைத் திருப்பும் வேலையில் காங்கிரஸ் ஈடுபடுகின்றது. இது தேவையற்ற நடவடிக்கை. முஸ்லிம்களை தேவையில்லாமல் இப்படி அச்சுறுத்தக் கூடாது" என்று தெரிவித்துள்ளார் ஜமாத் இ உலமா இந்த் என்ற அமைப்பின் தலைவரான சையத் மஹமூத் மதானி.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
"மோடியை வைத்து முஸ்லிம் வாக்குகளை தனக்கு சாதகமாக திருப்பும் வேலையில் காங்கிரஸ் ஈடுபடுகிறது. இது தவறானது. 2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை மனதில் கொண்டு இவ்வாறு காங்கிரஸ் செயற்படுகிறது.
மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவித்துள்ளதற்காக முஸ்லிம்கள் அச்சப்படத் தேவையில்லை. நமது நாட்டில் மதச் சார்பின்மை நன்கு ஆழமாக ஊடுருவியுள்ளது. இதை எந்த ஒரு மதவாத சக்தியாலும் மக்களின் மனதிலிருந்து அகற்றிவிட முடியாது.
முஸ்லிம் மக்களிடையே பயத்தை ஏற்படுத்தி அதன் மூலம் வாக்குகளைப் பெறலாம் என்று காங்கிரஸ் முயல்கிறது. இதை அக்கட்சி நிறுத்த வேண்டும். இஸ்லாமிய சமூகத்தின் நலனுக்கான திட்டங்களில் காங் கிரஸ் கவனம் செலுத்த வேண் டும். உண்மையாக கவனம் செலுத்த வேண்டும்." என்று தெரிவித்துள்ளார். (ற)

### ஒரிசாவில் இயல்புநிலை பாதிப்பு

கோபால்பூர், ஒக்.16
ஒரிசாவில் 'பைலின்' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு வாழ்க்கை அடியோடு முடங்கியுள்ளது. புயல் கரையைக் கடந்த கோபால்பூர் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவரை 23 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலுமாக சேதமடைந்துள்ளன. 50 ஆயிரம் ஹெக்ரெயர் விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.
போக்குவரத்து, மின்சார விநியோகம் போன்றவை இதுவரை சீராகவில்லை. 5 லட்சத்திற்கும் அதிகமானோர் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கின்றனர். விளைநிலங்களில் பேரழிவைச் சந்தித்த விவசாயிகள் உதவிக்கு அரசை எதிர்நோக்கியுள்ளனர்.
புயல் பாதித்த பகுதிகளில் இயல்பு நிலை திரும்ப மத்திய அரசும், ஒரிசா மாநில அரசும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. போக்குவரத்தும், மின் விநியோகமும் இன்னும் ஓரிரு நாள்களில் சீராகும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.
ஒரிசாவில் மட்டும் இதுவரை 2000 ஆயிரம் கோடி ரூபா மதிப்பிலான உடமைகள் சேதமடைந்துள்ளன என்று கணக்கிடப்பட்டுள்ளது. (ற)



திப்ருக்கரிலிருந்து புதுடில்லி சென்றுகொண்டிருந்த ராஜ்தானி விரைவு ரயிலில் நேற்று அதிகாலையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. அதிகாலை 4 மணியளவில் குறித்த ரயிலின் சமையல் அறை உள்ள பெட்டி திடீர் என்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் சுமார் 4 மணிநேரம் போராடித் தீயை அணைத்தனர். உயிரிழப்புகள் எது வும் ஏற்படாதபோதும், தப்பும் முயற்சியின்போது பயணிகள் சிலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. (ற)

# இந்திய மீனவர்கள் மீது சூடு பாகிஸ்தானுக்குக் கண்டனம்

புதுடில்லி, ஒக்.16
குஜராத் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது பாகிஸ்தான் கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை தொடர்பில் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது இந்தியா.
இது தொடர்பில் பாகிஸ்தான் துணை தூதர் மன்சூர் அகமதுகானை நேரில் அழைத்து தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது இந்திய அரசு.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள மன்சூர் அகமது கான், "இந்த சம்பவம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, அதன் அறிக்கை விரைவில் இந்தியாவுக்கு தெரியப்படுத்தப்படும்" என்று கூறினார்.
கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற குறித்த இந்தக் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இந்திய மீனவர் ஒருவர் உயிரிழந்தார். 30 மீனவர்கள் பாகிஸ்தான் கடற் படையால் கைது செய்யப்பட்டனர். (ற)

# சாவு எண்ணிக்கையைக் குறைப்பதற்கு உடல்களை ஆற்றில் வீசிய பொலிஸார்

## ரத்தன்கார் விபத்தின்போது கொடூரம்: வெளியாகின்றன திடுக்கிடும் தகவல்கள்

ரத்தன்கார், ஒக்.16
இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் ரத்தன்கார் தசரா விழாவில் ஏற்பட்ட உயிரிழப்புகளைக் குறைத்துக் காட்டுவதற்காக இறந்தவர்களின் உடல்களை ஆற்றில் பொலிஸார் வீசியெறிந்தனர் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.
விபத்தில் சிக்கியவர்கள் தற்போது ஊடகங்களுக்கு வழங்கிய வாக்குமூலங்களை அடுத்தே இந்தத் தகவல்கள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.
மத்திய பிரதேச மாநிலத்தில் தாட்டியா மாவட்டத்தில் உள்ள ரத்தன்கார் பகுதியில் துர்க்கை கோயில் உள்ளது. சிந்து நதிக் கரையில் உள்ள இந்தக் கோயிலுக்கு பாலம் ஒன்றே முக்கிய பயண மார்க்கமாக உள்ளது. இங்கு தசரா விழா ஆண்டு தோறும் கொண்டாடப்படுவது வழக்கம். இம்முறையும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட தசரா விழாவில் 5 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் திரண்டனர்.



அளவுக்கதிகமான பக்தர்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் கண்மூடித்தனமான தடியடியை நடத்தியமையே விபத்துக்கான காரணமாகக் கூறப்படுகின்றது. தடியடி காரணமாக மக்கள் சிதறி ஓடத் தொடங்கியதை அடுத்தே உயிரிழப்புகள் ஏற்படத் தொடங்கின. இதனால் 109 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.
இந்தநிலையிலேயே சாவு எண்ணிக்கையைக் குறைப்பதற்காகப் பொலிஸார் ஏராளமான உடல்களை ஆற்றில் தூக்கி வீசியேறிந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
நெரிசலில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய கீதா மிஸ்ரா (55) என்பவர் கூறுகையில், "கடும் நெரிசல் ஏற்படும்போது நான் பாலத்தில் தான் இருந்தேன். அப்போது கீழே கிடந்த உடல்களை எடுத்துப் பொலிஸார் ஆற்றில் வீசுவதைப் பார்த்தேன். அவ்வாறு தூக்கி வீசப்பட்டவர்களில் சிலர் உயிருடன் இருந்ததையும் அவதானித்தேன்" என்று கூறுகின்றார்.
ஆசிஷ் என்ற 15 வயதுச் சிறுவன் கூறும்போது, "என் தம்பி நெரிசலில் சிக்கி இறந்தான். அவனது உடலை எடுக்க முயன்றபோது பொலிஸார் என்னைத் தடுத்தனர். நான் எவ்வளவோ கெஞ்சியும் என்னை விடவில்லை. நான் தொடர்ந்து அவர்களிடம் கெஞ்சினேன். 'தொல்லை கொடுக்காதே நீயும் செத்துப் போ' என்று கூறிய பொலிஸார் என்னை பாலத்தில் இருந்து கீழே தள்ளிவிட்டனர். எனக்கு அதனால் காயம் ஏற்பட்டது. எனது தம்பியின் உடல் இதுவரை கிடைக்கவில்லை" என்று தெரிவித்துள்ளான்.
இந்தத் தகவல்களால் பொதுமக்கள் மத்தியில் கொந்தளிப்புநிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து மத்திய பிரதேச அரசு இதுவரை எதுவும் கூறவில்லை. எனினும் பொலிஸார் இவற்றை மறுத்துள்ளனர். (ற)

### நிலக்கரி முறைகேடு: சி.பி.ஐ. புதிய வழக்கு

புதுடில்லி, ஒக்.16
நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு தொடர்பாக அந்தத் துறையின் முன்னாள் செயலாளர் பி.சி.போர்க் மற்றும் தொழில திபர் கே.எம் பிர்லா ஆகியோர் மீது சி.பி.ஐ. புதிய வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.
நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு முறைகேடு வழக்கு தாமதமாக நடைபெற்று வருவதாக உச்சநீதிமன்றம் அண்மையில் கண்டனம் தெரிவித்தது. அதன் எதிரொலியாகவே அவர்கள் இருவர் மீதும் புதிய வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற)

### ராமதாஸுக்கு பாதுகாப்பு தேவைதான்

#### சென்னை உயர்நீதிமன்றம்

சென்னை, ஒக்.16
பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனரான ராமதாஸுக்கும், அவரது மகன் அன்புமணி ராமதாஸுக்கும் தகுந்த பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
அண்மையில் இடம்பெற்ற சமூகப் பிரிவு ரீதியான மோதல்களால் தமது உயிர்களுக்கு ஆபத்துகள் இருக்கின்றன என்று தெரிவித்துத் தமது தென் மாவட்ட சுற்றுப் பயணங்களின் போது பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பாமக நிறுவுனர் ராமதாஸ் மற்றும் அவரது மகன் அன்புமணி ராமதாஸ் ஆகியோர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.
மனுவை விசாரணை செய்த சென்னை உயர்நீதிமன்றம் "சுற்றுப்பயண விவரங்கள் முன்கூட்டியே தெரிவிக்கப்படும் பட்சத்தில் பொதுக்கூட்டங்களில் அசம்பாவிதம் ஏற்படாத வண்ணம் இரு அரசியல் தலைவர்களுக்கு தகுந்த பாதுகாப்பளிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டுள்ளது.
இவர்கள் இருவருக்கும் முன்னர் வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி தமிழக அரசால் திரும்பப் பெறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# அமெரிக்கக் கப்பல் குறித்து மத்திய அரசுக்கு விளக்கம்

சென்னை, ஒக்.16
தூத்துக்குடி கடற்பகுதியில் சிறைபிடிக்கப்பட்டுள்ள அமெரிக்க ஆயுதக் கப்பல் குறித்து இந்திய மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு அறிக்கை அளிக்கப்படவுள்ளது என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.
சிறைப்பிடிக்கப்பட்டுள்ள கப்பல் குறித்து விரிவான அறிக்கையை மத்திய உள்துறை அமைச்சகம் கோரியுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.
இந்திய கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த அமெரிக்க கப்பலில், 10 மாலுமிகள் மற்றும் 25 தனியார் பாதுகாப்புப் படைவீரர்கள் உள்ளனர். இவர்கள் 35 பேர் மீதும் 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.
அவர்களிடம் மத்திய-மாநில உளவுத்துறை அதிகாரிகள், கடலோரக் காவல் படையினர், கடலோர பாதுகாப்புக் குழுமம் ஆகியோர் அடங்கிய அதிகாரிகள் குழுவினர் தொடர்ந்து 4ஆவது நாளாக விசாரணை நடத்தி வருகின்றனர்.
அதேவேளை, கப்பலின் பயண விவரங்கள் அடங்கிய புத்தகத்தை கையளிக்க கப்பல் ஊழியர்கள் தொடர்ந்து மறுத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது. (ற)

# தளர்வுகள் வரலாற்றுத் தவறுகளாகும்

## ஈரான் விடயம் குறித்து இஸ்ரேல் பிரதமர் கருத்து

ஜெருசலேம், ஒக்.16

ஈரானின் அணுத் திட்டங்கள் தொடர்பாகத் தளர்த்தப்படும் அழுத்தங்கள் வரலாற்று ரீதியான தவறுகளாக மாறும் என்று தெரிவித்துள்ளார் இஸ்ரேல்பிரதமர்பெஞ்சமின்நெதன்யாகு.

அணுத் திட்டங்கள் குறித்து ஈரானுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் இடையே ஜெனிவாவில் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"ஏனைய நாடுகள் எவ்வாறான நிலைப்பாடுகளை எடுத்தாலும், ஈரான் மீதான இஸ்ரேலின் அழுத்தங்கள் தொடர்ந்தும் பேணப்படும். தற்போதைய தருணத்தில் அது மிகவும் முக்கியமானது" என்றும் நெதன்யாகு மேலும் கூறியுள்ளார்.

அதேவேளை, ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுகளின் மூலம் திட்ட வரைபொன்றைப் பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் காணப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார் ஈரானிய வெளிவிவகார அமைச்சர்.

இந்தச் பேச்சுக்களில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பு நாடுகள் மற்றும் ஜேர்மனி என்பன கலந்து கொள்ளும் என்று கூறப்படுகின்றது. ஈரானைப் பிரதிநிதிப்படுத்தி அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் கலந்து கொள்ளவுள்ளார். (ற)

# ஆப்கனில் இனியுமா? விளைவுகள் விபரீதம்

## அமெரிக்கப் படைகளுக்கு தலிபான் தலைவர் எச்சரிக்கை

காபூல், ஒக்.16


2014 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் அமெரிக்கப் படைகள் ஆப்கனில் தங்கியிருப்பதற்கு திட்டமிடுவார்களேயானால் அவர்கள் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா ஓமர்.

தலிபான் இயக்கத்துக்கு எதிராகக் களமிறங்கிய நேட்டோ படையினர் தற்போது ஆப்கனில் நிலைகொண்டுள்ளனர். அவர்கள் 2014ஆம் ஆண்டு இறுதிக்குள் ஆப்கனில் இருந்து முற்றாக வெளியேறுவார்கள் என்று கூறப்பட்டு வந்தது.

தற்போது அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் ஹெரிக்கும், ஆப்கன் ஜனாதிபதி ஹமீத் ஹர்சாய்க்கும் இடையே இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்து 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் அமெரிக்கப்படைகள் ஆப்கனில் தங்கியிருக்கவும், இராணுவ முகாம்கள் இருக்கும் பகுதியைக் குத்தகைக்கு விடவும் உடன்பாடுகள் எட்டப்பட்டுள் என.

இந்த நிலையிலேயே முல்லா ஓமர் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"அமெரிக்க இராணுவத்துக்கு குத்தகைக்கு இடங்களை வழங்குவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதை ஆப்கன் நாடாளுமன்றம் அனுமதிக்கக் கூடாது. ஆப்கனில் அமெரிக்கப் படைகள் தொடர்ந்து நிலைகொள்ள முயற்சித்தால் கடும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். வெளிநாட்டுச் சூழ்ச்சிகளை தடுக்க ஆப்கன் மக்கள் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார் முல்லா ஓமர். (ற)



பிலிப்பைன்ஸின் மத்திய பகுதியில் நேற்று ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால் 20 பேர் உயிரிழந்துள்ளனர். 30க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். 7.2 ரிச்டர் அலகுகளாகப் பதிவான அந்த நிலநடுக்கத்தால் பல கட்டடங்கள் இடிந்து வீழ்ந்துள்ளன. மீட்புப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.

# தொடர்கிறது நிதிச் சிக்கல்

## சமரசப் பேச்சுக்கள் ஒத்திவைப்பு நிலைமை முன்னேற்றம் என்கிறார் ஒபாமா

நியூயோர்க், ஒக்.16

அமெரிக்காவில் வரவு செலவுத் திட்டம் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக நேற்று முன்தினம் வெள்ளை மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் செனட் சபை உறுப்பினர்கள் ஒரு தீர்வுக்கு வருவதற்கான கால அவகாசத்துக்காகவே இந்த கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அடுத்த கலந்துரையாடலுக்கான திகதி குறிக்கப்படவில்லை.

நிதிப் பிரச்சினை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதுஎன்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாளை வியாழக்கிழமைக்கு முன்னதாக தமது கொடுப்பனவுகளை சரி செய்வதற்காக அமரிக்கா 16.7 ரில்லியன் டொலரைத் தேடிக் கொள்ள வேண்டியிருக்கும் என்று அமெரிக்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, குறித்த பிரச்சினையால் மருத்துவ சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

# முஸ்லிம்களுக்கே 'அல்லா' சொந்தம்

## அறிவித்தது மலேசிய நீதிமன்றம்

கோலாலம்பூர், ஒக்.16

முஸ்லிம்கள் தவிர்ந்த ஏனைய மதத்தவர்கள் 'அல்லா' என்ற சொல்லை உபயோகிப்பதற்கு மலேஷிய உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

2009ஆம் ஆண்டு 'த ஹெரால்ட்' என்ற செய்தித்தாள் 'அல்லா' என்ற சொல்லை உபயோகிப்பதற்கு மலேசிய விசாரணை நீதிமன்றம் அனுமதி அளித்திருந்தது.

அதனை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்படிருந்த வழக்கிலேயே மலேசிய உயர்நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

அல்லா என்ற சொல் வேறு மதங்களில் இல்லாத நிலையில் இந்தப் பிரச்சினை தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தும் என்றும் நீதிமன்றம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)



பொலொனியம்-210 அதிக கதிரியக்கம் கொண்ட ஆபத்தான துகள்கள். இந்தத் துகள்களின் ஆயுள் காலம் சுமார் 4 மாதங்களே என்கின்றனர் துறைசார் நிபுணர்கள். அரபாத் உயிரிழந்து 8 ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில் இந்த ஆய்வு சாத்தியமானதா என்றும் அவர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

# அரபாத்தின் சாவுக்கு விஷமே காரணம்!

பலஸ்தீன முன்னாள் ஜனாதிபதி யசீர் அரபாத் இறுதியாக அணிந்திருந்த உடைகளில் விஷத்தின் தடங்கள் உள்ளன என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர் சுவிட்ஸர்லாந்து நிபுணர்கள்.

பஸ்தீனத்தின் விடுதலைக்காக 40 ஆண்டுகள் போராடியவர் அரபாத். 2004 ஆம் ஆண்டு அவரது உடல்நலம் குன்றியது. இஸ்ரேலியப் படைகள் பலஸ்தீனத்தைச் சுற்றி வளைத்திருந்த அந்தச் சந்தர்ப்பத்தில் விமானம் மூலம் சிகிச்சைகளுக்காகப் பரிஸ் கொண்டு செல்லப்பட்டார் அரபாத். அங்கு சிகிச்சை பெற்றுவந்த அரபாத் கோமா நிலைக்குச் சென்று 2004 ஆம் ஆண்டு நவம்பர் 11ஆம் திகதி உயிரிழந்தார்.

அப்போது அரபாத்தின் சாவில் சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தபோதும், கோமா நிலையில் இருந்ததைக் காரணம் காட்டி உடற்கூற்றுப் பரிசோதனைகள் எதுவும் இன்றி அவரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இந்தநிலையில், அரபாத் உயிரிழந்த வேளையில் அவரின் உடலில் மிகவும் வீரியமிக்க விஷமான பொலொனியம் காணப்பட்டது என்று கடந்த தாண்டு சுவிட்ஸர்லாந்து நிபுணர்கள் தகவல் வெளியிட்டிருந்தனர். அதையடுத்து அரபாத்தின் உடலை சோதனை செய்வதற்கு பலஸ்தீன நிர்வாகமும், அரபாத்தின் மனைவியும் சம்மதம் தெரிவித்திருந்தனர்.

அரபாத் உயிரிழக்கும் போது அணிந்திருந்த ஆடைகள், அவரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட 75 மாதிரிகள் என்பவற்றைத் துல்லியமாக ஆராய்ந்துள்ள சுவிட்ஸர்லாந்து அதிகாரிகள் தற்போது இறுதி அறிக்கையைத் தயாரித்துள்ளனர்.

"அரபாத்தின் உடலில் பொலொனியம் என்ற வீரியமிக்க விஷம் காணப்படுகின்றது. அவரின் உடையில் கதிர்வீச்சும் காணப்படுகின்றது. அவரது உயிரிழப்புக்கு இவையே காரணமாக அமைந்திருக்கும்" என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையால் அரபாத்தின் சாவு திட்டமிட்ட கொலை என்ற சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அரபாத்தின் உடலுக்குள் சிறிது சிறிதாக வீரியமிக்க பொலொனியம் சேர்க்கப்பட்டுள்ளது. அதனால் அவர் நோய்வாய்ப்பட்டு உயிரிழந்துள்ளார். வீரியமிக்க அந்த விஷம் கதிர்வீச்சு கொண்டது என்று கூறப்படுகின்றது. (ற)

# "விமானக் கதவு எங்கே?"

## நடுவானில் தேடியலைந்த விமானி

நியூயோர்க், ஒக்.16

நடுவானில் பறந்து கொண்டிருந்த விமானத்தின் கதவு திடீரெனக் காணாமற் போனதை அடுத்து கதவைத் தேடியலைந்துள்ளார் அந்த விமானத்தின் விமானி.

இந்த சுவாரஸ்யமான சம்பவம் அமெரிக்காவில் நடந்துள்ளது. கலிபோர்னியா மாகாணத்தில்ன் மொன்ட்ரி விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டது சிறிய ரக விமானம் ஒன்று. விமானம் பறந்துகொண்டிருந்தபோது திடீரென ஒரு சத்தம் கேட்டது. என்னவென்று பார்த்த விமானிக்கு அதிர்ச்சி காத்திருந்தது. விமானத்தின் கதவைக் காணவில்லை.

என்ன செய்வது என்று திகைத்த விமானி விமானத்தை அந்தப் பகுதியில் தாழ்வாகப் பறக்கச் செய்து கழன்று விழுந்த கதவைச் சல்லடை போட்டுச் சலித்தார். எனினும் அவரது கண்களுக்கு அந்தக் கதவு தென்படவே இல்லை.

வேறு வழியில்லாமல் விமானத்தை ஒருவாறு அருகில் இருந்த விமான நிலையம் ஒன்றில் தரையிறக்கிவிட்டு அதிகாரிகளுக்குத் தகவல் அளித்தார்.

கழன்று விழுந்த கதவு யார் தலையில் விழுந்ததோ என்று அதிகாரிகள் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தபோது அவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி ஒன்று கிடைத்தது. அந்தப் பகுதியில் உள்ள நட்சத்திர விடுதி ஒன்றின் மீது அந்தக்கதவுவிழுந்துள்ளது. அதனால் யாருக்கும் ஆபத்து எதுவும் ஏற்படவில்லை என்ற செய்திதான் அது. (ற)

# நைஜீரியாவில் மனித உரிமைகள் மீறப்படுகின்றன

## சர்வதேச மன்னிப்புச் சபை கவலை

நியூயோர்க், ஒக்.16

நைஜீரியாவில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கவலை வெளியிட்டுள்ளது.

ஆயுததாரிகளை ஒடுக்கும் இராணுவத்தின் ஒரு நடவடிக்கையாக இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன என்றும் மன்னிப்புச் சபை மேலும் கூறியுள்ளது.

"சிறைக்கூடத்தில் அளவுக்கு அதிகமாக தடுத்து வைக்கப்பட்டதால் ஏற்பட்ட மூச்சுத் திணறல் காரணமாக சிலர் உயிரிழந்துள்ளனர். ஏனையோர் பட்டினி மற்றும் சட்டத்திற்கு முரணான கொலைகள் என்பவை மூலம் உயிரிழந்துள்ளனர். இந்த உயிரிழப்புக்கள் குறித்த உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நைஜீரிய அரசு தொடர்ச்சியான மறுப்புகளையே வெளியிட்டு வருகின்றது. இந்தநிலையில் மன்னிப்புச் சபையின் அறிக்கை குறித்து அந்நாட்டு அரசு எதுவித கருத்துக்களையும் வெளியிடாமல் மௌனம் காக்கின்றது. (ற)

## பால் உணவு உற்பத்தி நிலையம் பூநகரியில் புதிய கட்டடத்தில்

### விரைவில் செயற்பட ஆரம்பிக்கும்


கிளிநொச்சி, ஒக். 16

கிளிநொச்சி பூநகரிப் பிரதேசத்தில் கால்நடைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பாலுணவுப் பொருள்கள் உற்பத்தி நிலையம் ஒன்று இருபது லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வேண்டுதலுக்கு ஏற்ப வாடியடிப் பகுதியில் திறக்கப்பட்டுள்ள இந்த நிலையம் பாலைக் கொள்வனவு செய்வதற்கும், பாலுணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற வகையில் ஐ.ஓ.எம். நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் இருபது லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தக்கட்டடம் வெகுவிரைவில் திறந்து வைக்கப்பட வுள்ளது.

இந்தக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டு செயற்பட ஆரம்பிக்கும்போது இங்குள்ள கால்நடைப் பண்ணையாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-6)



நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக கடமைகளை பொறுப்பேற்ற கல்வி, கலாசார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் தம்பிராசா குருகுலராஜாவுடன் அமைச்சின் செயலாளர்களும் உத்தியோகத்தர்களும் காணப்படுகின்றனர். (வ-21)

# நீதியான வழியில் செயற்பட்டதால் தகுந்த பலாபலன் கிடைத்தது

### குருகுலராஜாவுக்கு கல்வி அமைச்சின் செயலர் புகழாரம்

யாழ்ப்பாணம், ஒக்.16

எமது செயற்பாடுகள் நீதி யான தாகவும் நியாய மானதாகவும், சரியாகவும் அமைந்தால் தகுந்த பலாபலன்கள் வந்து சேரும். அதற்கு எடுத்துக்காட்டாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா திகழ்ந்து இன்று அமைச்சராகியுள்ளார் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

வடமாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரை வரவேற்று நேற்று முன்தினம் கல்வி அமைச்சின் அதிகாரிகள், மாகாணத் திணைக்கள அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், நலன் விரும்பிகள் வரவேற்பு நிகழ்வை நடத்தியிருந்தனர். அதில் பாராட்டுரை வழங்குகையிலேயே சத்தியசீலன் இவ்வாறு தெரி வித்தார்.

கடந்த காலங்களில் அர்ப்பணிப்புடன் நேர்மையாகவும், நிதானமாகவும் பரந்த நோக்குடனும் பணியாற்றியதாலேயே இன்று அவர் நல்ல நிலைக்கு வந்துள்ளார். அமைச்சராக வருவதற்கு முன்னர் அவர் சிறந்த கல்வி அதிகாரியாகப் பணியாற்றியவர். அதனால் தான் அவர் அமைச்சராவதற்கான சந்தர்ப்பத்தை இறை வன் வழங்கியுள்ளார்.- என்றார்.

நிகழ்வில் வாழ்த்துரை வழங் கிய வடமாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங் கோவன் தெரிவிக்கையில்:

அரசியல்வாதிகளுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பு முன்னர் இருக்கவில்லை. நாம் கல்விக் கொள்கைகளை சட்ட நடைமுறைக் கோவைகளை செயற்படுத்தி வந்தோம். அது மக்கள் நலன் சார்ந்ததாகவே இருந்தது.-என்றார்.

*அமைச்சராக வருவதற்கு முன்னர் அவர் சிறந்த கல்வி அதிகாரியாகப் பணியாற்றியவர். அதனால் தான் அவர் அமைச்சராவதற்கான சந்தர்ப்பத்தை இறைவன் வழங்கியுள்ளார்.*

நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செய லாளர் ப.விக்னேஸ்வரன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வராஜா, வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் விருந்தினர்கள் வாழ்த்துரை வழங்கினர். (வ-4)

## தனித்திருந்த முதியவரை தாக்கியோர் கைது

தென்மாட்சி, ஒக்.16

எழுதுமட்டுவாழ் ஒட்டுவெளிப் பகுதியில் தனித்திருந்த முதியரைத் தாக்கிய மூன்று பேரை கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரவு' வேளையில் தாக்குதலுக்கு இலக்கான முதியவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் மூவரைக் கைது செய்து நேற்று முன்தினம் நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

## சிறந்த சேவை 5 நூலகங்களுக்கு விருது

தென்மராட்சி, ஒக்.16

சாவகச்சேரி பிரதேச சபையின் ஐந்து நூலகங்கள் சிறந்த சேவைகளை வாசகர் களுக்கு வழங்கியமைக்காக விருதுகளுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

பிரதேச சபையின் சரசாலை, கைதடி, நாவற்குழி, வரணி, மிருசுவில் ஆகிய 5 நூலகங்களும் தெரிவு செய்யப் பட்டுள்ளன. விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு, தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினர் சிறப்பாக செயற்படும் நூலகங்களுக்கு வருடாந்தம் தேசிய வாசிப்பு மாத காலத்தில் விருதுகள் வழங்கிக் கௌரவிப்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## சாவகச்சேரி எல்லைக்குட்பட்ட வீதிகளுக்கு பெயர்ப்பலகை

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து வீதிகளுக்கும் பெயர்ப் பலகைகள் பொருத்தப்படவுள்ளன.

எஸ்-லோன் குழாய் உற்பத்தியாளர்களின் "இன்னுமொரு சேவை" என்னும் திட்டத்தின் கீழ் நிறுவனத்தினர் வீதிப் பெயர்ப்பலகைகளை நகரசபை அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த பெயர்ப் பலகைகள் வட்டார ரீதியாக விரைவில் நிறுவனத்தினரால் பொருத்தப் படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது. (வ-9)


**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

**வாடகைக்கு**

வெள்ளவத்தையில் படிக்கும் பெண் பிள்ளைகள் 4 பேருக்கு தங்க, சமையல் வசதியுடன் இடம் உண்டு.

தொடர்பு:077 869 5354 (32784)(3.4.6)

**வீடு வாடகைக்குண்டு**

35,மாரியம்மன் ஒழுங்கை, திருநெல்வேலியில் 3½ பரப்புக் காணியுடன் நான்கு அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு:078 336 6161 (32787)(3.5.6)

**விற்பனைக்கு**

சில மாதங்கள் மட்டும் பாவித்த ஹோட்டல் பொருள்கள் உடன் விற்பனைக்கு

தொடர்பு: 077 736 4949 (32789)(5.6.3)

**காணிகள் விற்பனைக்கு**

A9 வீதியில் இருந்து 500m இற்கு உட்பட்ட தூரத்தில் அரியாலை சித்தி விநாயகர் கோயிலுக்கு அண்மையிலும் மாம்பழம் சந்திக்கு அண்மையிலும் உள்ள காணிகள் 3 பரப்பு, 20பரப்பு,5 பரப்பு என்பன உடனடியாக விற்பனைக்கு உண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:075 871 2663
077 273 2645 (சி/32790)(5.6.3)

**சீட்டிழுப்பு முடிவுகள்**

கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் நலன்புரி சங்கத்தினால் 14.10.2013ஆம் திகதி நடத்தப்பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பின் முடிவுகள் பின்வருமாறு

முதலாம் பரிசு இலக்கம் 10159 2ஆம் பரிசு இலக்கம் 12675

3ஆம் பரிசு இலக்கம் 18586

ஆறுதல் பரிசுகள்

1) 14727 2) 11260 3) 17694 4) 11942 5) 13338
6) 14353 7) 13763 8) 18206 9) 12433 10) 10455

செயலாளர், ஊழியர் நலன்புரி சங்கம், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி. (F/12890)(5.6.3)

**Church of South India**
**JAFFNA DIOCESE**
(Inaugurated - 1947)
**AMERICAN CEYLON MISSION**
(Founded in 1816)

**Diocesan Festival and Children's Rally - 2013**

| | |
|---|---|
| Date | : 19.10.2013 (Saturday) |
| Worship Service and ordinations | : At 8.00 a.m (Cathedral, Vaddukoddai) |
| Children's Rally Competitions | : At 11.00 a.m. (Ottley Hall, Vaddukoddai) |
| Public Meeting and Cultural Programme | : At 3.00 p.m. (Jaffna College, Vaddukoddai) |
| Chief Guests | : Dr & Mrs. V.R. David. |

(சி/12893)(10,6)

**All are Cordially Invited**

The Rev. D.S.Solomon, Secretary, J.D.C.S.I.

**Soft View Computer Center**

கணினி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

102, Main Street, (A9) Jaffna. E.C Colin

T.P : 021 222 4885, 077 905 3545

(இரவு நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன)

**இணைய பக்க வடிவமைப்பு மற்றும் மேம்பாடு**

Web Programming
Web Animation
Web Design &Development
Java Programming
PHP & My SQL

பதிவுகள் ஆரம்பம்

Mega Special offer

Duration : 3 Months

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|
| 021 2225677 | 021 2270267 |
| கிளிநொச்சி | வவுனியா |
| 021 2283925 | 024 2226050 |

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வி சிறீபாஸ்கரன் வைஷ்ணவி 167 புள்ளிகளையும் பாடசாலை மட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுச் சித்தியடைந்தமையைப் பாராட்டியும் எதிர்காலத்தில் கல்வியிலும் சகல துறைகளிலும் மேலும் சித்திகளைப் பெற்று வளமாக வாழவும்.



Congratulation

வாழ்த்துவோர்:
சுவிஸ் பெரியப்பா,அக்கா
(சி.சுப்பிரமணியம்,பிரவீனா)

(32778)(5.6.3)

## தொடர்ந்து உறங்கும் மணிக்கூட்டு கோபுரம்



வவுனியா நகரின் மத்தியில் காணப்படும் மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டுள்ள கடிகாரம் அடிக்கடி இயங்க மறுப்பதால் வவுனியா நகருக்குள் வருகை தரும் பயணிகள், அரச, தனியார் ஊழியர்கள் எனப் பலரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

வவுனியா நகருக்கு அழகு சேர்ப்பதாக இந்த மணிக்கூட்டுக் கோபுரம் அமைந்துள்ளது. இங்கு வருகை தரும் அனைவரும் ஒருமுறை இதனை அண்ணார்ந்து பார்ப்பது வழமையான செயற்பாடாகும். அரச ஊழியர்கள் வேலைக்குச் செல்லும் போதும் திரும்பி வரும் போதும் இதனைப் பார்த்தே நேரத்தைச் சரி செய்து கொள்வர். மேலும் பாடசாலை மாணவர்கள், பஸ் சாரதிகள், வர்த்தகர்கள், பயணிகள் எனப் பலரும் இந்த கோபுரத்தில் உள்ள மணிக்கூட்டைப் பார்வையிட்டுச் செல்வது வழமையாகும்.

ஆனால் இந்த ஆண்டு தொடக்கம் கடிகாரம் நேரம் பிந்தி ஓடுவதும், இயங்காது நிற்பதும் வாடிக்கையாக மாறிவிட்டதால் பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்குப் பொறுப்பானவர்கள் இதனை உரிய வகையில் சீர்செய்து மக்கள் பயன்படும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

# சான்றிதழ்களை வழங்கும் செயற்பாடு முல்லைத்தீவில் கணினி மயமானது

### கரைதுறைப்பற்றில் வெள்ளியன்று ஆரம்பித்து வைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.16

பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களை கணினி மயப்படுத்தப்பட்ட நடைமுறையினூடாக வழங்கும் செயற்பாடு முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலேயே இந்த நடவடிக்கைகள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்தச் சேவையூடாக மாவட்டத்தின் எந்தப் பகுதியில் பிறந்த எந்தவொரு நபரும், தான் வசிக்கும் பகுதிக்கு அருகிலுள்ள பிரதேச செயலகத்துக்குச் சென்று குறித்த சான்றிதழ்களின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

பதியப்படாத பதிவுகளைப் பதிவு செய்வதற்கும் ஏற்கெனவே பதிவு செய்யப்பட்ட பதிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளவும் இதனால் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர, மேலதிகப் பதிவாளர் நாயகம் என்.சதாசிவஐயர், தகவல் தொழில்நுட்ப உதவிப் பதிவாளர் டபிள்யூ.பி.சந்திரிகம மற்றும் கரைதுறைப்பற்று உதவிப்



பிரதேச செயலர் எஸ்.குருபரன் முல்லை மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-5)



உலக கை கழுவுதல் தின நிகழ்வு முல்லைத்தீவு கரிப்பட்டை முறிப்பு அ.த.க.பாடசாலையில் நேற்றையதினம் இடம்பெற்றது. துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் முல்லைத்தீவு சுகாதார வைத்திய அதிகாரி ஜெயகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விழிப்புணர்வு உரையை ஆற்றினார். (க-4)

## மாங்குளம் பிரதேசத்தில் அதிகரித்த அளவிலான திருட்டுச் சம்பவங்கள்

கிளிநொச்சி, ஒக்.16

முல்லைத்தீவு மாவட்டம் மாங்குளம் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அண்மைய நாள்களாக வீட்டுக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர் இறைக்கும் இயந்திரங்கள் களவாடப் பட்டு வருகின்றன. இதுவரை குறித்த பகுதியில் 12 நீர் இறைக்கும் இயந்திரங்கள் களவாடப்பட்டுள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் 24 மணி நேரமும் மக்கள் நடமாட்டம் அதிக முள்ள இந்தப் பகுதியில் இரவு வேளை வர்த்தக நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருள்கள் திருடிச் செல்லப்பட்டுள்ளன.

இதைப் போன்று பகல் வேளைகளிலும் திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இவ்வாறு இடம்பெற்று வரும் திருட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவ தற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6)

# வவுனியா கிராமப் பகுதிகளில் திருட்டு சம்பவம் அதிகரிப்பு

### கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, ஒக். 16

வவுனியாவில் சிவில் பாதுகாப்புக் குழுக்கள் சீராக இயங்காததால் இரவுவேளைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியாவிலுள்ள வேப்பங் குளம், தவ சிகுளம், தாண்டிக்குளம், வீரபுரம், ஓமந்தை, கூமாங்குளம், நெளுக்குளம், சோயா ஒழுங்கை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே தமது பகுதிகளில் திருடர்களின் அட்டகாசம் தொடர்வதாகத் தெரி விக்கின்றனர்.

இந்தப் பகுதிகளில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் சிவில்பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டன. அத்துடன் கிராமங்களில் நடைபெறும் பிரச்சினைகள் தொடர்பில் தகவலைப் பெறுவதற்காகவும் முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்கப் பட்டிருந்தன.

அவ்வப்போது முறைப்பாடுகள் சிவில் பாதுகாப்பு குழுக்களுக்குத் தெரியப் படுத்தப்பட்டதால் சிறு சிறு குற்றச் செயல்கள் தடுக்கப் பட்டு வந்தன.

எனினும் தற்போது சிவில்குழுக்கள் சீராகக் கடமைகளைச் செய்யாததால் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இதனால் விசனம் அடைந்துள்ள பொதுமக்கள் சிவில்பாதுகாப்புக் குழுக்கள் மீதுப் பொலிஸார் மீதும் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

பொலிஸ் நிலையத்துக்கு அண்மையில் உள்ள கடை அலுவலகங்கள் பாடசாலை வீடுகள் என்பவற்றில் திருட்டு என திருட்டுச் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெறுவதாகவும் இவற்றைத் தடுக்க பொலிஸார் பொதுமக்களுடன் இணைந்து செயற்படவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர், (ஜ-402)

## மழை காலத்துக்கு முன்னதாக கால்வாய்களைப் புனரமைக்கவும்

### வவுனியா மக்கள் கோரிக்கை

மழை காலத்துக்கு முன்னர் கால்வாய்களைப் புனரமைக்குமாறு வவுனியா நகர மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இங்குள்ள பிரதான வீதிகளான கண்டிவீதி, ஏ-9 வீதி, மன்னார் வீதி, ஹொரப்பத்தான வீதி உட்பட கோவில்குளம், தவசிகுளம், கோமரசங்குளம், குட்செட் வீதி, தோணிக்கல், பூந்தோட்டம், கரப்பனிச்சங்குளம், காத்தார் சின்னக்குளம், சேமமடு, அரசங்குளம், வேப்பங்குளம், பண்டாரிகுளம், பாலாமைக்கல், பம்பைமடு, இயங்கராவூர், ஆசிக்குளம், உக்கிலாம்குளம், கல்மடு, மடுக்கந்த, ரம்பைக்குளம், கூமாங்குளம், இராசேந்திரம்குளம் பகுதிகளில் சீரான கால்வாய்கள் அமைக்கப் படாததால் மழைகாலங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து விடுவதுடன் வீதிகளை மூடி வெள்ளம் நிரம்பி வழிவதால் பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள் உட்படப் பலரும் பல்வேறு இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வயல்களை மூடி வெள்ளம் பாய்வதால் பயிர் அழிவுகளும் ஏற்பட்டு வருகின்றன. மேலும் மழை வெள்ளம் பாய்ந்தோடுவதால் வீதிகளின் இருமருங்கிலும் அரிப்புக்களும் ஏற்படுகின்றன.

**கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைவதால் தண்ணீருக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டு வருகின்றது.**

இதனால் வாகனப் போக்குவரத்துகளுக்கு இடையூறு ஏற்படுகின்றது. மேலும் குளங்களுக்கு நீர் உரிய வகையில் சென்றடையாமையால் கோடை காலத்தில் வறட்சி ஏற்பட்டு விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர். மேலும் கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைவதால் தண்ணீருக்குத் தட்டுப்பாடும் ஏற்பட்டு வருகின்றது. மேலும் மழைகாலங்களில் நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்புகளின் பெருக்கம் காரணமாக பாதிப்புக்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் வவுனியாவில் நீரைச் சேகரிக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை கால்வாய்கள் புனரமைக்கப்படாமை பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-402)

# வீடுகளை எரியூட்டும் விசமிகள்

கிளிநொச்சி, ஒக்.16

கிளிநொச்சி கோணாவில் பகுதியில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டுள்ள குடும்பங்களின் வீடு களை இனந்தெரியாத நபர்கள் எரியூட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கோணாவில் புதிய குடியிருப்புப் பகுதியில் கசிப்பு உற்பத்தி போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் குடும்பங்களின் வீடுகளே இனந்தெரியாத நபர்களால் எரிக்கப்படுகின்றன.

கடந்த ஒகஸ்ட் மாதம் இந்தப் பகுதியில் இரு குழந்தைகளுடன் வசித்து வந்த இளம் பெண் ஒருவரின் வீடு எரியூட்டப்பட்டது.

அதேபோல கடந்த வியாழக்கிழமை இரவும் மூன்று பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த பெண் ஒருவரின் வீடு பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப்பட்டுள்ளது. இதனால் வீட்டு உடமைகள் முற்றாக எரிந்து நாசமாகின.

இருந்த போதும் வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக எவ்வித ஆபத்துக்களும் இன்றி உயிர் தப்பினர் என்று கூறப்பட்டது. (ஜ-6.400)

# பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துங்கள்

## கல்முனை விகாராதிபதி கோரிக்கை

அம்பாறை,ஒக்.16
கல்முனைப் பிரதேச தமிழ் மக்களின் நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகின்ற கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தை சகல அதிகாரங்களும் கொண்ட முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கல்முனை சுபத்திராராமய விகாராதிபதி ரண்முத்துகல சங்கரத்னதேரர் தெரிவித்தார்.

கல்முனை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற சரஸ்வதி பூசை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தைச் சகல அதிகாரங்களும் கொண்ட பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதன் மூலமே இந்தப் பிரதேசத்தில் இன ஒற்றுமையை மேலோங்கச் செய்ய முடியும். இந்த நாட்டில் வாழும் சகல பொதுமக்களும் மன மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும்.

பொலிஸார் இன.மத.குல வேறுபாடுகள் இன்றி சேவையாற்ற வேண்டும்.

சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் மக்களுக்குச் சிறந்த சேவையாற்றவும் முன்வரும் அரசியல்வாதிகளுடன் இணைந்து பணியாற்ற நான் என்றும் தயாராகவுள்ளேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில், எனது உதவி, ஒத்தாசை எப்போதும் அவர்களுக்கு கிடைக்கும்.

அதேபோன்று தமிழ்த் தேசிக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் எமது விகாரைக்கும் உதவ முன்வர வேண்டும்- என்றார்.(ச-104)

# தமிழர் இருப்பைத் தக்கவைக்க நிலத்தை பாதுகாக்க வேண்டும்

## அரிய நேத்திரன் எம்.பி.தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.16
தமிழ் மக்களின் நிலம் பாதுகாக்கப்பட்டால்தான் எமது இருப்பும் நாட்டில் தக்கவைக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு, பண்டாரியாவெளி அறிவாலயம் கல்வி நிலையத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்களின் நிலம் பாதுகாக்கப்பட்டால்தான் எமது இருப்பும் நாட்டில் தக்கவைக்கப்படும். இதற்கு தமிழ் மக்கள் தங்களின் அரசியல் ரீதி யான பலத்தை அதிகரிக்க வேண்டும். தமிழ் மக்களின் அரசியல் பலம் அல்லது அரசியல் சக்தி என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் இருப்பைக் குறிக்கின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள் தமிழ் உணர்வு உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

கடந்த பல தசாப்த காலமாக பல்லாயிரக்கணக்கான உயிர்களையும் உடைமைகளையும் நிலங்களையும் தொடர்ந்து இழந்து கொண்டே வந்த நாம், எமது உணர்வுகளை மட்டும் இழக்கவில்லை என்பதனை கடந்த வட மாகாணசபைத் தேர்தலில் நிரூபித்திருக்கின்றோம்.

தமிழ் மக்கள் கல்வியில் முன்னேற வேண்டும். அதற்கான கட்டாயத் தேவை தற்போது உணரப்பட்டுள்ளது.

அனைத்து மாணவர்களும் கலைத்துறையை மட்டும் தெரிவு செய்யாமல் விஞ்ஞான மற்றும் கணிதத் துறைகளைத் தெரிவு செய்து எமக்காக உருவாக்கப்பட்ட வளங்களை நாமே பயன்படுத்தி முன்னேற வேண்டும்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகப்பெற்றோர்கள்ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்த வேண்டும்.

தமது பிள்ளை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றுடன் சித்தியடைய வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு பெற்றோரும் இரவு பகலாக பெரிதும் கஷ்டப்படுவதைக் காண்கின்றோம். ஆனால் பெற்றோர்களின் அக்கறை தொடர்ந்து இருப்பதில்லை. -என்றார். (ச)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற அட்டப்பள்ளம் சிங்காரபுர மாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த தீ மிதிப்பு விழா நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. இதில் பக்தர்கள் ஆலய முன்றலில் தீ மிதிப்பில் ஈடுபடுகின்றனர்.

# நிகழ்வுகளுக்கு அழைப்பில்லை

## மாகாணசபை உறுப்பினரின் ஆதரவாளர்கள் விசனம்

மட்டக்களப்பு, ஒக்.16
அக்கரைப்பற்றில் நடைபெறுகின்ற பல நிகழ்வுகளுக்கு தமது பிரதேச மாகாண சபை உறுப்பினர் அழைக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருவதாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவத்தின் ஆதரவாளர்கள் கூறி வருகின்றனர்.

கடந்தவாரம் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் அக்கரைப்பற்று பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய இலக்கிய விழா அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் பிரதேச செயலர் எம்.வை.சலீம் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை அமைச்சர்களான விமல வீர திசாநாயக்க, எம்.எஸ்.உதுமாலெவ்வை ஆகியோர் கலந்து கொண்டனர். ஆனால் இந்த விழாவுக்கு அதே ஊரைச் சேர்ந்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இது கவலைக்குரிய விடயம் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலர் சலீம் மற்றும் அம்பாறை மாவட்ட கலாசரர உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக் ஆகியோர் ஒரு தலைப்பட்சமான அரசியல் வேலைகளைச் செய்து தாம் விரும்புகின்றவர்களையே நிகழ்வுக்கு அழைத்து வந்து அரசியல் செய்கின்றனர். கிழக்கு மாகாண சபையில் இருக்கின்ற இரு அமைச்சர்கள் பொம்மை போல் செயற்பட்டு வருவதனால் இப்படியான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என்றும் அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

# 54 வருட வரலாற்றில் முதல் தடவையாக சித்தி

மூதூர், ஒக். 16
திருகோணமலை புடவைக் கட்டு முஸ்லிம் வித்தியாலய மாணவன் எஸ்.எம். தாலிப் 165 புள்ளிகளைப் பெற்று இந்த முறை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இந்தப் பாடசாலையின் 54 வருட வரலாற்றில் புலமைப் பரீட்சையில் இங்கு கல்வி கற்கும் மாணவரொருவர் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்திருப்பது இதுவே முதற் தடவையாகும்.

அதிபர், ஆசிரியர்களின் வழி காட்டல் காரணமாக இந்த மாணவன் சித்தியடைந்தமைக்கு பெற்றோர் மற்றும் சமூக அமைப்புக்கள் பாராட்டுக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-40)

பாடசாலைப் பிரச்சினையைத் தீர்க்கக்கோரி

# கல்வி அலுவலகத்தின்முன் திரண்டனர் பெற்றோர்கள்

வாழைச்சேனை, செம்மண்ணோடை அல்ஹம்றா வித்தியாலயத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைத் தீர்க்குமாறு கோரி நேற்று திங்கட்கிழமை மக்கள் மட்டக்களப்பு மத்தி கல்வி அலுவலகத்துக்கு முன்னால் மக்கள் ஒன்று திரண்டனர்.



அல்ஹம்றா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவரது செயற்பாடுகளால் சில நாள்களாக அங்கு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

பெற்றோர் மற்றும் பள்ளிவாசல் சம்மேளனம், பாடசாலை அபிவிருத்திச் சபை, கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களே இவ்வாறு மட்டக்களப்பு மத்தி கல்வி அலுவலகத்துக்கு முன்னால் திரண்டு கல்விப் பணிப்பாளரிடம் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

கல்வி அலுவலகத்துக்கு முன்னால் மக்கள் திரண்டுள்ளனர் என்று பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன கொடகும்பர, பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சி.ஆர். பீரிஸ் மற்றும் படையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அல்ஹம்றா வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவரது செயற்பாடுகளால் சில நாள்களாக அங்கு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது என்று மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்துக்கு வந்திருந்த பெற்றோர் முறைப்பாடு செய்தனர்.

இந்த விடயம் குறித்து ஏற்கனவே பலமுறை அறிவித்தும் கல்வி நிர்வாகம் அதில் அக்கறை எடுக்கவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த முரண்பாடு குறித்து உடனடியாக குறித்த பாடசாலைக்குச் சென்று சகல தரப்பினரையும் அழைத்து தீர்வு காணப்படும் என்று கல்விப் பணிப்பாளர் ஏ.எம். அஹமட் லெப்பை கூறினார்.

அதனையடுத்து பெற்றோர் மற்றும் பள்ளிவாசல் சம்மேளனம், பாடசாலை அபிவிருத்திச் சபை, கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் தமது எதிர்ப்பைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றனர். (ச)

# தங்கவேலாயுதபுரம் மக்களை மீள்குடியேற்றாது இழுத்தடிப்பு

## காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் குற்றச்சாட்டு

போரால் பாதிக்கப்பட்ட பழம் பெரும் தமிழ்க் கிராமமான அம்பாறை, தங்கவேலாயுதபுரம் கிராம மக்களை முறையாக மீள்குடியேற்றம் செய்யாது அரசு இழுத்தடிப்புச் செய்து வருகின்றது. இந்த மக்களின் அவலம் பெரும் கவலையளிப்பதாக உள்ளது. இவ்வாறு காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் செல்லையா இராசையா கவலை வெளியிட்டார்.



தங்கவேலாயுதபுரத்தைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு சைக்கிள் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்ச்சமூகம் நாட்டில் இழக்க முடியாத இழப்புகளையெல்லாம் கண்டு தவித்துவரும் நிலையில், எம் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாத விசமத்தனமான செயற்பாடுகளை அரசு முன்னெடுத்து வருகின்றது.

அம்பாறை, திருக்கோயில் பிரதேசத்திலுள்ள பழம் பெரும் தமிழ்க் கிராமமான தங்கவேலாயுதபுரம் கிராமம் இன்று சின்னா பின்னமான நிலையில் உருக் குலைந்து காணப்படுவது வேதனையைத் தருகின்றது. போரால் பாதிக்கப்பட்ட இந்தக் கிராம மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாது அலைக்கழிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தக் கிராம மக்களின் மீள்குடியேற்றத்தில் அரசு அசமந்தம் காட்டுவது பல்வேறு சந்தேகங்க ளைத் தோற்றுவித்துள்ளது.- என்றார். (ச-30)

# அரசுடன் இணைவதால் மக்களுக்கு பயனில்லை

## அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு



எதிர்க்கட்சியின் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டாலும் நாட்டு மக்களுக்கு எவ்வித பயனும் கிட்டப் போவதில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பெலேபொல பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளும் எதிர்க்கட்சியினருக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இருக்காது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களின் அனுபவங்கள் கூட பயன்படுத்தப்படுவதில்லை.

மாறாக அவர்கள் தலையாட்டி பொம்மைகளாகச் செயற்படுகின்றனர். அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் ஊழல் மோசடிகள் குறித்த ஆவணங்களைக் கைப்பற்றி அவர்களை அச்சுறுத்தி அரசியல் காய் நகர்த்தலில் அரசு ஈடுபடுகின்றது. அரசு என்ன பிழை செய்தாலும் கட்சிக்குள் எதிர்ப்புக் கிளம்பாது.

சர்வதேச சமூகத்துக்கும் எதிர்க் கட்சிக்கும் எதிராக கருத்துக்களை வெளியிடவே ஆட்சியாளர்கள் அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின் னர் நாட்டு மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கக் நேரிட்டுள்ளது என்றும் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# 'எயிட்ஸ்' நோயாளர்கள் இலங்கையில் அதிகரிப்பு



நாட்டில் எயிட்ஸ் நோய்த் தொற்று பரவும் சம்பவங்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணிகளை கண்டறிய விசேட குழுவொன்றை நியமிக்க சுகாதார அமைச் சின் செயலாளர் டொக்டர் நிஹால் ஜயதிலக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தல் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பனவற்றை அறியத்தருமாறு இந்தக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

தாயிடமிருந்து பிள்ளைக்கு எயிட்ஸ் நோய்த் தொற்று பரவக்கூடிய சாத்தியம் அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே கர்ப்பிணிப் பெண்களுக்கான இரத்த பரிசோதனைகளை நெறிப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# விசா இன்றி தங்கியிருந்த 49 வெளிநாட்டவர் கைது

நுரைச்சோலையை அண்டிய பிர தேசத்தில் விசா இன்றி தங்கியிருந்த 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 46 பேர் இந்தியர்கள் எனவும், மூன்று பேர் சீனர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விசா காலாவதியாதல், விசா இன்றி நாட்டுக்குள் பிரவேசித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளினால் குறித்த வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கப்பலிலிருந்து நுரைச்சோலைக்கு அனல் கரி கொண்டுசெல்லும் படகுகளில் பணியாற்றிய 24 இந்தியர்களும் இவர்களில் உள்ளடங்குகின்றனர். கைது செய்யப்பட்டவர்களில் பலர் மிக நீண்ட காலமாக இலங்கையில் சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



நாடாளுமன்றில் இடம்பெற்ற நவராத்திரி விழாவில் சபா நாயகர் சமல் ராஜபக்ஷ கலந்துகொண்டார். சபாநாயகர்களுடன் கிளிநொச்சி அம்பாள்குளம் விவேகானந்தா வித்தியாலய மாணவிகளும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைநெறி நிலைய மாணவிகளும்

# புதையல் தோண்டிய மூவர் மடக்கிப்பிடிப்பு

இரு வேறு இடங்களில் புதையல் தோண்டிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நொச்சியாகாமம், நூகட வெவபிர தேசத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுமுன் தினம் இவர்கள் இருவரும் பிரதேசத்திலுள்ள சிறிய கற்குகை ஒன்றை குடைந்து புதையல் அகழ்வில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களிடமிருந்து அலவாங்கு, மண்வெட்டி, சவள்



உள்ளிட்ட 15 உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதேவேளை, பொலநறுவை புலஸ்திகம பிரதேசத்தில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இந்நபர் பொலநறுவ குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலநறுவையைச் சேர்ந்த 46 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஆஸி. நாடுகடத்திய 40 பேர் புலனாய்வு பிரிவின் தடுப்பில்

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத மாகச் சென்று கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் திருப்பியனுப்பப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 40 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து நேற்றுமுன் தினம் திங்கட் கிழமை காலை இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் என கட்டுநாயக்க பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் முல் லைத்தீவு கடலிலிருந்து கடந்த 2007 ஆம் ஆண்டு ஆஸ்ரேலியாவுக்கு படகு மூலம் அரசியல் தஞ்சம் கோரி சென்றுள்ளனர். இவர்கள் கிறிஸ்மஸ் தீவில் தங்கவைக்கப்பட்டு ஆஸ்திரேலியாவில் இருந்து விமானமூலம் ஞாயிற்றுக்கிழமை இரவு இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத் தீவைச் சேர்ந்த 40 பேரே இவ்வாறு திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்றுமுன்தினம் காலை பண்டார நாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்த போதே கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இவர்களில் 12 சிறுவர்கள், 25 பெண்கள் உட்பட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 38 பேரும், முல்லைத்தீவைச் சேர்ந்த 2 பேருமாக 40 பேர் அடங் குகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தலா 20 இலட்சம் ரூபா செலுத்தி படகு மூலம் சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் சென்றடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

திருப்பியனுப்பப்பட்டவர்களை விமானநிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணை களுக்காக அவர்களை குற்றப்புல னாய்வு பிரிவினரிடம் (சி.ஐ.டி) ஒப்படைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரி வித்தனர்.

விசாரணைகளின் நிறைவில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆள்கடத்தலைத் தடுக்க கடற்படையினர் ரோந்து

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோத மான முறையில் ஆட்கடத்தலில் ஈடுபடுவோரைத் தடுப்பதற்கான விசேட திட்டமொன்றை கடற்படை ஆரம்பித்துள்ளது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பு முழுவதையும் கண்காணிக்கும் வகையிலான படகு ரோந்து சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என கடற்படை ஊடகப்பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுல சூரிய தெரிவித்துள்ளார்.

மீனவப் படகுகளின் உதவியுடன் ஆஸ்திரேலியாவிற்கு சட்டவிரோத ஆட் கடத்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என வெளியான தகவல்களை அடுத்தே இந்தத் திட்டம் முன்னெடுக்கப் படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு முதல் இது வரையான காலப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முயற்சித்த சுமார் நான்காயிரத்துக்கும் அதிகமானோர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்றும் கடற்படை ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்த ஆட் கடத்தலு டன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிலர் குற்றப் புல னாய்வு பிரிவினரால் அண்மையில் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது.

# ரயில் கட்டணங்கள் விரைவில் உயரும்

ரயில் கட்டணங்களை அதிகரிப்பது தொடர்பான இறுதித் தீர்மானங்களை அடுத்த சில வாரங்களில் ரயில்வே திணைக்களம் எடுக்கவுள்ளது என ரயில்வே திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

200 கிலோ மீற்றருக்கும் கூடுதலான ரயில் சேவைக்கான கட்டணங்கள் மட்டுமே அதிகரிக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. தூர ரயில் சேவைக் கட்டணங்களை 80 ரூபாவாக அதிகரிப்பது தொடர்பாக ஆராயப்படு கிறது என்றும் தெரியவருகிறது.

பருவகால சீட்டுக் கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது எனவும், தூர ரயில் சேவை மற்றும் பஸ் சேவை கட்டணங்களுக்கிடையே பாரிய வித்தியாசம் உள்ளதென வும் ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் பஸ் கட்டணங்களை 7 சதவீதத்தால் அதிகரிப்பது தொடர்பாக எட்டப்பட்ட உடன்படிக்கைகளைத் தொடர்ந்தே ரயில் கட்டண அதிகரிப்புப்பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

# போரின்போது பிரிட்டனும் இலங்கைக்கு உதவியது

## அந்தளநாட்டு ஊடகம் தெரிவிப்பு

இறுதிக்கட்டப் போரின் போது இலங்கை அரசுக்கு பிரிட்டன் உதவிகளை வழங்கியது என அந்நாட்டு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு இறுதிக் கட்ட போரின் போது வட அயர்லாந்து பொலிஸ் சேவையைச் சேர்ந்த இரண்டு முக்கிய அதிகாரிகள் இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்கினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை அரச படையினருக்குப் பிரிட்டன் இவ்வாறு ஒத்து ழைப்பு வழங்கியதாகக் குறிப்பிடப்படுகிறது.

இரும்புப் பெண் என அடையாளப் படுத்தப்பட்ட முன்னாள் பிரதமர் மார்கிரட் தச்சர் காலம் முதலே பிரிட்டன் பொலிஸார் இலங்கைக்கு உதவிகளை வழங்கியுள்ளனர். பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் அவர்கள் வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிக்கட்டப் போரின் போதும் இலங்கைப் படையினருக்கு பிரிட்டன் அதிகாரிகள் பயிற்சி அளித்துள்ளனர். 2007 ஆம் ஆண்டு முதல் சுமார் 3,500 இலங்கைப் பொலிஸாருக்கு பிரிட்டன் பயிற்சி வழங்கியுள்ளது. வட அயர்லாந்து பொலிஸ் சேவை உத்தியோகத்தர்களினால் வெளியிடப்பட்ட இரகசியத் தகவல்களின் மூலம் இந்த விடயங்கள் அம்பலமாகியுள்ளன என குறித்த பிரிட்டன் ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சொல்வதைச் செய்யும் கபடமற்ற நிலை அனைத்துலகத்துக்கு எப்போது வரும்....?

மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசாங்கம் மறுத்து வருவது பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கும்.

இலங்கையில் விஸ்வரூபம் எடுத்து வரும் மனித உரிமைகள் விவகாரத்தை அந்த நாட்டு அரசாங்கம் உரத்த தொனியில், அடியோடு மறுத்து வருகிறது. அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் குறித்து குரல் எழுப்பி வருவோரின் மனோதிடத்தை, இப்போது உள்ளதை விடவும் பல மடங்கு பலமுறச் செய்கிறது.

இவ்வாறு காத்திரமாகவும், கனதியாகவும் கருத்து வெளியிட்டிருக்கிறார் இலங்கையில் போர் நடைபெற்ற காலத்தை அண்டிய வேளையில் நோர்வே நாட்டின் சமாதானத் தூதுவராகச் செயற்பட்டவர்களில் ஒருவரான எரிக் சொல்ஹெய்ம்.

வடக்கு, கிழக்கில் நடைபெற்ற போரின்போது, பொது மக்கள்-சிவிலியன்கள்-எவரும் பாதிக்கப்படாத வகையிலேயே அரசாங்கப் படையினர் செயற்பட்டனர் என்றும், ஆயினும் ஆங்காங்கே சிற்சில சம்பவங்கள் நடந்திருக்கலாம் என்றும் ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அதிலும் மிகக் குறிப்பாக, இலங்கை அரசின் இலங்கை அரசின் இறுதிப் போரின் போது ஐ.நா.வின் செயற்பாடு தோற்றுப்போனமை, அமைப்பின் சரித்திரத்தில் முன்னர் எப்போதும் நடைபெறாத ஒன்று எனப் பான்கீ.மூன் ஒப்புக் கொண்டிருந்தமையும்பதிவுசெய்யப்பட வேண்டியஒன்றாகும்.

அது குறித்து "கொழும்பு கசெற்" ஊடகத்தின் பிரதிநிதி, எரிக் சொல்ஹெய்மிடம் கருத்துக் கேட்டிருந்தார். அதன்போதே அவர், இலங்கை அரசின் போக்கு, இது விவகாரத்தில் அக்கறை உள்ள தரப்புகளின் அரசுக்கு எதிரான செயற்பாடுகளை உச்சிவரை உயர்த்திவிடும் என்று செப்பி உள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிப் பகுதியின் போது, ஐக்கிய நாடுகள் சபை தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறி விட்டதாக ஒப்புக்கொண்டு, மன்னிப்புக் கேட்கும் பாங்கில் செயலாளர் நாயகம் பான்கீ.மூன் தெரிவித்திருந்ததையும் சொல்ஹெய்ம் பொருத்தமாகச் சுட்டிக் காட்டி உள்ளார்.

அத்தோடு அவர் நிறுத்தவில்லை. ஜனநாயகத்தை நேசிக்கும் அனைவரும், இலங்கை வாழ் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் உரிமைகள் அவர்களுக்குக் கிடைக்கவும், அந்த நாட்டில் ஜனநாயகத்தை மீள்விக்கவும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அனைத்துலக நாடுகளுக்கு அறைகூவல்- அழைப்பு-விடுத்துள்ளார் அவர்.

இலங்கை நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டுமெனில், உண்மையான-அர்த்தபுஷ்டியுள்ள-ஜனநாயக ஆட்சி தோன்ற வேண்டுமெனில், அவரது கருத்து உணர்வு ரீதியாக இங்குள்ள ஆட்சியாளர்களால், கறை எதுவும் பூசப்படாமல் உள்வாங்கப்பட வேண்டும்.

அதற்கான காலம் இப்போது கனிந்துள்ளதாக சொல்ஹெய்ம் கருதினாலும் அது எங்கிருந்து, எந்த வழியில், எந்த வகையில் வரும் என்பதற்கான சிறிய சமிக்ஞைதானும் இல்லை என்பதே உண்மையும் யதார்த்தமும் ஆகும்.

இந்த நாட்டில் நடைபெற்ற போரின்போது, அப்பாவித் தமிழ் மக்களை-பல்லாயிரக் கணக்கான அவர்களின் உயிர்களை-காப்பாற்றுவதற்கான வக்கற்ற நிலையில் ஐக்கிய நாடுகள் சபையும், அதன் பொறுப்புள்ள மேல் நிலை அதிகாரிகளும், அரசாங்கத் தரப்பினரின் மாய்மாலங்களில் மசுங்கி நசிந்து போனமை, இப்போது பழங்கதை ஆகிவிட்டது.

ஆயுததாரிகளைக் களைவதாகப் பிரசித்தப்படுத்திக் கொண்டு, அப்பாவிப் பொதுமக்களை, வயதான தனது சொந்தப் பிரஜைகளை, சின்னஞ்சிறுசுகளை, கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தி அரச இயந்திரம் கொன்றொழித்தமை மறக்க வைக்க முடியாத மனிதக் கொடுமை என்பது இப்போது அனைத்துலக இரகசியம் எனின் தப்பல்லவே...

இது குறித்து உலக அரங்கான ஐக்கிய நாடுகள் சபை கழிவிரக்கம் கொள்வதால் ஆகப் போவது எதுவுமில்லை. இலங்கைக்கு இவ்வாறு ஒரு "வரலாறு" இருந்தது என்ற பதிவு மட்டும் தான் மிஞ்சும். அந்த வரலாற்றில் அயல் நாடான இந்திய அரசுக்கும், அனைத்துலகப் பொலிஸ்காரனான அமெரிக்காவுக்கும், எள்ளளவு பங்குதானும் இல்லை என்று அவை நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு செப்ப முடியாத "பரிதாப" நிலைமை வேறு.

தம்மீது விழுந்துள்ள கறுப்பு மையை உராஞ்சிக் கழுவுவதற்கு இயலாத கந்தறு நிலையில் அனைத்துலகம் இருந்தாலும்-

தான் சேர்ந்து இயற்றிய தவறுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டிய தவிர்க்க முடியாத கடமை ஒன்று உண்டு என்பதனை அது மறந்து விடலாகாது.

உள்ளதைச் சொல்வேன், சொன்னதைச் செய்வேன்; உள்ளத்தில் உள்ளதை வார்த்தையில் மறைக்கும் கபடம் தெரியாது-என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகளை காலத்தின் தேவை அறிந்து கவனத்தில் எடுத்து அனைத்துலகம் செயற்பட வேண்டிய வேளை இது .....

# உண்மையான சுதந்திரம் அபிவிருத்தியால் கிடைக்காது

அபிவிருத்தி என்கின்ற போர்வையில் வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் பிரிவினைவாத எண்ணத்தை நீக்குவதற்காக இலங்கை அரசு தனது காலத்தை இழுத்தடிப்பதற்கான உத்தியைப் பயன்படுத்தி வருகிறது.

ஒரு பத்தாண்டு காலத்துக்குள் இரு சகோதரர்கள் தமது மூன்றாவது வீட்டை மிகவும் அழுக்கான வீதியில் இருந்து சில மீற்றர் தூரத்தில் கட்டுகின்றனர். இது தமக்கு நிலையான வீடாக இருக்கும் என இவர்கள் நம்புகின்றனர். பாதுகாப்புப் படையினர் தொடர்பான அச்சம் காரணமாக இவ்விரு சகோதரர்களும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் இலங்கையின் வடக்கில் உள்ள கிளிநொச்சியில் இவ்விருவரின் கதை என்பது பொதுவானதாகக் காணப்படுகிறது.

**விடுதலைப் புலிகளின் ஆட்சியில் பெண்கள் பாதுகாப்பாக இருந்தனர்**

முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழல் ஆட்சியின் நிர்வாகத் தலைநகரமாக கிளிநொச்சி விளங்கியது.

இலங்கைப் படையினரால் புலிகள் தோற்கடிக்கப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியுள்ள நிலையில், தற்போது கிளிநொச்சியில் கடைகள், புதிய வங்கிகள், வீதி விளக்குகள், இணையசேவை நிலையங்கள், ரயில் நிலையம் போன்றன புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் இருந்து தெற்காக 322 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கொழும்புக்கு நாளொன்றுக்கு மூன்று தடவைகள் தொடரூந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கிளிநொச்சியில் மிகப் பெரிய விளையாட்டு நிலையம் ஒன்றும் உள்ளது.

இவ்விரு சகோதரர்களின் மற்றைய சகோதரர் தமிழ்ப் புலிகளின் உறுப்பினராக இருந்த வேளையில் இறுதிக் கட்டப் போரில் படுகொலை செய்யப்பட்டார். இதற்கு முன்னர் இங்கு பெண்கள் பாதுகாப்பாக நடமாட முடிந்தது. போர் முடிவடைவதற்கு முன்னர் நாங்கள் மிகவும் சுதந்திரமாகப் பேச முடிந்தது. இங்கு சில அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. ஆனால் இது உண்மையான சுதந்திரத்தைத் தரவில்லை. இது உண்மையான சமாதானத்தையும் ஏற்படுத்தவில்லை எனச் சகோதரர்களில் ஒருவர் கூறினார்.

இவ்வாறான உணர்வலைகள் தமிழ் மக்கள் அதிகம் வாழும் இலங்கையின் வடக்கில் பரவலாகப் பேசப்படுகின்றன. இலங்கையில் நவம்பரில் நடைபெறவுள்ள பொதுநலவாய அமைப்பின் தலைவர்களது உச்சிமாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கம றூன் மற்றும் ஏனைய நாட்டுத் தலைவர்கள் பங்குபெறுவதெனத் தீர்மானித்து அதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளும் இந்நிலையில், இலங்கையின் உண்மையான சமாதானம் என்பது எவ்வாறு கொண்டுவரப்பட முடி யும் என்கின்ற வினா முன்வைக்கப்படுகிறது.

போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக பல்வேறு போர் மீறல்களை அரச படைகள் மேற்கொண்டிருந்தன என்று குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்பட்டு வந்தன. இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை பொறுப்பளிக்க வேண்டும் என்ற அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டுவரும் இலங்கையில் பொதுநல வாய அமைப்பின் உச்சி மாநாட்டை நடத்துவது தொடர்பில் விவாதங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இலங்கை அரசு அரசியல் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்த மிகக் குறைந்த அளவிலான முயற்சிகளையே மேற்கொண்டு வருவதாக விமர்சிக்கப்படுகின்றது. கொழும்புக்கு மிகவும் பலமான ஒரு செய்தியை வழங்குவதானது தனிப்பட்ட ரீதியில் சிறந்தது என கமறூன் நம்புவதாக பிரித்தானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் கொழும்பில் நடைபெறவுள்ள உச்சிமாநாட்டைத் தான் புறக்கணிப்பதாக கனேடியப் பிரதமர் தொடர்ந்தும் கூறிவருகிறார்.

பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாடானது மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை மேலும் பலப்படுத்தும். '50 நாடுகள் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளன. நாங்கள் தீண்டத்தகாதவர்கள் அல்லர்' என அனைத்துலக சமூகத்திடமும் உள்நாட்டு மக்களிடமும் இலங்கை அரசு இதன்மூலம் கூறிக் கொள்ள முடியும் எனக் கொழும்பைச் சேர்ந்த ஆய்வாளரும் செயற்பாட்டாளருமான பாக்கிய சோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் இலங்கையில் பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, இந்த அபிவிருத்தியானது தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கான கோரிக்கையை சிறிதளவேனும் குறைக்கவில்லை என்பதை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முடிவுகள் கூறுகின்றன. இலங்கை இராணுவத்தினர் வடக்கில் வாழும் மக்களின் நடவடிக்கைகளில் தலையீடு செய்வதாகவும், வடக்கில் அதிகளவில் இராணுவம் பிரசன்னமாகியிருப்பதாகவும், அரச வளங்களை இலங்கை இராணுவத்தினர் தவறாகப் பயன்படுத்துவதாகவும் பொதுநலவாய அமைப்பின் அவதானிகள் தெரிவித்த போதிலும்கூட, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 38 ஆசனங்களில் 30 ஆசனங்களைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

இலங்கையின் வடக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய எட்டு மாகாணங்களில் ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆட்சி அமைத்துள்ளது. வடக்கு மாகாணத்திடம் அரசியல் அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இலங்கை ஜனாதிபதி தனது எதிர்ப்பைக் காண்பித்துள்ளார்.

வடக்கில் மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக சில சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

போரின் போது பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் இடம்பெயர்ந்த போதிலும், தற்போது இவர்களின் வாழ்வியல் சிறிது முன்னேறியுள்ளது. மீள்குடியேறிய மக்களில் 63 சதவீதத்தினர் மலசல கூடங்களைக் கொண்டிருப்பதாகவும், 25 பேரில் ஒருவர் தமக்கான நீரைப் பெற்றுக் கொள்வதற்காக 500 மீற்றருக்கு மேல் நடந்து செல்லவேண்டியிருப்பதாகவும் போரின் போது மூடப்பட்ட 160 இற்கும் மேற்பட்ட பாடசாலைகள் தற்போது மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளதாகவும் அகதிகளுக்கான ஐ.நா உயர் ஆணையகம் விடுத்த புள்ளி விபரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சில தரவுகள் நம்பமுடியாதவையாக உள்ளன. அதாவது சில இடங்களில் மக்கள் போதியளவு உணவைப் பெறமுடியாது தவிப்பதாக உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர். முன்னரை விடத் தற்போது நிலமை மிகவும் மோச மாக உள்ளதாகவும் இவர்கள் கூறு கின்றனர். அபிவிருத்தி என்கின்ற போர்வையில் வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் பிரிவினைவாத எண்ணத்தை நீக்குவதற்காக இலங்கை அரசானது தனது காலத்தை இழுத்தடிப்பதற்கான உத்தியைப் பயன்படுத்தி வருகிறது. வடக்கு மாகாண சபைத் தேர்தல் பரப்புரையில் 'மாவீரர்கள்' தொடர்பாகவும் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மீதும் புகழ் பாடப்பட்டு உரைநிகழ்த்தப்பட்டன. இதில் பெறப்பட்ட பெறுபேறுகள் முன்னைய காலத்தை நினைவூட்டுவ தாக உள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

**புதிய மாகாணசபைக்கு குறைந்த அதிகாரமே உள்ளன**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய அனந்தி சசிதரன், மே 2009இல் படையினரிடம் சரணடைந்த பின்னர் காணாமற்போன தனது கணவர் தொடர்பாகத் தகவலை அறிந்துகொள்வதற்காக அரசியலில் நுழைந்துள்ளார். நான் மட்டுமல்ல, பலர் தமது காணாமற்போன கணவன்மாரைத் தேடுகின்றனர். பிறிதொரு ஆயுதப் போராட்டம் எமக்கு வேண்டாம்.

> அபிவிருத்தி என்கின்ற போர்வையில் வடக்கில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் நிலவும் பிரிவினைவாத எண்ணத்தை நீக்குவதற்காக இலங்கை அரசானது தனது காலத்தை இழுத்தடிப்பதற்கான உத்தியைப் பயன்படுத்தி வருகிறது.

போரால் நாம் பல்வேறு துன்பங்களைச் சந்தித் தோம். ஆனால் தமிழ்ப் புலிகளின் காலத் தில் நாம் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந் தோம். ஆகவே அரசியல் போராட்டம் தொடரவேண்டும் என அனந்தி சசிதரன் குறிப்பிட்டார்.

தமது பதவிகள் மிகவும் பலவீனமானவை என்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்றுக்கொண்டனர். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபைக்கு மிகக் குறைந்தளவு அதிகாரமே உள்ளது. தமிழ் மக்களின் கலாசார அடையாளம் மதிக்கப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கை தொடர்பில் ,இலங்கை அரசு சிறிதளவு விருப்பத்தைக் காண்பித்துள்ளது. இலங்கையின் வடக்கில் மிகக்குறைந்தளவு படையினரே நிறுத்தப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாணத்தில் உள்ள கட்டளைத் தளபதி ஒருவர் தெரிவித்த போதிலும், இங்கு இராணுவத்தினரின் பிரசன்னம் மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது.

இலங்கை இராணுவத்தினர் நாட்டில் நிலைத்திருந்த 'பயங்கரவாதத்தை' தோற்கடித்தனர் என்பதைச் சுட்டிக்காட்டும் விதமாகப் போர் வெற்றி நினைவிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் வடக்கில் மிகவும் அதிகமான நிலங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. வட பகுதிக்குச் செல்லும் சிங்கள சுற்றுலாப் பயணிகள் ஒளிப்படங்களை எடுக்கின்றனர். இவர்கள் இலங்கை இராணுவத்தின் துணையுடன் இவற்றைப் பார்வையிடு கின்றனர். இதேவேளையில் பெரும்பாலான தமிழ் மக்கள் இங்கு அச்சுறுத்தப்படுகின்றனர்.

பயங்கரவாதம் என்பது மோசமானது. இது எந்தநேரத்திலும் மீண்டும் தோன்றக் கூடியது என கண்டியைச் சேர்ந்த அரச பணியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ போரை எவ்வாறு முடிவுக்குக் கொண்டுவந்தார் என்பது தொடர்பாக தான் பெருமையடைவதாகவும் ஆனால் போரின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்பதை விபரிக்கத் தான் விரும்பவில்லை எனவும் சிங்களப் பொதுமகனொருவர் குறிப்பிட்டார்.

சுற்றுலாப் பயணிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள இடங்கள் எனக்கு கோபத்தை ஏற்படுத்துகின்றன. இவை எமது அழகிய நாட்டை அழித்துவிட்டன. இவை எமது சமூகத்தை நிர்மூலமாக்கிவிட்டன. எமது நிலத்திலிருந்த வெற்றிச் சின்னங்களை சுற்றுலா மையங்கள் அழித்துவிட்டன. இப்பொழுது சுற்றுலாப் பயணிகள் எமது அழிவுகளை அனுபவிக்க வருகிறார்கள். போரால் வாழ்வியல் மாற்றமடைந்த மக்களாக நாம் வாழ்கிறோம். இதனை ஆற்றுவதற்கு எதுவும் இடம்பெற வில்லை என மாகாணசபை உறுப்பினரொருவர் குறிப்பிட்டார்.

*நன்றி: புதினப்பலகை*

அல்ஹாஜ்
எம். எப். எம். இக்பால்
யாழ்ப்பாணம்

# தியாகப் பெருநாளான ஈதுல் அல்ஹா



அறபாவிலே ஒன்று கூடுவது, சமத்துவத்தினைக் காட்டுவதோடு சகோதரத்துவத்தினையும் உணர்த்தி நிற்கின்றது.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமையை நிறைவேற்றும் போது நபி இப்றாஹிம் (அலை) அவர்களின் குடும்பமே நம் மனக்கண் முன் நிழலாடும். இஹ்ராம் கட்டுதல், கஃபாவை வலம் வருதல், ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிடல், ஸபா, மர்வா மலைகளுக்கிடையில் ஓடுதல், புனிதம் நிரம்பிய ஸம் ஸம் நீரருந்துதல், அரபாவில் தரித்தல், குர்பான் கொடுத்தல், மினாவில் கல்லெறிதல் போன்ற அனைத்துக் கிரியைகளிலும் ஹஸ்ரத் இப்ராஹீம் நபி (அலை) அவர்களின் தியாகங்கள் பிரதிபலிக்கின்றன.

ஹஜ் பழைய, புதிய வழிபாடாகும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த ஜாஹிலிய்யாக் காலத்து மக்கள் கூட இவ்வழிபாட்டில் ஈடுபட்டு வந்தனர். இணைவைப்போடு மூட நம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் நிறைந்த ஒரு வழிபாடாகவே இது இருந்து வந்தது. இது ஒரு வழிபாடு என்பதை விடவும் அரேபிய தீபகற்பத்து மக்கள் ஒன்றுகூடும் வியாபாரச் சந்தையாகவே திகழ்ந்தது என்றால் மிகையாகாது. நபி (ஸல்) அவர்களின் வருகைக்குப் பின் இந்நிலை முற்றாக மாற்றப்பட்டு இணைவைப்பும் மூடநம்பிக்கைகளும் அனாச்சாரங்களும் முற்றாக அகற்றப்பட்டு வருடாந்தம் ஒன்று கூடும் சர்வதேச இஸ்லாமிய சமத்துவமும் சகோதரத்துவமும் உள்ளடக்கிய மாநாடாக அமையப்பெற்றது.

ஹஜ் வணக்கத்திலே இஸ்லாமிய சமத்துவமும், சகோதரத்துவமும் உச்ச நிலைக்கு வருகின்றன. அதாவது அரசனாயிருந்தாலும், ஆண்டியாயிருந்தாலும் எல்லோரும் ஒரே உடையணிந்து இஹ்றாம் கட்டுவதும், அறபாவிலே ஒன்று கூடுவதும், சமத்துவத்தை வெளிப்படுத்துவதோடு சகோதரத்துவத்தையும் உணர்த்தி நிற்கின்றது. இதேபோல ஹஜ்ஜில் நிறைவேற்றப்படும் ஒவ்வொரு கிரியைகளிலும் பல தத்துவங்கள் பொதிந்துள்ளன.



புனித ஹஜ் பெருநாள் தினத்திலும், அதைத் தொடர்ந்து வரும் 11, 12, 13 ஆகிய தினங்களிலும் வசதியுள்ள ஒரு முஸ்லிம் நிறைவேற்றும் மிகச் சிறந்த வணக்கமே உழ்ஹிய்யா (குர் பான்) கொடுப்பதாகும். ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற மிருகங்களை அறுத்து தானும் உண்டு, பிறருக்கும் புசிக்கக் கொடுத்து அல்லாஹ்வின் அன்பைப் பெறும் நற்செயலே உழ் ஹிய்யாவாகும்.

உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்றுகையில் பிற சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை பாழ்படுத்தாத வகையில் அதை நிறைவேற்றுவது முக்கியமாகும் என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. நம் மதக் கிரியைகளை நிறைவேற் றும் போது, மாற்றாரின் அதிருப்தியை யும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்வது நல்லதல்ல. இன்ற எமது நாட்டில் உழ்ஹிய்யா கொடுப்பதற்கான எதிர்ப்பு பெரிய அளவில் இல்லாது போனாலும், ஆங்காங்கே சிறுகச் சிறுக அதிருப்தியும் முகச் சுழிப்பும் அண்மைக் காலங்களாக உணரப்பட்டு வருகின்றன.

மிருகங்களை அறுப்பதற்கும், இறைச்சியைப் பெற்றுக் கொண்டு சுற்றாடலுக்கு மாசு ஏற்படாத வகையில் கழிவுப் பொருள்களை அழித் தொழிப்பதற்கும்போதிய இட வசதி இருக்கும் வரை இந்த நடைமுறையில் பிரச்சினைகள் தலைதூக்குவதில்லை. பல இனமக்களும் கலந்து வாழும், இடப் பற்றாக்குறை நெருக்கடி மிக்க பகுதிகளில் மிருகங்களை அறுப்ப தும், அவற்றின் கழிவுகளை அப் புறப் படுத்துவதும் எப்போதுமே சர்ச் சைக் குரியனவாகின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தவித்துக் கொண்டு பிற மதத்தவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காத விதத்தில் உழ்ஹிய்யா கடமையை நிறை வேற்றுவது நமது பொறுப்பாகும்.

பல்லின மக்கள் வாழும் எமது தாய் நாட்டில் மதங்களுக்கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த வேண்டிய மத போதகர்களாலேயே வழிபாட்டுத் தலங்கள் தாக்கப்படும் பயங்கரமான சூழ்நிலையில் இருந்து அல்லாஹ் எம்மைக் காப்பாற்றுவானாக. ஆமீன். ஈத் முபாரக்.

# அதிபர் தெ.து.ஜெயரத்தினத்தின் அறிவாழமும் ஆளுமை வீச்சும்

கலாநிதி கனகசபாபதி
நாகேஸ்வரன்

மகாஜனச் சிற்பி அதிபர் தெ.து. ஜெயரத்தினம் அவர்களது பன்முகத் தன்மைகள், பணிவீச்சு, சாதனைக்கான காரணங்கள், குணநல மேன்மைகள், சிந்தனைவீச்சு, கடமையுணர்வு, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்க உயர்வு, பொதுநல நோக்கு, சிந்தனைவளம், நிர்வாக மேதைப் பண்புநலன், புன்சிரிப்பு, இன்சொல், திட்டமிடல், மனிதாபிமானம், எதிரிகளைக் கவர்ந்திழுக்கும் காந்த சக்தி, வைராக்கிய தெய்வ நம்பிக்கை, கூர்ந்த மெய்ஞ்ஞானம் என்பன பற்றியெல்லாம் கல்விப் புலம்சார் பேரறிஞர்கள் பலர் பற்பல தருணங்களில் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

இன்னும் பலர் பல்வேறு கண்ணோட்டங்களில் எழுதியுள்ளனர். வரலாற்றையும், வளர்ச்சியையும், மதிப்பீட்டையும் ஒரு சேர விளக்கும் நல்ல களஞ்சியங்களாக 'மகாஜனன்' சஞ்சிகையும், பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழா மலரும், மகாஜனன் நூற்றாண்டு விழாச் சிறப்பு மலரும்,பவளமல்லி என வந்த பிரான்ஸ் பழைய மாணவர் சங்க வெளியீடும் இவற்றில் குறிப்பிட்டுரைக்கத்தக்கவை.

வாழையடி வாழையென வந்த கல்விப் பின்புலம் மகாஜனச் சிற்பி அதிபர் தெ.து.ஜெயரத்தினத்தையும் ஆழமான கல்விப் புலமையுடையவராக வும், நிரம்பிய ஆளுமை வீச்சுக் கொண்டபெரு நிர்வாகியாகவும் ஆக்கியது என்பது பேருண்மை.

அதிபர் 1913 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதி பிறந்தார். 1929 ஆம் ஆண்டிலே இவரது தந்தையார் துரையப்பாபிள்ளை இயற்கை எய்தினார். அப்போது அவர் யாழ்.இந்துக் கல்லூரியில் மற்றிகுலேசன் வகுப்பில் கல்வி கற்று வந்தார். மற்றிகுலேசன் இலண்டன் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் பரீட்சை. அதில் மிகத் திறமான பெறுபேறு பெற்றமையால் பரீட்சைக்காக யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்து கற்றுச் சித்தியடைந்த போது அவருக்குப் 19 வயது. 1932 இல் தந்தையார் உருவாக்கிய பாடசாலையில் ஆசிரியப் பணியிற் சேர்ந்தார். பாடசாலைக்கான 'மகாஜனன்' என்ற சஞ்சிகையைத் தொடக்கி வெள்ளி விழாமலர் ஒன்றைப் பிரசுரித்தாராம். அவரது உழைப்பு பாடசாலையின் சகல துறைகளிலும் இருந்தது. ஜெயரத்தினம் அவர்கள் அக்காலத்து ஆங்கில ஆசிரியர்களில் தலை சிறந்தவர்கள் வரிசையில் ஒருவராகிமதிப் பிடத்தக்கவராக இருந்தார். பாடசாலை என்பது வெறும் கல்வியூட்டும் நிறுவனமாக இருந்தால் மட்டும் போதாது. அது மாணவரின் முழுமையான ஆளுமை விருத்திக்கு வழிகோல வேண்டும் என்பதில் தீவிரமான நம்பிக்கை கொண்டிருந்தார் ஜெயரத்தினம் அவர்கள் என மற்று மோர் தகைசால் மாண்புறு அதிபர் பொ.கனகசபாபதி குறிப்பிடுகின்றார்.

ஜெயரத்தினம் அவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்தவை அவரிடம் காணப்பட்ட பண்பான குணங்களே. புன்முறுவல் தவளும் பொலிவான மலர்ந்த முகம், எவரையும் கவரும் இன்சொல், கம்பீரமான அடக்கம், சான்றோர் முன் பணிவு எவரையும் தன்வசப்படுத்தும் சக்தி,



அசையாத கடவுள் நம்பிக்கை இவையே இவரது உயர்வின் இரகசியங்கள். ஜெயரத்தினம் நல்ல பண்புடையவர் என்றும் அவரை யாரும் நம்பி நெருங்கிப்பழகி உறவாடி அன்பு கொள்ளலாம் என்றும் உலகுக்கு எடுத்துக் காட்டுகின்றது அவரது சிரித்த முகம். அது வேண்டுவனவற்றை வழங்கும் ஆற்றலையும், யாவரையும் விரும்பி வரவேற்கும் சொற்களையும், இகழ்ச்சியில்லாப் பண்பினையும் அவருக்கு வழங்கியுள்ளது என யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னாள்துணை வேந்தர் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன் அவர்கள் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்கள்.

நல்லாசான், நல்ல நிர்வாகி, நல்ல திட்டமிடலாளர், நன்னெஞ்சன், மாணவர் நலனின் அதீத கரிசனை கொண்டவர், எவரையும் பகைத்துக் கொள்ளவோ அல்லது மனம் நோகவோ வைக்கும் அளவுக்கு நடந்து கொள்ளாதவர். முயன்று பல நடவடிக்கைகளைக் கல்லூரிக்காக எடுத்து உலகளாவிய மகாஜனங்களை உருவாக்கிய உத்தமர் தெ.து.ஜெயரத்தினம் அவர்கள்.

மகாஜனக் கல்லூரியையும், கல்லூரி மாணவர்களையும் பெருமைபெறு நிலைக்கு, மாண்புறு நிலைக்கு, மதிப் பார்ந்த நிலைக்கு பிறர் பாராட்டும் நிலைக்கு உயர்த்திய செயல்வீரர் அதிபர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களாவார். தெ.து.ஜெயரத்தினம் 1932 இல் உதவியாசிரியர் பதவியிலே இணைந்து கொண்ட அவர், 03.05.1945இல் மகாஜனக் கல்லூரியின் அதிபரானார். 1949 இல் மகாஜனக் கல்லூரி தரம் 1 பாடசாலையானது. 1951 இல் வித்துவான் நா.சிவபாதசுந்தரனாரால் கல்லூரிக் கீதமும், கொடிக் கீதமும் இயற்றப்பட்டன. 1952 இல் (Phiysics Lab) பௌதிகவியல் ஆய்வுகூடம் கட்டப்பட்டது. 1953 இல் Chemistry Lab (இரசாயனவியல் ஆய்வு கூடம்) கட்டப்பட்டது. 1954 இல் கல்லூரி பயிலும் மாணவர்ளுக்கான தங்குமிட வசதி (Hostel) உருவாக்கப்பட்டது. 1956 இல் அதிபர் ஜெயரத்தினம், வட இலங்கை அதிபர்கள் சங்கத்தின் கௌரவ செயலாளரானார். 1957 இல் திருக்கேதீச்சரத்திலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலிலும் உயர் திருவிழாக்கள் உபயம் ஏற்கப்பட்டன. 1961 இல் கல்லூரி அதி உயர் தரத்திலான பாடசாலையானது. 1962 இல் அதிபர் ஜெயரத்தினம் யாழ். பாடசாலைகளின் விளையாட்டுச் சங்கத்தின் கௌரவ தலைவரானார். 1963 இல் மகாஜனவிலிருந்து 38 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குச் சென்றனர். 1970 இல் அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறினார். 1975 இல் இயற்கை எய்தினார். இக்கால கட்டங்களிலேயே அதிபர் ஜெயரத்தினம் கல்வி வளர்ச்சிக்கும், கல்லூரி வளர்ச்சிக்கும் ஆசிரிய குழாமின் உயர்வான தகைமை நியமனங்களுக்கும் எடுத்துக் கொண்ட உழைப்பு, பிரயத்தனம் குறிப்பிடற்பாலது; பிறராற் செய்துவிடமுடியாதவை.

மகாஜனவின் வைரவிழா ஆண்டான 1970 வரையான காலப்பகுதி (1945-1970) மகாஜன சிற்பி அமரர் தெ.து.ஜெயரத்தினம் அவர்களின் நெறிப்படுத்தலுக்குள்ளான காலம். இதுவே. மகாஜனவின் பொற்காலம் என்று கொள்ளப்படுகிறது. அமரர் ஜெயரத்தினம் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட உணர்வூட்டப்பட்ட ஆசிரியப் பெருந்தகைகள் அவரது கனவை நனைவாக்கத் தொடர்ந்து உழைத்த உழைப்பின் பெறுமதியே பொற்கால அறுவடையாகும். 'வரலாறு' ஒரு போதும் பொய்ப்பதில்லை. பாவலர் துரையப்பா பிள்ளையவர்களின் நூற்றாண்டைப் பெருநிறைவுடன் கொண்டாடிய மகாஜனக் கல்விச் சமூகம், இன்று தெல்லிப்பழையின் முத்தெனவும், திருக்குறளிலே பேசப்படும் கல்வி, கேள்வி, ஒழுக்கம், புகழ், குடிப்பிறப்பு, ஈகை, சான்றாண்மை, சால்பு, பெரியாரைத் துணைக்கோறல், இன்சொல், இல்லறம், புதல்வரைப் பெறுதல், சால்புடைமை என இன்னும் சொல்லப்பட்ட பண்புகளுக்கும், குணநல, மனநல, இனநல மேன்மைகளுக்கும் உரியரான தெ.து.ஜெயரத்தினத்தின் நூற்றாண்டு விழாவையும் மனமகிழ்வுடனும், பொருத்தமுறவும், நன்றியுணர்வுடனும் எடுத்துக் கொண்டாடுகிறது.

ஜெயரத்தினத்தினது புகழ் என்பது நிம்மதி தருவது; நீண்டது, நிலைபேறுடையது, நெஞ்சை நெகிழ்விப்பது அதிபர் ஜெயரத்தினம் பரமசாது; மனவிசாலமும், பொதுநோக்கும், 'சேவையே வாழ்வு' என்ற கொள்கைப் பிடிப்பும், 'தொண்டே' நிலைபேறுடையதென்ற எடுகோளில் நம்பிக்கையுங் கொண்ட கனவானின் புகழ் இது. படிமுறை வளர்ச்சிக் கட் டங் களினால் புகழ் நிறுவியவர் மகாஜனச் சிற்பி அதிபர் ஜெயரத்தினம் அவர்கள்.

சமுதாயச் சிற்பியாம் தெ.து.ஜெயரத்தினத்தின் புகழை, பணிகளை, பெயரை, சாதனைகளை நிலைக்கும்படியாக ஆக்கிய பிறிதொரு நிலையம் தெல்லிப்பழைஸ்ரீதுர்க்காதேவிஆலயம்எனலாம். துர்க்கையம்மன் கோயில் இன்று சர்வதேசப் புகழ், உலகப் புகழ் பெற்று நிற்கிறது. மகாஜனவின் புகழ், ஜெயரத்தினத்தின் புகழ் மகாஜன மாண வர்களினால் உலகளாவி நிற்கிறது; நிற்கும்.

# பூநகரிப் பிரதேசத்தில் உள்ளூராட்சி வாரம்

கிளிநொச்சி, ஒக். 16
கிளிநொச்சி பூநகரிப் பிர தேசத்தில் உள்ளூராட்சி வாரத்தையொட்டிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.
கிளிநொச்சி பூநகரி பிரதேச சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் பூநகரி முக்கொம்பன் பகுதியில் நடமாடும் ஆயுள்வேத மருத்துவ முகாம் ஒன்று நடைபெறவுள்ளது.
அத்துடன் எதிர்வரும் 22 ஆம் திகதி பூநகரிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவைகளை அறவிடும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
எதிர்வரும் 23 ஆம் திகதி சிரமதானப் பணிகளும், 24 ஆம் திகதி பூநகரி பிரதேசத்துக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையிலான போட்டிகளும் , எதிர்வரும் 25 ஆம் திகதி பொது இடங்கள், மூலிகைத் தோட்டங்கள் ஆகியவற்றில் மூலிகை மரங்கள் நடுகையும் இடம்பெறவுள்ளன.
26 ஆம் திகதி கல்வி நூலக அபிவிருத்தியில் பாடசாலை மாணவர்களுக்கான நூலக விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஐ-6)

# முல்லைத்தீவு கடற்றொழிலாளரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்க

## மாவட்ட கடற்றொழிலாளர் கூ.சங்கம் அமைச்சருக்கு மனு

மன்னார், ஒக். 16
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கோரி முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, கைத்தொழில், வர்த்தகம், வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் மனு ஒன்றைக் கையளித்துள்ளது.
முல்லைத்தீவு மாவ்ட்டத்துக்கு ஞாயிற்றுக்கிழமை பயணம் செய்த அமைச்சர் போருக்குப் பின்னரான காலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினருடன் கலந்துரையாடினார். இதன் போதே குறித்த மனு கையளிக்கப்பட்டது. இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவிக்கையில்:

> வெளிமாவட்டங்களிலிருந்து வரும் மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கை யால் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெளிமாவட்டங்களிலிருந்து வரும் மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையால் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.
குறிப்பாக தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துவதாலும் எமது மீனவர்களின் வலைகள் திட்டமிட்டு அறுக்கப்படுவதாலும் எமது கடற்றொழிலாளர்களின் தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. போருக்குப் பின்னரான காலத்தில் கடற்றொழிலாளர்கள் பலர் கடற் றொழிலை கைவிடும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.(வ-12)

# பழப்பயிர் அபிவிருத்திக்கான திட்டம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், ஒக். 16
பழப்பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை மன்னார் மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
விவசாய விரிவாக்கல் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படும் குறித்த நிகழ்ச்சித் திட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாதுளைக் கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.
மன்னார், நானாட்டான், மடு, மாந்தை மேற்கு ஆகிய பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 35 பயனாளிகளுக்கு முதற்கட்டமாக மாதுளங் கன்றுகள் வழங்கப்பட்டன.
இந்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.



வை.தேசப்பிரிய, மன்னார் பிரதி விரிவாக்கல் விவசாயப் பணிப்பாளர் பி.அற்புதச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பழக்கன்றுகளை வழங்கினர். (வ-12)

# விளையாட்டு மைதானம் புனரமைப்பு

அக்கராயன், ஒக். 16
கிளிநொச்சி அக்கராயன் கிழக்கு விளையாட்டு மைதானம் கனரக வாகனங்களின் உதவியுடன் புனரமைக்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதி இளைஞர்களின் கோரிக்கைக்கு அமையவே இந்த விளையாட்டு மைதானம் புனரமைப்பு இடம்பெற்றுள்ளது.
இதனால் நீண்ட காலமாக நிலவி வந்த விளையாட்டு மைதானப் பிரச்சினை தீர்ந்துள்ளதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-18)



முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட விசுவமடு மகா வித்தியாலயத்தின் வரலாற்று ஆவணமாகிய "விஸ்வநாதம்" சஞ்சிகை வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. அதிபர் ப.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் க.அருந்தாகரன் கலந்துகொண்டார். (வ-9)

# இளைஞரைத் தீண்டியது பாம்பு

தென்மராட்சி, ஒக். 16
டெங்கு நுளம்பு உற்பத்தியைத் தடுக்கும் வகையில் வளவைத் துப்புரவு செய்த இளைஞர் விஷப்பாம்பால் கடியுண்டார்.
இந்தச் சம்பவம் ஞாயிறு மாலை மிருசுவில், உசனில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த விக்னேஸ்வரன் விஜிதரன் (வயது-21) என்பவரே பாம்பால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?



**மேடம்**: எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிரபலங்களால் ஆதாயம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந்துகொள்வீர்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும்.



**இடபம்**: உங்கள் செயலில் வேகம் கூடும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். உங்களால் மற்றவர்கள் பயனடைவார்கள். நீண்ட நாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.



**மிதுனம்**: புதியவர்கள் நண்பர்களாவார்கள். நீண்ட நாள் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். செலவுகளைக் குறைக்க திட்டமிடுவீர்கள். கண்டும் காணாமல் சென்று கொண்டிருந்தவர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவுக் கிடைக்கும்.



**கடகம்** : அநாவசியப் பேச்சை தவிர்ப்பது நல்லது. அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். யாரையும் யாருக்கும் நீங்கள் சிபாரிசு செய்யாதீர்கள். வியாபாரத்தில் பணியாள்களால் பதற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள்.



**சிங்கம்**: சவாலான வேலைகளையும் சர்வ சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்களால் இலாபம் பெருகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.



**கன்னி**: எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்கில் திருப்பம் ஏற்படும். அரசால் அனுகூலம் உண்டு. வெளியூர்ப் பயணங்கள் சிறப்பாக அமையும். உத்தியோகத்தில் உங்களை நம்பி மூத்த அதிகாரி சில பொறுப்புகளை ஒப்படைப்பார்

**நாளை**
புரட்டாதி-31 புதன்கிழமை 17.10.2013
திதி: திரயோதசி கா.06.58 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.இ.03.03 வரை
சுபநேரம்: 07.32 - 09.02 வரை
இராகுகாலம்: 01.32 - 03.02 வரை



**துலாம்**: நட்பால் ஆதாயம் உண்டு. உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதைக் கண்டறிவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் புதிய பொறுப்புகளை ஏற்பீர்கள்.



**விருச்சிகம்**:எதிர்ப்புகள் அடங்கும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். பால்ய நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.



**தனுசு**: தன்னிச்சையாகச் சில முடிவுகளை எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களின் பெருந்தன்மையைப் புரிந்து கொள்வார்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமையைக் கண்டு மேலதிகாரி வியப்பார்.



**மகரம்**: வராது என்றிருந்த பணம் வரும். நம்பிக்கைக்குரியவர்கள் உதவுவார்கள். நீண்ட நாள்களாகத் தள்ளிப் போன காரியங்கள் முடியும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்வீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.



**கும்பம்**: இனந்தெரியாத சின்னச் சின்னக் கவலைகள் வந்து நீங்கும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாகப் பழகுங்கள்.



**மீனம்**: எளிதில் முடித்துவிடலாம் என நினைத்த காரியங்கள்கூட இழுபறியில் போய் முடியும். உறவினர், நண்பர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்களைத் தவிருங்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | 5 | | 2 | 8 |
| | | | | | 2 | 3 | | 4 |
| | | 9 | 8 | 1 | | | 5 | |
| | 2 | | | 4 | | | | 5 |
| | 7 | | 2 | 5 | 6 | | 9 | |
| 5 | | | | 8 | | | 7 | |
| | 5 | | | 2 | 1 | 7 | | |
| 4 | | 2 | 5 | | | | | |
| 7 | 8 | | 3 | | 9 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 8 | 6 | 7 | 3 | 1 | 5 | 2 |
| 6 | 2 | 7 | 9 | 1 | 5 | 3 | 8 | 4 |
| 5 | 1 | 3 | 2 | 4 | 8 | 9 | 6 | 7 |
| 8 | 7 | 4 | 5 | 6 | 1 | 2 | 9 | 3 |
| 2 | 3 | 6 | 8 | 9 | 4 | 5 | 7 | 1 |
| 9 | 5 | 1 | 3 | 2 | 7 | 8 | 4 | 6 |
| 7 | 8 | 2 | 4 | 3 | 9 | 6 | 1 | 5 |
| 3 | 4 | 5 | 1 | 8 | 6 | 7 | 2 | 9 |
| 1 | 6 | 9 | 7 | 5 | 2 | 4 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## விவாத அரங்கப் போட்டிகள்

யாழ்.மாணவர்களிடையே தமிழ் அறிவையும் விவாதத் திறனையும் மேம்படுத்தும் வகையில் கே.யு.கல்வி நிறுவனம் பாடசாலை மாணவர்களிடையே விவாதப் போட்டிகளை நடத்தவுள்ளது.
போட்டிகள் யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆறு வாரங்கள் பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெறவுள்ளன.
இந்தப் போட்டித் தொடர் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ந)

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி, ஒக். 16
இடைக்காடு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி கலை அரங்கில் நடைபெறவுள்ளது.
அதிபர் ஏ.அருந்தவநேசன் தலைமையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மகாலிங்கம் கணேசலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ந-11)

♦♦♦

நெல்லியடி வல்வெட்டித்துறை விநாயகர் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் வே.மகேந்திரன் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரீகரனும் பாரியாரும் கலந்து கொள்வர். பரிசில்களை திருமதி லோகேஸ்வரி ஸ்ரீகரன் வழங்குவார். (ந-35)

♦♦♦

தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசில் தினம் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு சின்னத்தம்பி கலையரங்கில் நடைபெறவுள்ளது.
அதிபர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொள்வர். பரிசில்களை திருமதி இராஜேஸ்வரி சத்திய சீலன் வழங்குவார். (ந-35)

## வடமராட்சி வலய மீளாய்வுக் கூட்டம்

வடமராட்சி, ஒக். 16
வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்களுக்கான மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வடமராட்சி வலயத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டம் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும். (ந-35)

### பதின்மூன்று ஆண்டில் முன்னால்
### உடல் பிரிந்து எம் உயிருள் கலந்திட்ட பாச அன்னை



திருமதி
**தையல் நாகேஸ்வரி அரியநாயகம்**
(தாதிய உத்தியோகஸ்தர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) அவர்களை
என்றும் நினைவு கூருவோம்

அன்னையின் மடியில்
14.08.1946
ஆண்டவன் அடியில்
16.10.2000

பொன் மகள் என்றோ போற்றப் பெண்ணவளாகத் தோன்றி
அன்பினைப் பொழிந்து நல்ல அறிவினைக் கற்றுணர்ந்து
மன்னுயிர் காக்கும் தாதித் தொழிலினை மகிழ்ந்து ஆற்றி
இன்புறு கணவரோடும் இனியநன் மக்களோடும்
துன்பியல் ஏதுமின்றித் துலங்கிய தூய அன்னை
தன்னலம் அறியாத்தாயாம் தையல் நாகேஸ்வரியார்
என்றுமே இறையுள் வாழ எமைவிட்டுச் சென்று ஆண்டு
பதின்மூன்றும் நிறைந்ததென்றோ இற்றைவரை
நினைவுகூருவோம்!

81/2, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

பாசத்தின் தாயாரை என்றென்றும் நினைவுகூரும்.
குடும்பத்தினர்.

(32749)(4.6.3)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
15.09.1935
உதிர்வு
27.09.2012

திருமதி
**இராசாம்பாள் பூபாலசிங்கம்**
திதி:
16.10.2013

நினைவுகள் சுமந்த எம் நெஞ்சங்கள் ஏங்குதம்மா
எம் நினைவுகளில் என்றும் நீங்காது வாழ்கின்றீர்கள்
ஆண்டொன்றில் ஆறாத் துயரில் வாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

11, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளில்
குடும்பத்தினர்.

(32748)(6.6.3)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
14.12.1952
மறைவு
16.10.2011



அமரர்
**ஞானப்பிரகாசம் பேதுருப்பிள்ளை**

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் அப்பா
உங்கள் நல்வழி காட்டலுடன்
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை.
077 493 7894

(C/29567)(5.6.3)

என்றும் உம் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மாமா, மாமி, சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,
அருணாசலம் (லண்டன்)

### 45ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
28 . 11 . 1943

மறைவு
02 . 09 . 2013

அமரர் **ஆறுமுகம் முத்துலிங்கம்**
(முன்னாள் கனேசன் அரிசி மில் உரிமையாளர் - மானிப்பாய்)

எங்கள் அப்பாவே எந் நாளும்
தெய்வம் என்றிருந்தோம்
குடும்பத்தின் குல விளக்கே
நீவீர் என்றிருந்தோம்
ஆண்டவனும் உம் ஆருயிரை
விரும்பியோ அணைத்துக் கொண்டான்
யாரும் வைக்காத பாசத்தினால் எம்மை
அரவணைத்து வளர்த்தீர்கள்
அதை ஆண்டவன் கூடப்
பொறுக்கவில்லை அப்பா
அன்பான பேச்சாலே புன் முறுவலோடு
அனைவரையும் கவர்ந்தீர்கள்
திகைத்து நாம் நிற்கின்றோம்
உம் தேனினிய சொல் தேடி

உங்கள் தங்கப் பொலிவினையும்
தயவான குணத்தினையும்
இனி எப் பிறப்பில் நாம் காண்போம்
இமைப் பொழுதில் உங்கள் இரங்கல்
செய்தி கேட்டு இதயம் குலுங்குகிறது
என்ன வென்று நாம் சொல்ல
தாத்தாவின் அழைப்பென்று துள்ளி வரும்
செல்லக்குட்டிகள் இன்று தாத்தாவின் சொல்
கேட்கத் தவித்து நிற்கின்றனர்
ஆண்டவன் உங்களை
அழைத்து விட்டான் தன் பக்கம்
எம் ஆத்ம உள்ளவரை ஆறாதப்பா
உங்கள் பிரிவு உங்கள் ஆத்ம சாந்திக்காய்
சக்தியை நாம் வேண்டுகின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (16.10.2013) புதன் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் அனைத்து வழிகளிலும் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இணுவில் றோட்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
077 723 7292

மகன்மார், மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(32768)(18.4)

### 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
19.07.1966
விண்ணில்
16.10.2008
(என்றும் மறக்கமுடியாத எம் அன்புத் தொட்டப்பா)

**ஸ்ரனிஸ்லாஸ் அமலதாஸ்**

ஆண்டுகள் ஐந்து கழிந்தாலும்
உங்களுடைய நினைவு
எம்மை விட்டு நீங்கவில்லை
உங்கள் உயிர்தான் பிரிந்தது
எங்கள் மனதில் நீங்கள்
என்றென்றும் வாழ்ந்து
கொண்டு தான் இருக்கிறீர்கள்

என்றும் உங்கள் நினைவுடன்.....
மனோகரன் (அண்ணா),
பெறாமக்கள், குடும்பத்தினர்.
65, குருசோ வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# B.O.C Travels (Pvt) Ltd

இலங்கை வங்கியின் துணை நிறுவனம்

கடந்தகால அனுபவங்களில் கட்டியெழுப்பப்படும் எதிர்கால பயணங்கள்

ஆலய தரிசனம் கோடி புண்ணியம்

## தென் இந்திய திருத்தல சுற்றுப்பயணம்



12 நாள்கள், குறைந்தது 10 பேர்

1ஆம் குழு -30.10.2013

2ஆம் குழு -20.11.2013

3ஆம் குழு -10.12.2013

### நீங்கள் தரிசிக்கும் ஆலயங்கள்......

திருப்பதி, சிதம்பரம்-நடராஜர்கோயில், தஞ்சைப் பெருங்கோயில்-திருச்சி, ஸ்ரீரங்கநாதர் ஆலயம்-திருச்சி, மலைக்கோட்டை விநாயகர் ஆலயம்-திருச்சி, சமயபுரம்-திருச்சி, மதுரை மீனாட்சி ஆலயம், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை-மதுரை, அழகர் கோயில்-மதுரை, பழனிமுருகன் ஆலயம், திருத்தணி, திருச்செந்தூர், இராமேஸ்வரம், திருவள்ளுவர் மலை-கன்னியாகுமாரி, கபாலீஸ்வரர் ஆலயம்-மயிலாப்பூர், பார்த்தசாரதி ஆலயம்-சென்னை, வடபழனிமுருகன், மேல்மருவத்தூர் அம்மன், ஆறுபடைவீடு, சுவாமிமலை, கும்பகோணம், ஏகாம்பரேஸ்வரர்-காஞ்சிபுரம், கைலாயநாதர் ஆலயம்-காஞ்சிபுரம், ஸ்ரீகாமாட்சி-காஞ்சிபுரம்,வரதராஜசுவாமி-காஞ்சிபுரம், மாமல்லபுரம் மற்றும் பல ஆலயங்களுடன்.

* யாழ்ப்பாணம்-கட்டுநாயக்கா விமானநிலையம்-யாழ்ப்பாணம். பஸ்சேவை.
* கட்டுநாயக்கா - சென்னை - கட்டுநாயக்கா இருவழி பயணச்சீட்டு
* இந்திய வீசா உதவிகள் (VISA FEES)
* இருவர் தங்குமிட வசதியுடன் கூடிய விடுதி ஒழுங்குகள் (காலை உணவு மட்டும்)
* யாத்திரை தொடங்கி முடியும் வரைக்குமான குளிரூட்டப்பட்ட பஸ்சேவை
* ஒரு நாள் சென்னையில் பொருள்கள் வாங்குவதற்கான வசதி
* இவை அனைத்தும் உள்ளடங்கலாக ஒருவருக்கு 81,000 ரூபா மட்டுமே

(The above fare is subject to change without prior notice/ conditions apply)

மேலதிக விவரங்களுக்கு:

**B.O.C Travels (Pvt) Ltd.**

**யாழ்ப்பாணம்-**
முதலாம் மாடி, இலங்கை வங்கி
அதிமேற்தரக்கிளை
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4575 / 4576
Hot line: 072 7849 535

**வெள்ளவத்தை-**
முதலாம் மாடி,
இலங்கை வங்கி கட்டடம்.
149, காலிவீதி, கொழும்பு-06.
T.P: 0114 505 575
0770 236 546

(C/12825)(10.6.3)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## MEDIA RESOURCE AND TRAINING CENTRE

(Joint venture of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden)

Applications are invited from qualified persons for the under mentioned posts in the Media Resource and Training Centre, University of Jaffna **upto 1st November 2013:**

**Visiting Lecturer/Instructor** in Theories of Communication, Journalism and Media /Origin and Growth of Sri Lankan Media/ Introduction to Print Media and New Media / Introduction to (Radio /Television)/ Journalism Ethics and Media Law /News Reporting/Sri Lankan Governance Structure/ Media(New/Social/Convergence)/ Digital Photo Journalism/Rural Reporting/Personality Development/Basic Communication Skills/Research Methodology/Reporting and Writing for Radio /Reporting and Writing for Television/Print Editing Layout/ /Advance Story Telling for Radio and Television/ /Editing for Television and Radio/Investigative Journalism/Television Documentary/Radio Documentary/Cross Cultural Communication

**Rate of payment:**

| Posts | Rate |
|---|---|
| Visiting Lecturer | : Rs.300/- per hour |
| Visiting Instructor | : Rs.150/- per hour |

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Academic Establishments**, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for more than one post should make separate application for each.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
2013.10.15

(சி/12886) (10.6.3)

## ஐவருக்கு அபராதம்

அம்பாறை.அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவில் கஞ்சா வைத்திருந்த நான்கு பேரும். சட்ட விரோதமாக ஆற்று மணல் ஏற்றிய ஒருவரும் பொலிஸாரி னால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் ஐவரும் நேற்று செவ்வாய்க் கிழமை அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத் தில் முன்னிலைப்ப டுத்தப்பட்டபோது அவர் களுக்கு தலா 25.000 ரூபாஅபராதம் விதிக் கப்பட்டது.

அக்கரைப்பற்று நீத வான் நீதிமன்ற நீதி பதி சரவணராஜா இந்த அபராதத்தை விதித் தார்.

இதேவேளை அட்டா ளைச் சேனை பிரதே சத்தில் சில தினங் களுக்கு முன்னர் திரு டப்பட்ட சுமார் மூன்று லட்சம் பெறும தியான புதிய ஆடைகள் அடங் கிய பொதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை அட்டாளைச் சேனை அறபா வித்தியாலத் தில் கைவிடப்பட்ட நிலை யில் கண்டெடுக்கப்பட் டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர் பில் பொலிஸார் மேல திக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்ற னர். (ச-104)

**விற்பனைக்கு**

லிஸ்ரர் 3பேஸ் ஜெனரேற்றர்
மிகவும் நல்ல நிலையில்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 232 3000

(சி/12881)(5.6.3)

## குத்தகை

வரணி, இயற்றாலை, தும்புருவில் பிள்ளையார் கோயிலுக்குச் சொந்தமான கரம்பைக்குறிச்சியில், கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் சுட்டிபுரம் அம்மன் கோயிலில் இருந்து வடக்குப் பக்கமாக சுமார் 250 மீற்றர் தூரத்தில் உள்ள யாட்டியும் மறு பிரிவுகளும் என்னும் காணி நிலப்பரப்பு 45 நீண்ட கால அல்லது குறுகிய கால குத்தகை அடிப் படையில் வழங்கப்படவுள்ளது.

தொடர்பு:
தும்புருவில் பிள்ளையார் கோயில்
நிர்வாக சபை.

(29013)(5.6.3)

## மயிலிட்டித்துறை கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத்தெரிவும்

கிராம சேவையாளர் பிரிவு (J/251, J/248) எதிர்வரும் 31.10.2013 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை உதவி அரச பணிமனையில் நடைபெறும் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

இரு கிராமசேவகர் பிரிவு மக்களையும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். வாகன ஒழுங்கு எமது மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத்தில் இருந்து நடைபெறும்.

தகவல்: மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கமும், மீள் குடியேற்றக்குழுவும்.

அ.குணபாலசிங்கம்
(மீள் குடியேற்றக்குழுத் தலைவர்)

(32775) (45.6.5)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## MEDIA RESOURCE AND TRAINING CENTRE
## (MRTC)

The Media Resource and Training Centre is a **joint venture** of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications are invited from suitable candidates for the following post on **Contract** basis at the Media Resource and Training Centre, University of Jaffna upto **1st November 2013**

### 1. Post of Trainer in Journalism (On Contract)

**Qualifications:**

i. A Degree from a recognized University, preferably in Media /Journalism
ii. Should have completed a course in Training of Trainers in Journalism
iii. Possesses minimum of **one year** experience in electronic media/Web Media

**Salary:** Rs.26,600/- (All inclusive and fixed per month)

**Selection:** By interview

### 2. Post of Office Secretary (On Contract)

**Qualifications and Job descriptions**

1. Three (3) G.C.E (Advance Level) passes in one sitting
2. Should be able to speak English
3. Must be able to handle Excel and Simple Accounting
4. General Office duties in the Centre
5. Providing support for workshops, seminars and classes
6. Must maintain day to day accounting

The age limit is 18-35 years

**Salary:** Rs.21,720/- (All inclusive and fixed per month)

Selection: By **Aptitude Test and Interview**

**General Conditions:**

This is a **full-time assignment** initially for a period of one year from the date of commencement of the assignment. The assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute to EPF and the Employees Trust Fund.

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Academic Establishments**, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
2013.10.15

(சி/12885) (10.6.3)

# மகாஜனன் சிற்பி தெ.து.ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்த தின 3 ஆம்நாள் நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஒக். 16
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் நவ மகாஜனன் சிற்பி தெ.து. ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்தநாள் கொண்டாட்ட மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்லூரி அதிபர் கே.வேல் சிவானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பொறியியலாளர் மகாஜனன் தி.ஸ்ரீஸ்கந்தராஜா கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை அமரர் ஜெயரத்தினத்தின் புதல்வி ஜெயவாணி மகேஸ்வரன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீடத் தலைவர் பேராசிரியர் வைத்திய கலாநிதி எஸ்.சிவபாலன், முன்னாள் செயலாளர் க.சண்முகலிங்கம், ஓய்வு நிலை மக்கள்வங்கி முகாமையாளர் எ.கோபாலகிருஸ்ணன் விசேட அதிதியாக வலிகாமம் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.சந்திரராசா, வட மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சத்தியபாலன், தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முககுலகுமாரன் சிறப்பு விருந்தினர்களாக அதிபர் திருமதி சி.அனந்தசஜனன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி ரி.பேரானந்தராஜா, பொறியியலாளர் ம.இராமதாஸ், கணக்காளர் ச.ஸ்ரீகணநாதன், சட்டத்தரணி கே.வி. மகாதேவன், திருமதி நா.ஜெயகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

காலை 9.00 மணிக்கு விருந்தினர்களை அழைத்து வரப்படுவதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி கல்விக் கண்காட்சியை பார்வையிடல் மற்றும் நினைவுப் பேருரை மலர் வெளியிடுதல். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்புஎன்பன இடம்பெறவுள்ளன. இதில் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ந-86)

# 'கப்டன்' தர அதிபர் கௌரவிப்பு



தென்மராட்சி, ஒக். 16
தேசிய மாணவர் படையணியில் "கப்டன்" தரத்துக்கு நியமிக்கப்பட்ட சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளைக்கு கல்லூரி சமூகத்தினரால் திங்கட் கிழமை வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட்டது. கல்லூரி பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 20 ஆவது தேசிய மாணவர் படையணியின் கட் டளை அதிகாரி மேஜர் ஜீ.ஆர். கமகெதர தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் வே.பாலசுப் பிர மணியம், சாவகச்சேரி கோட் டக் கல்வி அலுவலர் கு.சிவானந்தம், கல்லூரியின் முன்னாள் அதிபர் இ.கயிலைநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் 20 ஆவது தேசிய மாணவர் படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜீ.ஆர்.கமகெதர உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது;
நாட்டில் நல்லொழுக்கமுள்ள நற்பிரஜைகளைக் கொண்ட சமூகத்தை எதிர்காலத்தில் உருவாக்க அரசினால் .திட்டங்கள் வகுக்கப்பட்டன. சமூகத்தில் சிறு வயதிலேயே நல்லொழுக்கம், நற்பண்புகளை ஊட்டினால் நிச்சயம் எதிர்காலத்தில் நற்பிரஜைகள் உள்ள நாடாக இலங்கை மாறும். இதனை உருவாக்க பாடசாலைகள் முதன்மை நிலையில் உள்ளதால் மாணவப் பருவத்தில் நல்லொழுக்கம், நற்பண்புகள் போன்றவற்றினைப் போதிக்க ஆரம்ப கட்டமாக பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் அதிபர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வருகின்றோம். தென்பகுதி பாடசாலைகளின் அதிபர் களுக்கு இந்தப் பயிற்சியினை மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்தோம். இந்த வருடம் வடபகுதி பாடசாலைகளுக்கும் அறிமுகப்படுத்தியுள்ளோம். -என்றார். (ந-9)

## கண்ணீர் அஞ்சலி



வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தவிசாளர்
கௌரவ தியாகராஜா பிரகாஷ்
அவர்களின் அன்புச் சகோதரியின் கணவர்
**மகேந்திரன் சத்தியன்** அவர்களின்
பிரிவால் துயருறும் அன்னாரின்
குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்போமாக.

செயலாளர்,கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,சுன்னாகம். (சி/12692) (5.6)

# விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு,ஒக்.13
புதுக்குடியிருப்பு கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விஞ்ஞான வினாடி வினாப் போட்டி முடிவுகள் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தரம்-6**
ந.சுரபி-மு/விசுவமடு ம.வி., எஸ்.சஞ்சித்-மு/உடையார் கட்டு ம.வி., சி.சஜீவன்-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி.

**தரம்-6 (ஆங்கில மொழி மூலம்)**
த.தரணிகா-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, எஸ்.அருண் குமார்-மு/விசுவமடு ம.வி., என்.திலக்சனா-மு/உடையார்கட்டு ம.வி.

**தரம் - 7**
நா.பைரவி-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, ச.சாகிர்த் தியன்-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, ப.சேதுராகவன்- மு/விசுவமடு ம.வி.

**தரம்-8**
சி.சனோமி-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, அ.சுஜீ வன்-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, சி.றொசானி-மு/பாரதி வித்தியாலயம்.

**தரம்-9**
க.இந்துசன்-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, க.லோசி கன்-மு/கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தி., ம.பவித் திரன்-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி.

**தரம்-10**
எஸ்.சஜிதா-மு/உடையார் கட்டு ம.வி, சி.தனுசா-மு/உடையார்கட்டு ம.வி, இ.தனுசோபன்-மு/விசுவமடு ம.வி.

**தரம்-11**
ஸ்ரீ.ஹாஸ்வினி-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, ச.பிர வீன்-மு/புதுக்குடியிருப்பு ம.கல்லூரி, இ.சயிந்தன்- மு/புதுக்குடியிருப்பு ம.கல் லூரி. (ந-555)

## சொகுசு Carகள் வாடகைக்குண்டு

குடும்பத்துடன் யாழிலிருந்து கொழும்பு சென்றுவர Driver உடன் 9000/- மட்டுமே.
இன்னும் பல சேவைகள் எம்மிடம்.
தொடர்பு:- யாழ்ப்பாணம்- 0778761705

## வீடு வாடகைக்குண்டு

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில்
அமைந்துள்ள வீட்டின் அறைகள்
வாடகைக் குண்டு.
(பல்கலைக்கழக மாணவிகள் விரும்பத்தக்கது)
தொடர்பு- 0770712560
(32602)(14,17)

## தேவை

பண்ணை ஒன்றுக்கு நல்ல இன பசுக்கள், எருதுகள் தேவை.
தொடர்புகளுக்கு:
பரமேஸ் 077 978 9493
(3384)(16,14)

## விற்பனை பிரதிநிதி தேவை

யாழ் மாவட்ட பிரதேசத்துக்கு வாகனம் மூலம் பொருள்களை விநியோகிப்பதற்கு ஆவர்வம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. இடம், திருநெல்வேலி, கோண்டாவில் யாழ் மாநகர சபை பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமையுண்டு
பொருள்களை விநியோகம் செய்யக் கூடிய படி ரக வாகனமும் வாடகைக்கு தேவை. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 077 1368968,
021 205 2200
(32255)(16,14)

## மரண அறிவித்தல்கள்

### நாகர் கந்தையா



சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும்கொண்ட நாகர் கந்தையா நேற்று (15.10.2013) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர்-முத்துப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகமணி, கனகரத்தினம், தவமணி, செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், கலைவாணி (ஜேர்மனி), ஜெசீதன் (பிரதேச செயலகம்- சங்கானை), ஜெயாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வரதராஜன் (ஜேர்மனி), ரஜிதமதி (பிரதேச செயலகம்- சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்பு மாமனும், ஹரிஸ்வினின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
0777 906331
(32797)(16,14)
தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி திலகவதி குமாரசாமி

*(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை அமிர்தாம்பிகை வித்தியாலயம்)*



நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது 8 Peet Court Londonஜ வதிவிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி குமாரசாமி நேற்று (15.10. 2013) செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சு. குமாரசாமியின் அன்பு மனைவியும், சுலோசனா (கனடா), ரஞ்சனா (லண்டன்), ராகுலன் (லண்டன்), வத்சலா (லண்டன்), பிரபாகரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
கு. ராகுலன் (லண்டன்) 00442086579877
கு.ரஞ்சனா (லண்டன்) 00442087681667
8 Peet Court 52 drive,
Thornton Health,
CR 7 8 LA, U.K.
(29665)(10,6,3)
தகவல்:
கு. ராகுலன்
(மகன்)

# 'ஒரே மக்கள்' அமைப்பின் 6 ஆவது முகாம் கிளி.யில்

கிளிநொச்சி, ஒக். 16
'ஒரே மக்கள்' அமைப்பின் ஆறாவது முகாம் கிளிநொச்சி யில் நடைபெறவுள் ளது என்று ஒரே மக்கள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த முகாமில் 40 ஆசிரியர்கள், 60 தன்னார்வத் தொண்டர்கள் கலந்துகொள்ளவுள்ளதுடன் 500 இளம் மாணவத் தலைவர்கள் ஒன்று கூடவுள்ளனர்.

தலைமைத்துவ மேம்பாடு . ஒருமைப்பாடு போன்றவற்றை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு ஒரே மக்கள் அமைப்பு ஏற்கனவே கொழும்பு, மன்னார், முல்லைத் தீவு, கண்டி போன்ற இடங்களில் முகாம்களை நடத் தியதுடன் மருத்துவ முகாமினையும் நடத்தியுள்ளனர். (ந-10)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீட, விவசாய
இயந்திரவியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றும்
ந. கண்ணன் அவர்களின் அன்புத் தயார்.
*கமலாம்பிகை நடராசா*
அவர்கள் நேற்று (15.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானதையிட்டு. அவர்தம் குடும்பத்தினருக்கு எமது அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
விவசாய பீட நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்

### காசிநாதர் விமலராஜசிங்கம் (விமல்)

(மெகாபிற்ஸ் உரிமையாளர்)



மந்துவில் கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் குமரபுரம் பரந்தனில் வசித்தவரும் தற்போது இல.233/4, தாண்டிக்குளம், வவுனியாவில் வசித்து வந்தவருமான காசிநாதர் விமலராஜசிங்கம் (விமல்- மெகா பிற்ஸ் உரிமையாளர்) நேற்றுமுன்தினம் (14.10.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர்- பார்வதிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான நடராசா- தெய்வானை தம்பதியரின் பாசமிகு மருமகனும் பத்மராணியின் அன்புக் கணவரும் நிரோஜினி, விநோஜினி, வினோஜன் ஆகியோரின் அருமைத் தந்தையும் ஜோய், தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனும் நிருக்ஷன், ரஜிதன், ஆரணி, அங்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் பஞ்சாமிர்தம், சிவராஜசிங்கம், மதுரமணி, தவமணி, யோகமணி, விஜயராஜசிங்கம், காலஞ்சென்றவர்களான தவதேவராணி, குலதேவராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2013) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு இல.233/4, தாண்டிக்குளம் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பத்தினியார் மகிழங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல 233/4, தாண்டிக்குளம், வவுனியா.
(29813-23-14)
தகவல்:
குடும்பத்தினர்.

# பெருநாள் கொண்டாட்டத்தில் முஸ்லிம்கள்

மட்டக்களப்பு, ஒக்.16
உலக முஸ்லிம்களின் தியாகத்தை வலியுறுத்தும் பெருநாளான புனித ஹஜ் பெருநாளை நேற்று செவ்வாய்க்கிழமை உலக முஸ்லிம்கள் கொண்டாடி யுள்ளனர்.
இலங்கையில் சர்வதேச பிறை அடிப்படையில் ஹஜ் பெருநாள் தொழுகை மற்றும் குத்பாப் பிரசங்கம் என்பன நேற்று செவ்வாய்க்கிழமை கொழும்பு, புத்தளம், அக்கரைப்பற்று, காத்தான்குடி, நீர்கொழும்பு, ஹபுகஸ்தலாவ உட்பட பல பிரதேசங்களில் இடம்பெற்றது.
காத்தான்குடி தாருல் அதர் அத்த அவிய்யா ஏற்பாடு செய்த ஹஜ் பெரு நாள் தொழுகை மணிக்கு காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரை முன்றலில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 6.30 நடைபெற்றது. இந்தப் பெருநாள் தொழுகையையும் குத்பாப் பிரசங்கத்தையும் மௌலவி அஷ் ஷெய்க் அஸ்பர் நிகழ்த்தினார்.
இந்த நிகழ்வில் ஆண், பெண் உள்ள டங்கலாக சுமார் 1500 மேற்பட்டோர் கலந்து கொண் டனர் என்று தாருல் அதர் அத்தஅவிய்யா அமைப்பின் தலைவர் ரஊப் தெரிவித்தார்.
சர்வதேசப் பிறை அடிப்படையில் தியாகத்



திருநாள் ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாளை இலங்கை நாட்டின் பல பாகங்களிலும் முஸ்லிம்கள் கொண்டாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்கள்

### துரையப்பர் கேதீஸ்வரநாதன் (கௌரி)



மூளாய் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் லிபியா நாட்டில் தொழில் புரிந்தவரும், தற்போது கொழும்பு கொச்சிக்கடையை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா கேதீஸ்வரநாதன் (கௌரி) 13.10.2013 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூளாய் துரையப்பா - வள்ளிக்கொடி தம்பதியரின் மகனும், யாழ்ப்பாணம் கந்தசாமி - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், பத்மாவதியின் அன்புக் கணவரும், இந்துமதி (ஜேர்மனி), தர்ஷா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரகாஸ் (ஜேர்மனி), கலிதரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், அபிராமின் (ஜேர்மனி) அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சுபாஸ் சந்திரபோஸ், இந்திரன், சிவா, இரத்தினசிங்கம் மற்றும் வசந்தா, கிஸ்ணமூர்த்தி, தயாபரன், ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாக்கியலட்சுமி, கலாநிதி, புஸ்பராணி, அனுசியா, சிவபாக்கியம், விஜயகுமார், குகனேஸ்வரி, ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரி, இலங்கேஸ்வரி, விக்கினேஸ்வரி, அரியரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2013) புதன் கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் தம்பியார் தயாபரனின் நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தயா பூட்டுந் தொழிலகம்,
மோதிரக் கேணியடி, நீர்வேலி வடக்கு,
தொ.பே. 077 019 1044

தகவல்:
து. தயாபரன்
(சகோதரன்),
(32779) (45.6.3)

### திருமதி கனகாம்பிகை சபாரத்தினம்



புங்குடுதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். கொழும்புத்துறையை நிரந்தர வதிவிடமாகவும் பிரான்சை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகாம்பிகை சபாரத்தினம் 13.10.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசையா சபாரத்தினம்அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கிருபாஸ்கரன் (பிரான்ஸ்), துஷ்யந்தினி (ஜேர்மனி), ஜெயபாஸ்கரன் (பிரான்ஸ்), ஞானபாஸ்கரன் (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நளாயினி, பாலகுமார், ஜானகி, சுகன்ஜா, விஜயானந்தராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் தனலட்சுமி, பாக்கியலட்சுமி, தனேஸ்வரி, விமலாவதி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கிருபிகா, நிவேதிகா, கிருபிகன், மீரா, கீர்த்தனா, கோகுலன், யானுசன், ஜெயரூபா, சபரிசா, சாருசா, சைருசா, வினுசன், அனந்திகா, சுலோஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் சோமசுந்தரம், தர்மராஜா, பரம்சோதி, ஜெகதீஸ்வரன், ஜானகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், தெய்வேந்திரன், இரத்தினம், மகாலிங்கம் (உரிமையாளர், ராம் சேது அன்கோ), கதிர்காமலிங்கம் மற்றும் அன்னலிங்கம், கமலாம்பாள், இராஜேஸ்வரி, நிர்மலராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.10.2013)வியாழக்கிழமை பிரான் சிலுள்ள அவரது இல்லத்தில் கிரியைகள் இடம் பெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை தொடர்புகளுக்கு:
ப.தனேஸ்வரி (தேவி-சகோதரி)
கலைகலை வீதி, மானிப்பாய்.

தொடர்புகள்:
கிருபா (சபா -மகன்)0651248455
ஞானம் (மகன்)0668046583
ஜெயம் (மகன்)0698593114
(32774)(3.6.4)

பிரான்ஸ் (செல்லமுத்து மைதானத்திற்கு முன்பாக)
T.P: 021 321 9840, 077 507 9618

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் சிவப்பிரகாசம் (மாவடித்துரை)



மடத்தடி கிழக்கு வீதி, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட ஆறுமுகம் சிவப்பிரகாசம் நேற்று (15.10.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், வேலாயுதபிள்ளை, லோகேஸ்வரி, மகாதேவா, கோடீஸ்வரன், லோகேஸ்வரன், காலஞ்சென்ற தியா கேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெயஸ்ரீ(கனடா), பாலஸ்ரீ (கனடா), இராஜஸ்ரீ (லண்டன்), விஜயஸ்ரீ (கணக்காய்வாளர்-கிளிநொச்சி), வாணிஸ்ரீ (யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மணிவண்ணன் (கனடா), ரவீந்திரகுமார் (கனடா), ஜெகதீஸ்வரன் (லண்டன்), பிறேமதாஸ் (மின்னிணைப்பாளர்), தவராஜா (மக்கள் வங்கி, கொடிகாமம்) ஆகியோரின் அன்பு மாமனும், தர்சன், தனுசன், பிரியதர்சினி, தேனுஜா, அபரிதா, சங்கவி, பார்க்கவி, மிதுஷா, தீபிகா, ஜீவிதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.10.2013) வியாழக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மடத்தடி கிழக்கு வீதி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.
(சி/12894) (10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## கடவுள் சுவாமிகளின் குரு பூசை

மௌனகுரு- சிவகுரு முருகுப் பிள்ளை கடவுள் சுவாமிகளின் 34 ஆவது ஆண்டு குருபூசை தினம் நாளை வியாழக் கிழமை மறவன்புலோ மகா சமாதி ஆச்சிரமத்தில் நடை பெறவுள்ளது. அன்றைய தினம் விசேட பூசை வழிபாடுகளுடன் விசேட சொற்பொழிவும் இடம்பெறும். நிகழ்வின் இறுதியில் மகேஸ்வர பூசையும் நடைபெறவுள் ளது. (ந)

## முன்பள்ளி கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத் தின் கல்விப் பீடத்தால் நடத்தப்படும் முன்பள்ளிச் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.
இந்தக் கற்கை நெறிக்கு ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் கணிதம், தமிழ்மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்த 18 வயதைப் பூர்த்தி செய்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.
தகுதியுடைய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னதாக பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (ந-14)

## தூக்குணி வைரவரை பதிவு செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 16
வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரசித்தி பெற்ற இடி குண்டடி தூக்குணி வைரவர் ஆல யத்தைப் பதிவு செய்ய தலை வர் வெற்றிவேலு தில்லை நடேசன் நடவடிக்கை எடுத் துள்ளார்.
இதன் முதற்கட்டமாக நவாலி வடக்கு- இடிகுண்டடி தூக் குணி வைரவர் ஆலயம் தொடர்பான ஆவணங்கள் கொழும்பு -4 இல் உள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.
நூற்றாண்டு பழைமை வாய்ந்த தூக்குணி வைரவர் ஆலயம் கடந்த ஆண்டு 7 லட்சம் ரூபா செலவில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (ந-50)

## மரண அறிவித்தல்

### கந்தப்பு பிரபாகரன்



ஆனைக்கோட்டை, பொன்னையா லேனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு பிரபாகரன் 13.10.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் கந்தப்பு-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் சுதாமதி, சாந்தமதி, கருணாகரன், வனிதா,யசோதா,கோமதி, கிருபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதர னும்,சிவகுமாரன், காலஞ்சென்ற ஜெயகரன் மற்றும் சூரியகுமார், ராஜபாலன், வசந்தன், சுந்தா, லதாங்கி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(17.10.2013) வியாழக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா லேன், ஆனைக்கோட்டை (32777)(5.6.3) தகவல்: குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டு நினைவுகள்



மலர்வு
18.08.1940
உதிர்வு
24.10.2007

அமரர்
### கந்தையா குணரட்ணம்

திதி:16.10.2013

சிறப்புற வாழ்ந்து சீர்பல செய்து
செழிப்புற வாழ்வு தந்த தந்தையே!
கழிந்தன ஆண்டுகள் ஆறு ஆகிலும்
தொழுகின்றோம் நினைந்துனை சாந்தி!!

ஓட்டுமடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.
(32785)(6,3,4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்
18-06-1982
விண்ணில்
18-09-2013

அமரர்
### பஞ்சாட்சரம் அருள்சுதர்சன்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே நீ மறைந்து
முப்பத்தொரு நாள்கள் ஆனாலும் உன் நினைவு
நெஞ்சைவிட்டு மறையவில்லை ஐயா!
அன்பு மொழி பேசி அனைவரின் மனதிலும்
இடம் பிடித்தீரே
இன்று எங்கே ஐயா போய்விட்டீர் நித்தம்
உன் நினைவோடு நாங்கள்

கச்சார்வெளி, பளை. (29664)(5.6.3) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டுக் குருபூசை



முக்தி நிலையடைந்த
### சிவபாக்கியம் மலர் அம்மையார்

அவர்களின் இரண்டாம் ஆண்டுக் குருபூசை இன்று (16.10.2013) புதன்கிழமை நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.
காலை அம்மையாரின் சாமாதி பீடம் அமைந்துள்ள காரைக்காலில் விசேட பூசை வழிபாடுகளும் அதனைத் தொடர்ந்து உடுவில் கிழக்கு கடவுள் சந்நிதியில் விசேட பூசை வழிபாடுகள், பஜனை, ஆத்மிக சொற்பொழிவு, மகேஸ்வர பூசை என்பன நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது. இப்புனித கைங்கரியங்களில் அடியார்கள், அன்பர்கள் கலந்து திருவருள் பெற்றின்புறுவீர்களாக.

கடவுள் சந்நிதி அடியார்கள்.
(32786) (45.6.3)

அடம்பன் வைத்தியசாலையில்

# 3 வருடமாக நிரந்தர மருத்துவர் இல்லை

## கோரிக்கைகள் எல்லாம் குப்பைத் தொட்டிக்குள்; குற்றம் சாட்டுகிறது மாந்தை மேற்கு பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஒக். 16
மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட அடம்பன் வைத்தியசாலைக்கு நீண்ட காலமாக நிரந்தர மருத்துவர் நியமிக்கப்படாததால் மக்கள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டும் அது கைகூடவில்லை எனத் தெரிவித்துள்ளார் மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் ஜி.ரமணன்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாந்தை மேற்குப் பிரதேசத்தில் 34 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளன. இதில் 20 ஆயிரம் வரையான குடும்பங்கள் வசித்துவரும் நிலையில் குறித்த பிரதேச வைத்தியசாலையே இவர்களுக்கான மருத்துவ சேவையை வழங்கி வருகிறது.
மீள்குடியேற்ற ஆரம்பத்தில் வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு நோயாளர் விடுதி வசதிகளுடன் திறந்து வைக்கப்பட்டது. எனினும் நிரந்தரமாக மருத்துவர் எவரும் நியமிக்கப்படவில்லை. இன்றுவரை நடமாடும் மருத்துவ சேவையே வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வெளி இடங்களில் இருந்துவரும் மருத்துவர் ஒருவர் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் வரை சேவை வழங்குகிறார். மாலை மற்றும் இரவு நேரங்களில் வைத்தியசாலையில் மருத்துவர் இல்லாததால் அவசர நோயாளர்கள் பெரும் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.
குறிப்பாக விஷக்கடி மற்றும் திடீர் நோய்களுக்கு உள்ளாகும் நோயாளர்கள் சிகிச்சை பெறுவதாயின் 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள மன்னார் நகர்ப்பகுதி மருத்துவமனைக்கே செல்ல வேண்டி யுள்ளது.
நிரந்தர மருத்துவர் நியமிக்கப்பட வேண்டும் என நாம் 3 வருடங்களாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம். ஆனாலும் இன்றுவரை எமது கோரிக்கைகளுக்கு எவரும் செவி சாய்க்கவில்லை. இதனால் மக்கள் உயிர் ஆபத்துக்களையே எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இது குறித்து அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (ஐ)



## காரைநகரில் நடைபெற்ற சுனாமி ஒத்திகை நிகழ்வு

காரைநகர், ஒக். 16
தேசிய ரீதியான சுனாமிக்கான ஒத்திகை நிகழ்வு வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் காரைநகர் வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் இடம்பெற்றது.
இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒத்திகை நிகழ்வில் மாவட்டச்செயலக மற்றும் பிரதேச செயலக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.
காரைநகர் வடகிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் பல்வேறு சந்திகளில் நின்ற அலுவலர்கள் குறித்த நேரத்தில் அபாய ஒலி எழுப்பி மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுத்ததுடன் சிவகௌரி பொதுநோக்கு மண்டபத்தில் ஒன்று கூடுமாறும் அறிவித்தனர்.
அதனையடுத்து நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் குறித்த இடத்தில் ஒன்று கூடினர். அவர்கள் அலுவலர்களால் பதிவு செய்யப்பட்டதுடன் இடர் தொடர்பான முன்எச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான விளக்கமும் அளிக்கப் பட்டது. (வ-250)

## நுளம்புக் குடம்பிகளை அழிக்க நீர்நிலைகளில் மீன் குஞ்சுகள்

### மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.16
யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட குளங்கள் மற்றும் நீர் நிலைகளில் டெங்கு நுளம்புக் குடம்பிகளை அழிக்கும் நோக்கில் சுகாதாரப் பகுதியினரால் மீன் குஞ்சுகள் விடப்படுகின்றன.
தேசிய நுளம்பு ஒழிப்பு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு மீன் குஞ்சுகள் நீர் நிலைகளில் விடப்படுகின்றன.
அரியாலை, கொழும்புத்துறை, சுண்டுக்குளி, குருநகர் போன்ற பிரதேசங்களில் உள்ள அதிகமான குளங்களில் இவ்வாறு மீன் குஞ்சுகள் விடப்பட்டுள்ளதாக மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.
இதேவேளை குளங்கள் மற்றும் நீர்நிலைகளில் தற்போதைய வறட்சியை அடுத்து நீர்மட்டம் குறைந்து செல்வதால் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-17)



கடந்த சனிக்கிழமை பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்துக்குப் பயணம் செய்த முதலமைச்சர் குழுவினருக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை றோய் பேடினன் இறை ஆசி வழங்கினார். இந்த நிகழ்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சம்பந்தன், மாவை சேனாதிராசா, சரவணபவன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களான ஆனல்ட், பரஞ்சோதி மற்றும் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (வ-23)

## கிளிநொச்சியில் விவசாய பாடத்துக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர் இல்லை

கிளிநொச்சி, ஒக். 16
கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் விவசாய பாடத்தைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டம். ஆனால் இங்கு விவசாய பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை.
சில பாடசாலைகளில் உயர்தரப் பாடத்தில் விவசாயத்தையும் ஒரு பாடமாக மாணவர்கள் கற்கின்றனர். ஆனால் அந்தப் பாடசாலைகளில் விவசாய ஆசிரியர்கள் இல்லை.
இந்த நிலையில் தமது பாடசாலைக்கு விவசாய ஆசிரியர்களை நியமிக்குமாறு பல அதிபர்கள் எம்மிடம் கோருகின்றனர்.
இவர்களது கோரிக்கைகளை எம்மால் நிறைவேற்ற முடியவில்லை. காரணம் மாவட்டத்திலேயே மூன்று பேர் தான் விவசாய பாட ஆசிரியர்களாக உள்ளனர். அதிலும் ஒருவர் அதிபராக உள்ளார். எனவே இது ஒரு பெரும் பிரச்சினையாகவே காணப்படுகின்றது- என்றார். (ஐ)

## கைதடி சங்கம் முன்பாக பஸ் நிலையம் அமைக்குக

### அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஒக்.16
கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு முன்பாகக் காணப்பட்ட பஸ் தரிப்பிடத்தை மீண்டும் அவ்விடத்தில் அமைக்குமாறு அந்தப் பகுதி மாணவர்களும், பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
வீதி அகலிப்பின்போது அங்கிருந்த பஸ் தரிப்பிடக் கட்டடம் முற்றாக அகற்றப்பட்டது. அதற்கு மாற்றீடாக இன்னமும் பஸ் தரிப்பிட நிலையம் அமைக்கப்படாததால் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.
தனியார் ஒருவர் ஞாபகார்த்த பஸ் தரிப்பிடம் அமைக்க முன்வந்துள்ள போதிலும் அதனை சிலர் தடுத்து வருகின்றனர் எனவும் இதனால் மழை காலம் ஆரம்பித்ததும் பயணிகள் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-9)

## அனலைதீவு பிரதான வீதி மழைக்கு முன்னர் சீராகுமா?

யாழ்ப்பாணம், ஒக். 16
மழை காலம் ஆரம்பமாவதற்கு முன்னர் தமதுபிரதேசப் பிரதான வீதியைத் திருத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என கேள்வி எழுப்பியுள்ளனர் அனலைதீவு மக்கள். அனலை தீவு பிரதான வீதி நீண்டகால மாக எவ்வித புனரமைப்பும் இன்றி போக்குவரத்துச் செய்யமுடியாத மிக மோசமான நிலையில் உள்ளது.
எனவே குறித்த வீதியை உடன் திருத்தியமைத்துத் தருமாறு அந்தப்பகுதி மக்கள் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்ததுடன் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளனர்.
வீதியைப் புனரமைத் துத் தருமாறு மக்கள் கேட்கும் போதெல்லாம் விரைவில் புனரமைக்கப்படும் எனக் கூறப்பட்டு வந்ததே தவிர அதற்காக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.
எனவே மழைக்கு முன்னராவது வீதி யைப் புனரமைப்பார்களா எனவும் மக்கள் விசனப்படுகின்றனர். இதேவேளை வீதி மேலும் மோசமாகிக் கொண்டிருக்கும் நிலையில் பஸ் போக்குவரத்தும் தடைப் படலாம் எனவும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.(வ-7)


## இணைப்பு வீதியை புனரமைக்க நடவடிக்கை

கைதடி வடக்கு நவபுரம் மட்டுவில் இணைப்பு வீதியின் ஒரு பகுதி 23 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.
கைதடி- கோப்பாய் வீதியிலிருந்து கைதடி வடக்கு நவபுரம் ஊடாக மட்டுவில் செல்லும் வீதி 40 வருடங்களுக்குமேலாகப் புனரமைக்கப்படாததால் குறித்த வீதியைப் பயன் படுத்தும் ஆயிரக்கணக்கான மக்கள் தினமும் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர். சாவகச்சேரி பிரதேச சபை உறுப் பினர் சங்கரன் தங்கராசா மேற் கொண்ட முயற்சியையடுத்து சாவகச்சேரிபிரதேசசபையினால் குறித்த வீதியின் புனரமைப் புக்கான ஆரம்பக் கட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வ-9)

# வடக்கில் ஆறு புதிய மீன்பிடி துறைமுகங்கள்

## நிர்மாணிக்க நீரியல் வளத்துறை அமைச்சு ஏற்பாடு

கொழும்பு, ஒக்.16
வடக்கு மாகாணத்தில் 200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 6 புதிய மீன்பிடித்துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன என்று மீன்பிடி நீரியல் வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
குறித்த 6 துறைமுகங்களையும் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கொழும்பில் அண்மையில் கைச்சாத்திடப்பட்டது.
அமைச்சின் செயலாளர் திசாநாயக்கா மற்றும் கட்டுமானத்தில் ஈடுபடவுள்ள நிறுவன பணிப்பாளர் ரசாய் ஆகியோருக்கு இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
புதிய 6 துறைமுகங்களும் 200 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளன. பேசாலை, முல்லைத்தீவு, சாலை, புதுக்காடு, இலங்கைத்துறை, பலாச்சேனை ஆகிய இடங்களிலேயே புதிய துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.
அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்படும் குறித்த பணிகள் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படும்.
குறித்த புதிய துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படுவதன் ஊடாக மீன்பிடித்துறையில் புதிய தொழில் வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பம், மீன் உற்பத்தி அதிகரிப்பு என்பன ஏற்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (வ-5)



உதயன்
16/10/2013

# பணிக்கொடை வழங்க எம்மிடம் நிதி இல்லை

## கைவிரிக்கிறது ஓய்வூதியத் திணைக்களம்

கொழும்பு, ஒக்.16
15,000 பேர் வரையிலான ஓய்வூ தியர்களுக்கு பணிக் கொடையை வழங்கு வதற்குத் தேவையான நிதி அரசிடம் இருந்து கிடைக்க வில்லை.
அதனால் ஓய்வூதியத் திணைக் களம் பெரும் இக்கட்டு நிலைக்கு உள்ளாகியுள்ளது.
ஓய்வூதியக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக ஓய்வூதியப் பணிக் கொடைத் தொகை களைப் பெற்றுக் கொள்ள முன் வைக் கப்பட்டுள்ள 50 வீதமான விண்ணப்பங்களும் படைகளில் பணிபுரிந்த ஓய்வூ தியர்களுடையது. அத்தோடு எஞ்சியுள்ள ஏனைய அரச சேவைகளைச் சேர்ந்தவர் களின் விண்ணப் பங்கள் என்று கூறப்படுகிறது.
ஓய்வூதியத் திணைக்களத் துக்கான நிதி ஒதுக்கீடு போதியதாக இல்லாததனால் காத்திருப்புப் பட்டியலில் மாதக் கணக்காக ஓய்வூதியத்தை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது என்று ஓய்வூதியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
ஓய்வூதியத்தை வழங்கு வதற்கு மாத்திரமே ஆண்டின் இறுதியிலேயே நிதி ஒதுக்கீடு கள் செய்யப்படும் என்று ஓய் வூதியப் பணிப்பாளர் தெரிவித் தார்.
ஏனைய பணக் கொடுப்பன வுகள் தொடர்பாகத் தேவைப் படும் நிதி ஒதுக்கீடுகள் திறை சேரியிடம் கோரப்பட்டுள்ளன என்று அவர் கூறினார்.
இந்த நிதி ஒதுக்கீடு கிடைக்கப் பெறுவதைப் பொறுத்து, காத்தி ருப்புப் பட்டியலுக்கு அமைய ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகைகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
கடந்த ஆண்டு ஓய்வூதியத்தை வழங்குவதற்கு மாத்திரம் ஒதுக்கப்பட்டிருந்த தொகை 126 பில்லியன் ரூபாவாகும் என்று அவர் சுட்டிக்காட்டி னார். (ச-22)

# புலமைப் பரிசில் பெறுபேறுகளை இனிமேல் உலக சிறுவர் தினத்தன்று வெளியிடத் தடை

## ஜனாதிபதி மஹிந்த அறிவிப்பு

கொழும்பு, ஒக். 16
எதிர்காலத்தில் உலக சிறுவர் தினமான ஒக்ரோபர் முதலாம் திகதியன்று 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடக் கூடாது என்று ஜனாதிபதி அறிவித்திருக்கிறார்.
இம்முறை சிறுவர் தினமான ஒக்ரோபர் முதலாம் திகதியில் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருந்தன.
அதனால் நாடு முழுவதும் அதற்கு கடும் எதிர்ப்புக்கள் தலை தூக்கியிருந்தன.
இதனைக் கருத்தில் கொண்டு இது சம்பந்தமாக கல்வித் துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் சிறுவர் உளநல நிபு ணர் களுடன் கலந்தாலோ சித்ததன் பின்னரே ஜனாதி பதி இந்த அறிவிப்பை விடுத் துள்ளார்.
உலக சிறுவர் தினத்தில் இவ் விதம் 5ஆம் ஆண்டு புல மைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவது, சிறுவர்களது மனங்க ளில் பெரும் தாக்கமொன்றை ஏற் படுத்தி விடுகிறது என்று துறை சார்ந்த நிபுணர்கள் ஜனாதி பதிக்கு சுட்டிக்காட்டி இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஒ-22)

# நோயாளர்களுக்கு இனிமேல் திரவப்பால்

## சுகாதார அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஒக். 16
எதிர்காலத்தில் அரச வைத் தியசாலைகளில் நோயாளர் களுக்கு மாப்பாலுக்குப் பதிலா கத் திரவப்பாலை வழங்குவ தற்கு சுகாதார அமைச்சு தீர்மா னம் மேற்கொண்டுள்ளது.
அதன் முதற்கட்ட நடவடிக்கை யாக இலங்கையின் ஒன்பது மாகாணங்கள் உள்ளடங்கும் வகையில் தெரிவு செய்யப்பட் டுள்ள ஒன்பது வைத்திய சாலைகளின் நோயாளர்க ளுக்கு திரவப் பாலை மாதாந் தம் வழங்குவதற்குத் தீர்மா னிக்கப்பட்டுள்ளது.
இனிவரும் காலத்தில் சுகாதார அமைச்சின் அனைத்து விழாக் கொண்டாட்டங்களின் போதும் திரவப்பாலையே பயன் படுத்து வதற்கு அமைச்சு தீர் மானித் துள்ளது.
அரச வைத்திய அதிகாரிகள் சங் கப் பிரதிநிதிகள் சுகாதார அமைச்சின் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் தரப்பொன்றுடன் கொழும்பு சுகா தார அமைச் சில் நடத்திய பேச்சைய டுத்தே இந்தத் தீர்மானம் எடுக் கப்பட்டுள்ளது.
அரச வைத்திய அதிகாரிகள் சங் கத் தால் முன்வைக்கப்பட்ட பத்து யோசனைகள் 'சம்பந் தமான முடிவுகளை எடுக்கவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# கால்நடை ஆலோசகர் எண்ணிக்கை குறைப்பு

கொழும்பு, ஒக்.16
கடந்த பத்துவருட காலத்தில் நாட்டின் கால்நடை அபிவிருத்தி ஆலோசகர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை அகில இலங்கை கால்நடை அபிவி ருத்தி ஆலோசகர்கள் சங்கத் தின் செயலர் அனுரமொல கொட தெரிவித்தார்.
இத்தகைய நிலையில் கால் நடை வளங்கள் துறையின் மேம்பாடு பற்றிப் பேசுவது பய னற்றது என்று அவர் கூறினார்.
இந்தப் பதவிகள் ஏற்படுத் தப் பட்ட 1978 ஆம் ஆண்டில் 860 கால்நடை அபிவிருத்தி ஆலோ சகர்கள் இருந்துள்ளனர். தற் போது அந்த எண்ணிக்கை 512 பேராகச் குறைவடைந் துள்ளது.
அதற்குச் சமாந்தரமாக கால் நடைவைத்திய உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை அதி கரித்திருந்தாலும் அது எந்த வகையிலும் திருப்தியடையக் கூடியது அல்ல என்று அவர் குறிப்பிட்டார்.
1978 ஆம் ஆண்டில் கால் நடை உற்பத்திகள் மற்றும் சுகா தாரத் திணைக்களம் உரு வாக்கப்பட்டபோது நாட்டின் ஒட்டுமொத்த திரவப்பால் தேவை யின் 80 வீதத்தை உற்பத்தி செய்யக்கூடிய ஆற்றல் இருந் துள்ளது.
எனினும் முறையற்ற நிர்வா கச் செயற்பாட்டின் காரணமாக இன்று அது 50 வீதம் வரை கீழிறங்கிச் சென்றுள்ளது என் றும் அவர் மேலும் கூறி னார். (ச-22)

## தவறிவிட்டது

151, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிட்ட இரவீந்திரராஜா விஜயபாரதி என்பவ ரின் அடையாள அட்டை (687601033V), மோட் டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம், என்பன தவறி விட்டன. தயவு செய்து கண்டு எடுத்தவர்கள் 0773174022 எனும் தொலைபேசி இலக்கத் துடன் தொடர்பு கொள்ளவும். (32602)(14.17)

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி
முன்னாள் அதிபர் (1980-1986)

திருமதி
குணேஸ்வரி
பரராஜசிங்கம்



அவர்கள் இலண்டனில் இறைபத மடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி,
அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள்.

## இறுதிக்கிரியைகள் அந்தியேட்டிகள் செய்து கொடுக்கப்படும்

ஆஸ்பத்திரி வீதி, உணாப்பிலவு
முல்லைத்தீவு.
(பிரதேச செயலகம் அருகாமை)
0215683789 0726164025



## LAP TOP மலிவு விற்பனை

DELL 18750/= மட்டுமே
*FREE-HEAD PHONE/4GB PEN*
ஒரு வருட உத்தரவாதம்
ST.ANTONY'S
187, K.K.S. ROAD, JAFFNA TOWN
021 222 4865, 075 069 8608
(C/11769) (7.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னுத்துரை தவமணிதேவி



சீனியர் லேன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல, 45. ஸ்கந்தபுரம், கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை தவமணிதேவி நேற்று (15.10. 2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-தங்கம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற பொன்னுத் துரையின் பாசமிகு மனைவியும், தர்ம ராணி, இலங்காதேவி(கனடா), உமா தேவி (கனடா), கருணாதேவி (ஜேர் மனி), சுகந்திரராசா (இளைப்பாறிய கனிஷ்ட பரி சோதகர், தபாலகம் யாழ்ப்பாணம்), தெய்வேந்திர ராசா, நகுலேந்திரராசா, புவனேந்திரராசா ஆகியோரின் மூத்த சகோதரியும், சுஜாதா, விஜிதா, சுஜாத்குமார் (கணக் காய்வுப் பரிசோதகர், கணக்காய்வு உப அலுவலகம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், பாலகிருஷ்ணன், சாள்ஸ், லெஸ்வி, அனுசியா (பிரதேச செயலகம், கரைச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியும், கவிமகள், கவிசாளினி, நிதர்சன், விஜீந்திரன், விஜிகரன், ஜெயசாளினி, சயந்தவி, வைஷ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளுக்காக இன்று (16.10.2013) புதன் கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூத வுடல் தகனக் கிரியைக்காக ஸ்கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 45, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### யோசேப் பற்பநாதர் (யுவராசா)

(இளைப்பாறிய ஊழியர், லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்)



பிரதான வீதி, இளவாளையைப் பிறப்பிடமாகவும் விபுலாநந் தர் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப் பற்பநாதர் கடந்த (12.10.2013) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப்- மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அன்ரனீற்றா வத்சலாவின் (ஆசிரியர், யா/கொழும்புத்துறை இந்து மகா வித்த்தியாலயம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பேரின்பரெட்டினம்- மேரியோ சேப்பின் தம்பதியரின் அன்பு மருமகனும், சாள்ஸ் பத்தி நாதர், றோய் பத்மநாதர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்றவர்களான மேரி பிறின்சி இன்பராணி, அழகேந்திரன், ஜெயசீலன் மற்றும் ரட்ணராசா, வசந்தராணி, செல்வகுமார், றெக்ஸ், நியூட்டன், அலாக்சிஸ்தரனம் ஆகியோரின் அன்பு மைத் துனரும் சுரேசினி, ருபேசினி, சுரேஷ், நுபோஸ், யேசுதாஸன், மத்திமா, கலையரசு (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), ஜெயராணி, சண்முகதேவன், ராணி ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் நிமால், நிகால், நிக்ஸன், நியூட்டன், நிரோசன், நிசாந், சஜீவன், விஜித்தா, நிரோமி ஆகியோரின் சிறிய தந்தையும் றொபின், பிராயன் ஆகியோரின் பெரிய தந்தையும் சாந்தி, சித்திரா, கார்டினி, சுதர்சினி (ஆசிரியை- வேம்படி மகளிர் கல்லூரி), சர்மிளா (ஆசிரியை மட்டுவில் சந்தி, மௌலிசா வித்தியாலயம்), மைதிலி,டெனி, பாக்கியநேசன், கிருபிகா, காருணயன் ஆகியோரின் மாமனும் தனுசியன், சேமன், ஆஸ்ளி, கெபின், டெலான், அன்றூ, அனாஸியா, அலென், சரோன், வபிஷேக், நிலான், நிசக்கி, அக்சயா, தர்சிகன், சுயந்தன், யுகானி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.10.2013) புதன்கிழமை மு.ப.10.30மணிக்கு அவரது கொழும்புத்துறையில் உள்ள இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு இளவாளையில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பி.ப. 2.00மணிக்கு இளவாளை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு இளவாளை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 08, விபுலாநந்தர் வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
0213007081

(32850-23-14)

தகவல்:
மனைவி

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறோயிலர் இறைச் சிக் கோழி விற்ப னைக்கு உண்டு. சுத்தம் செய்தது 420/- நீர்வேலி வடக்கு மாதா கோயில் முன்பாக தொடர்பு 0776331914

## மரண அறிவித்தல்

### திருமதி பதுமசேனா மகாதேவன்



கந்தசாமி கோயிலடி, இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பதுமசேனா மகாதேவன் நேற்று (15.10.2013) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சின்னத்துரை- யோகம்மாவின் மூத்த மகளும் மகாதேவனின் அன்பு மனைவியும் திரு.திருமதி. குருகுலசிகாமணியின் அன்பு மருமகளும் பத்மதேவன் (அப்பன்- அமெரிக்கா), ஜர்மிலா (யறோ- அமெரிக்கா), பத்மசீலன் (சீலன், ஜேர்மனி), சிறோமினி (சூட்டி - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் மகிமைசேனன் (அண்ணா), கருணை சேனன் (மணியம் - இந்தியா), சமரசேனன் (பாட்டன், கனடா), யோகசேனன் (பாலா- சுவிஸ்), கலாசேனை (கலா- சுவிஸ்), அருட்கலாசேனன் (ராசு- ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஷ்யந்தி, பிரேமதயாளன், தயாநிதி, சுபாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் அன்னலக்சுமி, சாந்தகுமாரி, நவலக்சுமி, காந்திமதி, சிவசுப்பிரமணியம், பகீரதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரபசேனன், கிருபசேனன், கஜேந்திரசேனன், திஷானி, தனுசியா, ரஜ்சித், அகிலரூபா, மதிசேனன், யதுஷா, திலகசேனன், பவகாந்தசேனை, பகவாந்தசேனன், ரவகாந்தசேனை, விஜய், சியானி, சிதுர்ஷன், நிலக்ஷன், விதுஜா, சஜீவன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆகாஷ் அகானா, பிரேமநிர்த்தனன், பிரேமவாசினி, கனிஷ்கா, சுஜீப், பிரேனிகா, அஷ்வின், கிறிதிஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தசாமி கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில், சுன்னாகம்.

(32857-23-14)

தகவல்:
குடும்பத்தினர். மகிமைசேனன்.

# கைதான மங்கள சமரவீர பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஒக்.16

மாத்தறையில் கடந்த 5ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் நீதிமன்ற உத்தரவுக்கமைய நேற்றுக் காலை மாத்தறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த அந்தக்கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர நேற்று மாலை பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் மாத்தறை மாவட்ட பொலிஸ் நிலையத்தில் தனது சட்டத்தரணிகளுடன் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர சரணடைந்தார். இதையடுத்து மாத்தறை மாவட்ட பிரதான நீதிவான் சிசிரகுமார, ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் அவரை விடுவித்தார்.

மாத்தறை தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர மீது குற்றச்சாட்டுகள் இருக்குமாயின் அவரை கைதுசெய்வதற்கு அம்மாவட்ட நீதிமன்றத்தால் நேற்றுமுன்தினம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதையடுத்து, நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் வழங்கிய அறிவிப்புக்கமைய மாத்தறை பொலிஸில் சரணடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவர் பொலிஸில் சரணடைந்த போது ஆதரவாளர்கள் பலர் கைது தொடர்பில் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். இதனால் மாத்தறை பொலிஸ் மற்றும் நீதிமன்ற வளாகத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

மாத்தறை தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரையில் 36 பேர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ங-சி)

# ஜனநாயகமற்ற இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாடு

## 'கேலிக்கூத்து' என்கிறார் ரணில்



கொழும்பு, ஒக்.16

"ஜனநாயகம் துளியளவும் இல்லாத இலங்கையில், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு நடைபெறுவது மிகவும் கேலிக்குரியது" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிகொத்தவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று ராஜபக்ஷ படையணியினரால், கட்சியின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மங்களவின் வீட்டைச் சுற்றிவளைத்துள்ளமை மிகவும் மோசமானதொரு செயற்பாடாகும். இவர் மாத்தறையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தாக்குதல் நடத்தினார் என்பதற்கு யாரிடமும், எவ்வித ஆதாரமும் இல்லை. இந்நிலையில்தான் இவரை பொலிஸார் கைது செய்ய முற்பட்டனர்.

உயர் மட்டத்திலிருந்து பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கமையவே இவரைப் பொலிஸார் கைதுசெய்ய முற்பட்டனர். இது மிகவும் பிழையான செயற்பாடு மட்டுமன்றி நீதிக்குப் புறப்பானதொரு செயற்பாடாகவும் கருதப்படுகிறது. பொலிஸ் நிலையத்தில் தாக்கியவர்களின் பெயர் விவரங்கள் என்பனவும் மாற்றமடைந்துள்ளன. பேரணியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட ஹேமன் குணரத்னவை இதுவரை பொலிஸாரால் கைது செய்ய முடியாது போனது ஏன்? காரணம், நடப்பவை அனைத்தும் அரசியல் விளையாட்டுக்களே.

சுயாதீன பொலிஸ் சேவை இங்கு இல்லாமலிருப்பதே இதற்கெல்லாம் முக்கிய காரணமாகும் இவ்வாறான நிலையில் தான் இங்கு பொது நலவாய மாநாடும் நடக்கவிருக்கிறது. என்ன நடந்தும் என்ன பயன் கிடைக்கப் போகிறது?

ஜனநாயகம் எனும் ஒன்று துளியளவும் இல்லாத இந்நாட்டில் இப்படியானதொரு நிகழ்வு நடைபெறுவது மிகவும் கேலிக்கைக்குரிய செயற் பாடாகவே கருதப்படுகிறது" என்றார். (ங-சி)

## புகைத்தலால் 20 ஆயிரம் பேர் வருடாந்தம் சாவு

புகைத்தல் காரணமாக வருடம் ஒன்றிற்கு 20 ஆயிரம் பேர் வெவ்வேறுபட்ட நோய்களுக்கு உள்ளாகி உயிரிழக்கின்றனர் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பொலன்நறுவை, அரலங்வில பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாள் ஒன்றுக்கு ஆயிரம் பேர் வெவ்வேறுபட்ட நோய்த்தாக்கங்களுக்கு உட்பட்டு உயிரிழக்கின்றனர். அவர்களில் 60 வீதமானோர் தொற்றா நோய்களின் காரணமாக உயிரிழக்க நேரிடுகின்றது.

இந்த 60 வீதமானவர்களில் அநேகமானோர் புகைத்தலினால் ஏற்படும் நோய்களின் காரணமாக உயிரிழக்கின்றனர். புகைத்தலால் ஏற்படும் புற்று நோய் மற்றும் பல நோய்த் தொற்றுக்குள்ளானவர் களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 150 இலட்சம் ரூபா செலவிடப்படுகின்ற போதும், அவர்களது உயிரைக் காப்பாற்ற முடியாதுள்ளது – என்றார். (ங-சி)

### பதற்றத்தால் நிகழ்ந்த சோகம்

# தண்ணீரென நினைத்து பெற்றோலை கொடுத்ததால் குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.16

5 மாத குழந்தையின் தொண்டையில் சோறு சிக்கியதால் பதற்றமடைந்த அக்கா தண்ணீர் என நினைத்து பெற்றோலை அருந்தக் கொடுத்ததால் குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இதனால் குறித்த பகுதியே சோகத்தில் ஆழ்ந்துள்ளது.

அம்பாந்தோட்டை திஸ்ஸ மஹா ராம பகுதியில் இந்த சோகச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் ரொஷான் ரங்க என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை தனது தம்பிக்கு சோறு ஊட்டியபோது, தொண்டையில் சிக்கியதால் பதற்ற மடைந்த அக்கா அருகில் பிளாஸ்டிக் போத்தலொன்றிலிருந்த பெற்றோலை தண்ணீர் என நினைத்து பருகக் கொடுத்துள்ளார்.

இதனையடுத்து, திஸ்ஸ மஹா ராம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குழந்தை பின்னர் மேலதிக சிகிச்சை களுக்காக அம்பாந்தோட்டை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் திஸ்ஸமஹாராம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கனடாவைப்

வுள்ள பொதுநலவாய மாநாட்டில் கனடா பங்கேற்காது என்று அந்த நாட்டுப் பிரதமர் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பிரதமர்களின் இந்தக் கருத்துக்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப் பாட்டை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நேற்றுத் தெரிவித்தார். இதன்போது அவர் தெரிவித்ததாவது:

"இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என சுயநலத்தைக் கருத்தில் கொள்ளாமல் கொள்கையின் அடிப்படையில் கனடா எடுத்துள்ள தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. இதைப் போன்று இந்தியாவும் தமிழ் மக்களின் உணர்வுகளைப் புரிந்து தீர்க்கமான முடிவை எடுக்கவேண்டும்.

மனித உரிமைகள் விடயத்தில் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதில் கனடா தனிச்சிறப்பைக்கொண்டது. கடந்த காலங்களில் இவ்வாறான நல்ல தீர்மானங்களைக் கனடா எடுத்துள்ளதை நாம் மறக்கக்கூடாது.

பொதுநலவாயத்தின் அடிப்படைக் கொள்கைகளை இலங்கை மீறி இருக்கின்றபடியால்தான் கொழும்பில் இடம்பெறும் மாநாட்டில் கனடா பங்குபற்ற மாட்டாது என்று அந்நாட்டு பிரதமர் அறிவித்துள்ளார். உண்மையில் பொதுநலவாயத்தின் அடிப்படைக் கொள்கைகளை இலங்கை அரசு அப்பட்டமாக மீறி இருக்கின்றது. இதில் எந்த விதமான சர்ச்சைகளுக்கும் சந்தேகங்களுக்கும் இடமில்லை.

இதேவேளை, பொதுநல வாய அமைப்பில் உள்ள நாடுகள் ஏனைய நாடுகளும் இலங்கையில் நடைபெறும் மாநாட்டில் பங்குபற்றுவதா, இல்லையா என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றன. இலங்கை அரசு, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமையால்தான் இலங்கை தொடர்பில் வெளிநாடுகள் தீர்மானங்களை எடுக்கின்ற போது தீவிரமாக ஆராய்கின்றன.

இவ்வாறு சர்வதேச அரங்கில் அவமானப்பட்டுக்கொண்டிருக்கின்றது இலங்கை அரசு. இந்நிலையில், இலங்கையில் பொதுநலவாய உச்சி மாநாடு தேவையா? என்ற கேள்வி எழுந்துள்ளது" - என்றார். (ங-சி)

### வடக்குத்

படுத்த சிலர் முற்படுவர். எனவே படையினர் அனைவரும் விழிப்பாக செயற்பட வேண்டும்.

**தொப்பை இராணுவம்**

இராணுவத்தில் இருப்பவர்களுக்கு தேகாரோக்கியம் முக்கியம். சிலர் பெருத்த வயிறுடன் காணப்படுகின்றனர். அவ்வாறானவர்கள் எமக்குள் இருந் தால் பதவியுயர்வுகள் கிடைக் காது என்பதை ஞாபகப்படுத் துகின்றேன் - என்றார். (ங-5)

### தியாகுவின்

உணவையும் சாப்பிட வில்லை. அத்துடன், நரம்பு வழியாக உடலுக்குத் தேவையான தாதுக்கள் அடங்கிய நீரை ஏற்றவும் அனுமதிக் கவில்லை.

இதேநிலை நீடித்தால் தியாகுவின் உடல்நிலை மேலும் மோசமடையும் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

### காணாமற்

சங்கத்தின் ஒத்துழைப்புடன் மன்னார் பிரஜைகள் குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் பயணம் செய்யும் இந்தக் குழுவினர் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையில் சகல இடங்களிலும் பதிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கமைய காணாமற்போனோரின் உறவுகள் பொலிஸ் பதிவு, மனித உரிமைகள் ஆணைக் குழுவில் செய்யப்பட்ட பதிவுகளின் பிரதிகள் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரு தினங்களாக முன்னெடுக்கப்பட்ட பதிவு நடவடிக்கைகளின் போது யாழ்ப்பாணத்தில் 468 பேரும், கிளிநொச்சியில் 537 பேரும் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர். இதுவரையில் பதிவு செய்யத் தவறியவர்கள் இன்றைய தினமும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்தில் திருமதி என்.கமலநாயகி, இல.16, கச்சேரி கிழக்கு ஒழுங்கை என்ற முகவரியிலும் கிளிநொச்சியில் திருமதி யோகராசா கனகரஞ்சினி, இல.59 தொண்டமான் நகர் என்ற முகவரியிலும் பதிவுகளை செய்ய முடியும். மேலதிக விவரங்களுக்கு யாழ்ப்பாணத்தில் 0212221037 என்ற இலக்கத்துடனும், கிளிநொச்சியில் 07780887759 என்ற இலக்கத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இன்று புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்தில் கள்ளப்பாடு வடக்கு பொதுநோக்கு மண்டபத்திலும், 10 ஆம் வட்டாரம், வற்றாப்பளை, புதுக்குடியிருப்பு (தற்போதைய மாகாணசபை உறுப்பினர் கனகசுந்தரசுவாமியின் வதிவிடம்) என்ற முகவரியிலும், நாளை வியாழக்கிழமை வவுனியா இறம்பைக்குளம், புனித அந்தோனியார் ஆலயத்திலும் பதிவுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இந்தப் பதிவுகள் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர மன்னார் பிரஜைகள் குழுவின் செயலர் சிந்தாத்துரையுடன் 0771139897 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ங-5)

### தமிழகத்தின்

தமிழக மக்கள் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்து கொள்வதை விரும்பவில்லை என்ற விடயத்தை தி.மு.கவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு பிரதமர் மன்மோகன் சிங்கிடம் நேரில் சென்று வலியுறுத்தினார்.

இவ்வாறானதொரு நிலையில், பிரதமர் மன்மோகன் சிங் இந்த விவகாரம் குறித்து தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்தே இலங்கை செல்வது பற்றி முடிவு எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

மேலும் இந்த விவகாரம் தொடர்பில் தொடர் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் தியாகு, தனது போராட்டத்தைக் கைவிடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கருணாநிதியை பிரதமர் மன் மோகன் சிங் கேட்டுள்ளார். (ங-5)

### நாவற்குழியில்

றின. இவர்களுக்கான காணிகளைப் பங்கீடு செய்வது தொடர்பில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதும் இதுவரை அவர்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. மேலும் தென்மராட்சிப் பிரதேச செயலகம் காணிகளைப் பகிர்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு விடுத்த கோரிக்கைக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை அனுமதி வழங்க வில்லை.

இந்தக் காணிகளில் மேட்டு நிலப் பகுதியில் 78 சிங்களக் குடும்பங்களும், தாழ் நிலம் மற்றும் ஐயனார் கோயிலடிப் பகுதிகளில் சுமார் 125 தமிழ்க் குடும்பங்களும் குடியமர்ந் துள்ளன. காணிகள் பகிரப்பட்டு உறுதிகள் வழங்கப்படாத நிலையிலும் சிங்களக் குடும்பங்கள் தங்களுக்கான நிரந்தர வீடுகளை சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதி பெறாமலே அமைத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட சாவகச்சேரி பிரதேச சபைகூட சட்டவிரோத கட்டடங்கள் அமைக்கப்பட்டதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள், நில அளவைத் திணைக்களத்தினர் ஆகியோர் நேற்று நேரடியாகச் சென்று அளவீடுகளை மேற்கொண்டனர். இதன் போது இராணுவத்தினரும் பிரசன்னமாகியிருந்தனர்.

மேட்டு நிலம், தாழ் நிலம், ஐயனார் கோயிலடிப் பகுதி என்று மூன்று பிரிவுகளாக இந்த அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை காணி அளவீடு மேற்கொள்ளப்படுகின்ற தகவலை அறிந்து நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் தென்பகுதியிலிருந்து வருகை தந்து கொண்டிருப்பதாக அங்கு தங்கியுள்ள சிங்கள மக்கள் தெரிவித்தனர்.

இதனையறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் ஆகியோருடன் அங்கு தங்கியுள்ள சிங்கள மக்கள் முரண்பட்டுள் ளனர்.

இவ்வாறான செயற்பாடுகள் தேசிய நல்லிணக்கத்துக்கு குந்தகமானவை என்று மாகாணசபை உறுப்பினர் சி.வி.கே. சிவஞானம் கண்டனம் வெளியிட்டுள்ளார். (ங-5)

### மாவீரர்

யாகத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் சிதைக்கப்பட்ட மாவீரர் துயிலு மில்லங்களை மீள அமைக்க வேண்டும்' என்ற பிரேரணையை முன்வைத்தார். இதனை சபை யின் உபதவிசாளர் த.யோகராசா வழிமொழிந் தார். பின்னர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ங-5)

### 15 இந்திய

கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியா, இலங்கை இரு நாடுகளுக்கிடையிலான மீனவர் பிரச்சினை தற்போது பெரும் பூதாகரமாக உருவெடுத்து வருகின்றது.

இலங்கை கடல் எல்லைக்குள் ஊடுருவுவதாகக் கூறி இந்திய மீனவர்கள் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தனர். இவர்களை விடுவிக்குமாறு கோரிய போராட்டங்கள் இந்தியாவில் வலுப்பெற்றிருந்த நிலையில், கடந்த 10 ஆம் திகதி தூத்துக்குடியில் வைத்து 26 இலங்கை மீனவர்கள், இந்தியக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இரு நாட்டுக் கடற்படையாலும் இரு பகுதி மீனவர்களும் மாறி மாறி கைது செய்யப்பட்டு வருகின்ற நிலையிலேயே நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 15 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எழுவைதீவு கடல் பகுதிக்கு அண்மையாக வைத்து 4 றோலர்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 15 மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு அவர்கள் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் நேற்றுக்காலை ஒப்படைக்கப்பட்டனர்.

இதன் பின்னர் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில், நீதிபதி ஆர்.எஸ்.எம். மகேந்திரராஜா முன்னிலையில் முற்படுத்தப் பட்டனர்.

இதன்போது 15 மீனவர்களையும் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார்.

கைதுசெய்யப்பட்ட இந்தியமீனவர்கள் தமிழகத்தின் புதுக் கோட்டை மற்றும் ஜனதாப்பட் டினத்தைச் சேர்ந்தவர்களாவர். (ங-5)



நவிண்டில் கலைமதி



நாவந்துறை சென். மேரிஸ்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் இன்று வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் பி.ப. 4 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து நாவந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. (ங-422)

# சென்றலைத் தோற்கடித்து சம்பியனானது ஸ்ரான்லி

யாழ்ப்பாணம், ஒக்.16

நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியனானது.

கடந்த வாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர். அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணியினர் 30 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ராஜீவ்காந் 47 ஓட்டங்களையும், குணதாஸ், கண்ணராஜ் ஆகியோர் தலா 30 ஓட்டங்களையும், சுதர்சன் 21 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணி சார்பில் றொகன் 4 இலக்குகளையும், விஸ்ணு, யசிந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும். அன்ரூ, சுபாதிஸ் ஆகியோர் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

188 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் விளையாட்டுக்கழக அணியினர் 24.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 129 ஓட்டங்களையே பெற்று தோல்வியடைந்தனர்.

இதில் ரஜீவ்குமார் 31 ஓட்டங்களையும், கபில்தேவ் 22 ஓட்டங்களையும், றொகன் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழக அணி சார்பில் ராஜீவ்காந், உதயசபேசன் ஆகியோர் தலா 3 இலக்கினையும், வசி , கஜதீபன் ஆகியோர் தலா 2 இலக்கினையும் வீழ்த்தினர்.

(ங-23)

# 'நவீல்ட்' கிரிக்கெட் போட்டி பழைய மாணவர் அணி வாகை

யாழ்ப்பாணம், ஒக்.16

வெள்ளைப்பிரம்பு தினத்தை முன்னிட்டு நவீல்ட் பாடசாலை விழிப்புலனிழந்த மாணவர் அணிக்கும் நவீல்ட் பாடசாலை விழிப்புலனிழந்த பழைய மாணவர் அணிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் ஒன்று நவீல்ட் பாடசாலை மைதானத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நவீல்ட் பாடசாலை விழிப்புலனிழந்த பழைய மாணவர் அணி சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நவீல்ட் பாடசாலை விழிப்புலனிழந்த மாணவர் அணி எந்த இலக்கு இழப்பின்றி 57 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. (ங-23)



# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.16

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் 7 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு.

**பி.ப 3.30மணி**

கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகம். எதிர் சுடர்ஒளி விளையாட்டுக்கழகம்.

**மாலை 4.30மணி**

சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழகம்.

* * *

வலி .வடக்கு, ஒக். 16

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் தலைவர் அமரர் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர் தலைவர்களினால் யாழ். மாவட்டப் பாடசாலைகளின் ஆண்கள், பெண்கள் அணிகளுக்கிடையே நடத்தப்படும் கூடைப்பந்தாட்ட போட்டிகள் இன்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**காலை 8.30 மணிக்கு**

**பெண்கள் பிரிவு**

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி

**ஆண்கள் பிரிவு**

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பிற்பகல் 3.30 மணி**

**ஆண்கள் பிரிவு**

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. (ங-23-86)

# மரதனோட்டத்தில் முதலிடம்



தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் முன்னாள் அதிபர் நவமகாஜனன் சிற்பி தெ.து. ஜயரத்தினத்தின் 100 ஆவது பிறந்த நாளையொட்டி யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மரதனோட்டப் போட்டியில் பெண்கள் பிரிவில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார் அளவெட்டி அருணோதயக்கல்லூரி மாணவி கு.நிகேதினி (ங-23)

# சுற்றுப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி, ஒக்.16

அமரர் திருமதி கேதீஸ்வரி இராதா கிருஷ்ணன் நினைவாக யாழ்.மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் மற்றும் உதைபந்தாட்டம் ஆகிய போட்டிகளை சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகத்தினர் நடத்தவுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் நடத்தப்படவுள்ள போட்டிகளில் எட்டுப் பேர் கொண்ட எட்டு பந்துபரிமாற்ற கிரிக்கெட் போட்டியும், 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியும் நடத்தப்படவுள்ளனர்.

கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 19, 20 ஆகிய திகதிகளிலும் உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 26, 27 ஆகிய திகதிகளிலும் நடத்தப்படவுள்ளன.இந்தச் சுற்றுப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு விசுவமடு தோழர்கள் விளையாட்டுக் கழகத்தின் இருபதாவது ஆண்டு நிறைவையொட்டி மென்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட விசுவமடுமகாவித்தியாலயபழைய மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னதாக சுயமாகத் தயாரிக்கப்பட்ட தமது விண்ணப்பங்களை தலைவர்/செயலாளர், தோழர்கள் விளையாட்டுக் கழகம், குறிஞ்சி புத்தகசாலை, விசுவமடு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ங-9)

# அஞ்சல்தின உதைபந்தில் கல்வித் திணைக்களம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக். 16

அஞ்சல் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட அரச திணைக்களங்களுக்கு இடையே அஞ்சல் திணைக்களம் நடத்திய 9 பேர் பங்குகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் வவுனியா கல்வித் திணைக்கள அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வவுனியா மாவட்ட போக்குவரத்துச்சபைஅணியை எதிர்த்து வவுனியா கல்வித் திணைக்கள அணி மோதிக் கொண்டது.

இதில் வவுனியாகல்வித்திணைக்கள அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.



இறுதியாட்டத்தில் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அஞ்சல் அதிபர் குகதாசன் கலந்து கொண்டார். (ங-23)

# நியூபைட் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.16

லீக் பண்டார வன்னியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக வவுனியா உதைபந்தாட்ட லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் வவுனியா சிறுவர் பூங்கா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் நியூ பைட் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

நியூ பைட் விளையாட்டுக்கழக அணிக்கும் சூப்பர் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலானள இந்த ஆட்டத்தில் நியூ பைட் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

(ங-23)



## சச்சினின் ஓய்வு ஏற்கனவே தாமதம்

சச்சினது ஓய்வு லட்சக் கணக்கான ரசிகர்களுக்கு ஏமாற்றமானது. எனினும் இம் முடிவு தாமதமானது என்றும் 2011 உலகக் கிண்ணத்தை வென்ற போதே ஓய்வு பெற்றிருக்க வேண்டும் என்று வினோத் காம்ப்ளி தெரிவித்தார்.

சச்சின் டெண்டுல்கர் (வயது 40). சர்வதேச போட்டிகளில் சதத்தில் சதம் அடித்து சாதித்த இவரும் பள்ளித் தோழன் வினோத் காம்ளியும் (வயது 41) இணைந்து 1988இல் பள்ளி அளவிலான கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் (664) சேர்த்த ஜோடி என்ற பெருமை பெற்றனர்.

இதனிடையே, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான நவம்பர் 14-18 இல் நடக்கும் இரண்டாவது டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து சச்சின் முழுமையாக ஓய்வு பெறுகிறார்.

இதுகுறித்துவினோத்காம்ளி கூறுகையில், தொடக்க காலத்தில் இருந்ததைப் போல இன்று சச்சின் இல்லை. கடந்த சில ஆண்டுகளாக எதிர்பார்த்த அளவுக்கு அவர் ஓட்டங்கள் சேர்க்கவில்லை. இது சோகமானது. சச்சினின் குழந்தைப் பருவக் கனவு, உலகக் கிண்ணம் வெல்வது. இது 2011இல் நிறைவேறியவுடன் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் சிறப்பானதாக இருந்திருக்கும்.

சச்சினின் ஓய்வு முடிவு என்பது சரியானது தான். இவர் பங்கேற்கவுள்ள கடைசி இரண்டு டெஸ்ட் போட்டிகள், மிகவும் உணர்ச்சி பூர்வமானதாக இருக்கும் என்றும் இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்றும் நம்புகிறேன் எனவும் கூறினார்.

இந்தியா வரவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி, 2 டெஸ்ட், 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இதில், இரண்டாவது டெஸ்ட் (நவம்பர் 14-18) போட்டியுடன் சச்சின் ஓய்வு பெறுகிறார். இது இவரது 200ஆவது டெஸ்ட் என்பதால், எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. இது குறித்து மும்பையில் நடக்க உள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அட்டவணை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட உள்ளது. .(கு)




## சச்சின் டெண்டுல்கரிடம் கற்றவைகள் ஏராளம்

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரிடமிருந்து ஏராளமாகக் கற்றுக் கொண்டதாக இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் இர்பான் பதான் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தனது கிரிக்கெட் வாழ்வில் சச்சின் டெண்டுல்கர் ஏராளமாக உதவியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சச்சின் டெண்டுல்கர் சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறவுள்ள நிலையிலேயே இர்பான் பதான் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

தனது கிரிக்கெட் வாழ்வின் ஆரம்பத்தில் சச்சின் டெண்டுல்கர் ஏராளமாக உதவியதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பந்து வீசும் போதெல்லாம் எங்கே? எவ்வாறு பந்து வீச வேண்டும் போன்ற விவரங்களை சச்சின் டெண்டுல்கர் தனக்குத் தெரிவித்துக் கொண்டிருப்பார் என இர்பான் தெரிவித்தார்.

சச்சின் டெண்டுல்கரிடமிருந்துதான் ஏராளமானவற்றைக் கற்றுக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட இர்பான்பதான், பந்து வீச்சு மாத்திரமல்லாது துடுப்பாட்டம் பற்றியும் ஏராளமாகக் கற்றுக்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வீரர்களின் அறையில் சச்சின் டெண்டுல்கரை 9 வருடங்கள் அருகிலிருந்து அவதானித்ததாகக் குறிப்பிட்ட இர்பான் பதான், அவர் எவ்வாறு மைதானத்திற்கு வெளியே நடந்து கொள்கிறார் போன்ற விடயங்களைக் கற்றுக்கொண்டதாகவும் இர்பான் பதான் குறிப்பிட்டார். (கு)

## தொடரை வெல்வோம்

எனது அணி வீரர்களின் சிறப்பான செயல்பாட்டால் வெற்றி பெற்றோம், தொடரையும் வெல்வோம் என ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஜோர்ஜ் பெய்லி கூறியுள்ளார்.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித்தொடரின் முதலாவது போட்டியின் வெற்றி குறித்து அவர் கூறுகையில், மிட்செல் ஜோன்ஸன், மெக்கே, பால்க்னர், வொட்சன் ஆகியோர் சிறப்பாக பந்துவீசி இலக்குகளைச் சாய்த்தனர்.

இந்திய அணி வீரர்களின் துடுப்பாட்டம்வலுவாக இருந்த போதும் எங்களது வேகப்பந்து வீச்சாளர்கள் அபாரமாக பந்து வீசினர்.

அதுமட்டுமின்றி துடுப்பாட்டத்தில் எங்களது வீரர்கள் சிறப்பாக செயல்பட்டனர். இதன்மூலம் தொடரை நாங்கள் வெல்ல முடியும் என்று தெரிந்துகொண்டோம்.

இதேபோன்று இனிவரும் போட்டிகளிலும் விளையாடி நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று தெரிவித்துள்ளார். (கு)






## முதல் போட்டி திருப்தியில்லை

நியூசிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவுபெற்றமை குறித்து திருப்தியடையவில்லை என பங்களாதேஷ் அணித் தலைவர் முஸ்பிகர் ரஹிம் தெரிவித்துள்ளார். இந்தப் போட்டியில் தமது அணி வீரர்கள் சிறப்பாக செயற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

போட்டியின் முதல் இன்னிங்ஸ்சில் 501 ஓட்டங்களைப் பெற்ற பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸ்சில் 3 இலக்குகள் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. நியூசிலாந்து அணிக்கெதிரான எந்தவொரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் பங்களாதேஷ் அணி இதுவரை வெற்றிபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி எதிர் வரும் 21 ஆம் திகதி டாக்காவில் ஆரம்பமாகவுள்ளது. (கு)

## இந்தியா- தென்னாபிரிக்கா தொடர் இழுபறி நிலையில்

இந்தியா- தென்னாபிரிக்கா தொடர் குறித்த நடந்த பேச்சுக்களில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாமல், இழுபறி நீடிக்கிறது.

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணி இரண்டு 20/20, ஏழு ஒருநாள் மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாட உள்ளது. இதற்கான அட்டவணையை(நவம்பர் 21- ஜனவரி 19) இந்திய கிரிக்கெட் சபையை அணுகாமல் தென்னாபிரிக்கா வெளியிட்டது. ஆனால் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரியாக முன்னாள் ஐ.சி.சி தலைவர் ஹாருண் லார்கட் நியமிக்கப்பட்டதில், இந்திய கிரிக்கெட் சபை அதிருப்தியில் இருந்தது. இதனால் இந்தத் தொடர் நடப்பது உறுதியில்லாமல் இருந்தது.

இதற்கிடையே இந்தத் தொடர் குறித்து பேச்சு நடத்த தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின்தலைவர் கிறிஸ்நென்ஜானியை, இந்தியா வருமாறு இந்திய கிரிக்கெட் சபை அழைத்தது. இதனை தென்னாபிரிக்கக்கிரிக்கெட் சபையும்ஏற்றுக்கொண்டது. இதனையடுத்து மும்பையில் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ஸ்ரீனிவாசன், செயலர் சஞ்சய் படேல், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் தலைவர் கிறிஸ் நென்ஜானி, இயக்குநர் நார்மன் ஆகியோர் பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

ஆனால் இந்தப்பேச்சுக்களில் உறுதியான முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. இதனால் இந்தியா- தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான தொடர் நடப்பதில் இழுபறி நீடிக்கிறது. (கு)




## தவறாக எழுதிவிட்டேன்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியைக்கொண்டு நடத்தும் பொறுப்பை என்.ஸ்ரீனிவாசன் தனது மருமகனான குருநாத் மெய்யப்பனிடம் வழங்கினார் எனவும் குருநாத் மெய்யப்பனே அணியைக் கொண்டு நடத்தினார் எனவும் தனது சுயசரிதைப் புத்தகத்தில் எழுதியமை தவறாக இருக்கலாம் என மைக்கல் ஹசி தெரிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற ஆஸ்திரேலியரான மைக்கல் ஹசி, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக விளையாடி வருகிறார். அண்மையில் தனது சுயசரிதைப் புத்தகத்தில் அவர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர்பாக எழுதிருந்தார்.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை என்.ஸ்ரீனிவாசனின் நிறுவனமான இந்தியன் சிமெந்து நிறுவனமே உரிமைப்படுத்தியிருந்ததாகவும் என்.ஸ்ரீனிவாசன் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னணிப் பொறுப்பில் செயற்பட்டமையால் அணியை நடத்தும் பொறுப்பை அவர் குருநாத் மெய்யப்பனிடம் வழங்கியதாகவும் எனவே குருநாத் மெய்யப்பனும் அப்போதைய பயிற்றுவிப்பாளருமான கெப்லர் வெசல்ஸும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியைக் கொண்டு நடத்தியிருந்ததாகவும் மைக்கல் ஹசி குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில், தற்போது இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள மைக்கல் ஹசி, தான் புத்தகத்தில் எழுதிய விடயம் தொடர்பாக என்.ஸ்ரீனிவாசனிடம் வருத்தம் தெரிவித்ததாகவும் குருநாத் மெய்யப்பன் தொடர்பாக தான் தவறாக எழுதியிருக்கலாம் எனவும் குறிப்பிட்டார். குருநாத் மெய்யப்பன் அணியோடு நெருக்கமாகக் காணப்பட்டார் எனவும் பயிற்சிகளின் போதும், அணி தங்கியிருந்த ஹோட்டல்களிலும் அவர் காணப்பட்டார் எனவும் பயிற்சியாளரிடமும் வீரர்களிடமும் அவர் கதைத்தார் எனவும் குறிப்பிட்ட மைக்கல் ஹசி, ஆனால் குருநாத் மெய்யப்பன் என்ன பதவி வகித்தார் என்பது தொடர்பாகத் தனக்குத் தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (கு)

# சச்சினின் இறுதிப்போட்டி மும்பையில்

இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தனது இறுதி டெஸ்ட் போட்டியை தனது சொந்த இடமான மும்பையில் விளையாடவுள்ளார். மும்பை வன்கெடே மைதானத்தில் இந்தப்போட்டி இடம்பெறவுள்ளது.



இதுவரை 198 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியுள்ள சச்சின் டெண்டுல்கர், தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட் உலகில் இருந்து ஓய்வு பெறவுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இந்தத் தொடரின் முதலாவது போட்டி நவம்பர் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையும், இரண்டாவதும், இறுதியுமான போட்டி நவம்பர் 14 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரையிலும் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இந்தப் போட்டிகள் இடம் பெறும் மைதானங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.

எனினும் நேற்றுமாலை எடுக்கப்பட்ட முடிவின் படி, இந்தத்தொடரின் முதலாவது போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன்ஸ் மைதானத்திலும், இரண்டாவது போட்டி மும்பை வன்கெடே மைதானத்திலும் இடம்பெறவுள்ளது.

சச்சின் டெண்டுல்கரின் சொந்த இடமான மும்பையில் அவரது இறுதிக் கிரிக்கெட் போட்டி இடம்பெறவுள்ளதால் அதிக எதிர்பார்ப்புகள் தற்போது ஏற்பட்டுள்ளன.

இதுவரை 198 டெஸ்ட் போட்டிகளில் பங்கு பற்றியுள்ள சச்சின் டெண்டுல்கர், இதுவரை டெஸ்ட் போட்டிகளில் 51 சதங்கள், 67 அரைச்சதங்கள் குவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

GROUP CLASSES

வங்கியியல் கற்கை நெறி CBF, DBF இற்கான அனைத்துப் பாடங்களும் ஒரே இடத்தில். (எமது வழமையான ஆசிரியர் குழாம்)

ஆரம்பம் 19.10.2013 | K.ஸ்ரீபரன்

(கணக்கீட்டு ஆசிரியர்) (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை அருகில்)
0774598430

COLLEGE OF IELTS
IELTS

* INDIVIDUAL TRAINING
* UNIQUE TECHNIQUES AND BEST TIPS SPECIALLY IN READING
* WE ARE "IELTS REGISTRATION CENTER FOR BRITISH COUNCIL"
* MORE THAN 10 YEARS EXPERIENCE
* VOCABULARY and GRAMMAR
* EXTENDED SPEAKING PRACTICE

This is not a conventional IELTS class where you do papers and Teacher Gives Answer key But it is an Innovative Training Program Which has helped my Students to Touch bands 8 & 8.5

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, jaffna
(பெருமாள் கோவுக்குச் சமீபமாக)
Tel 0755435089 0778803887

வவுனியா முல்லைத்தீவில் வேலைக்கு ஆள்கள் தேவை

இயங்கிக் கொண்டிருக்கும் எமது கணினி நிலையத்திற்கு பொது முகாமையாளர், முகாமையாளர், வரவேற்பாளர், சந்தைப்படுத்துனர் உடன் தேவை.

தொடர்பு: 077 758 5920 (29810)(5.6.3)

உயர் சம்பளத்துடன் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள்

உயர்தரத்தில் கணிதம்/விஞ்ஞானப்பிரிவில் சாதரண சித்தியுடன் இருக்கின்றீர்களா? இன்னும் தொழில் ஒன்று கிடைக்கவில்லையா? உயர் சம்பளத் துடன் தொழில் ஒன்றை பெற்றுக் கொள்ள உங்கள் சுயவிவரக் கோவையை மின் அஞ்சல் மூலமாக உடன் அனுப்பி வையுங்கள்

மின்னஞ்சல்:- lankavoicenafees@gmail.com
T.P:- 072 3018048

உடனடி விற்பனைக்கு

நல்லம்மா தோட்டம், இத்தாவில், பளையில் A-9 கண்டி வீதியில் அமைந்துள்ள மேட்டு நிலம் 05 ஏக்கர் தொடக்கம் 10 ஏக்கர் வரை விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 658 9443
(32781) (10,6,3)

JOHN KEELLS FOUNDATION
மற்றும்
GATEWAY LANGUAGE CENTRE

GATEWAY Language Centre
இணைந்து வழங்கும்
ஆங்கில புலமைப்பரிசில்
JOHN KEELLS FOUNDATION

அனுமதி - 2013/14

John Keells நிறுவனத்தின் சமூகப் பொறுப்பாண்மைத் திட்டத்தின் கீழ் Gate way மொழிகள் மற்றும் தகவல் தொடர் பாடல் கற்கைகள் நிலையத்தினால் பாடசாலை மாணவர்களுக்காக வருடாந்தம் வழங்கப்படும் ஆங்கில மொழிக்கல்விக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள வர்களுக்கான முன்னோடிப்பரீட்சை எதிர்வரும் (18.10.2013) வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அனுமதி அட்டை, பரீட்சை சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு அயலில் உள்ள கேற்வேயுடன் தொடர்பு கொள்ளவும்.

GATEWAY LANGUAGE CENTRE

*#347, Kasthuriyar Road, Jaffna.*
*021 567 5555*

*#1, New Market Building, Chavakacheri.*
*021 227 0323*

*#55, Point Pedro Road, Nelliady.*
*021 226 2395*

*Karadippokku Junction, A9 Road, Kilinochchi.*
*021 228 0065*

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

மரண அறிவித்தல்

திருமதி கமலாம்பிகை(செல்வா) நடராசா



பெரிய மதவடி உடுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை (செல்வா) நடராசா நேற்று (15.10.2013) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மட்டுவிலைச் சேர்ந்த காலஞ் சென்ற வர்களான முன்னாள் விதானையாகிய விஸ்வநாதர் -செல்லம்மா தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புத்திரியும், புலோலி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற நடராஜாவின் (முன்னாள் எழுது வினைஞர், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தம்பிராசாவின் (பிரபல வர்த்தகர் சுன்னாகம்) அன்பு மருமகளும், கண்ணனின் (விரிவுரையாளர், விவசாய பீடம் யாழ் பல் கலைக்கழகம்) அன்புத் தாயும், ஜெயப்பிரதாவின் மாமியும், வர்ஷாவின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.10.2013) புதன் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரதுபெரிய மதவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரிய மதவடி, உடுவில்,
077 6511553, 021 2230365

தகவல்:
நடராசா கண்ணன் (மகன்)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L எழுதியோர்,தொழில் புரிவோர், இளைஞர் யுவதிகள், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.

"ஆங்கிலத்தில் ஒரெழுத்து தெரியாதவர்களும் இப்பயிற்சியில் இணைந்து சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்"

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 19.10.2013 சனிக்கிழமை

1. காலை 8.00 – 10.00
2. காலை 10.00 – 12.00
3. மாலை 1.00 – 03.00
4. மாலை 3.00 – 05.00

வார நாள் பிரிவுகள் ஆரம்பம் 17.10.2013 வியாழன்
1. காலை 9.00 – 11.00
2. காலை 11.00 – 01.00

குறிப்பு -3 மாதங்களில் ஆங்கிலம் சரளமாக பேசமுடியாதவரின் முழுப்பணமும் மீள வழங்குவதற்கான உத்தரவாதம்.

SAAMSON Language School
579, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

நீண்ட இடைவெளியின் பின்னர்....

கனடா கல்வித் தகைமைகளுக்கேற்ப படிக்க உழைக்க
இத்தாலி சட்ட ரீதியாகச் செல்ல
அரிய வாய்ப்பு

கனடா படிக்க உழைக்க நிபந்தனைகள்

- சட்ட ரீதியான தேடல்களுக்கும் நடைமுறைகளுக்கும் நீண்ட காலம் தேவைப்படும்
- விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட சந்தர்ப்பங்கள் அதிகம்
- எனவே இவற்றைக் கவனத்தில் கொண்டே உங்கள் சுயவிவரக் கோவையுடன் (CV) நேரில் வரவும்
- படிக்க உழைக்க இலவச உணவு ரிக்கெற் இருப்பிடம்

குறிப்பு: கனடாவுக்கு எல்லா வயதினருக்கும் VISIT VISA பெறவும் சட்ட ஆலோசனைகள் வழங்கப்படும்

இத்தாலி சட்டரீதியாக செல்ல வாய்ப்பு

* ஒரு வருட விசா நீடிக்கப்படக் கூடியது
* 100 வீத சட்டரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை.



திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090
(32791)(10.6.3)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்

Batch1: 19.10.2013
Batch2: 21.10.2013
Batch3: 26.10.2013
Batch4: 28.10.2013

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.1[illegible].2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மற்றவர்கள் நமக்கு எதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதை நாம் மற்றவர்களுக்குச் செய்யத் தயங்கக் கூடாது.

-தேவவாக்கு

# புதன் பொய்கை

A

உதயன் | ஒக்ரோபர் 16 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

ராஜராஜன்

# மறைந்து போகுமா ஏற்ற தாழ்வுகள்?




இன்றைய சமூக அமைப்பிலே நிலவும் ஏற்றத் தாழ்வுகளும், வேறுபாடுகளும் மனித குலத்துக்கே மாறாத வடுக்களாக மாறியுள்ளன.

மனிதர்கள் படைக்கப்படும் போது ஆண், பெண் என்ற இரு பிரிவுகள் மாத்திரமே காணப்பட்டன. அதுவும் இயற்கையை ஒட்டியதாகவே இந்த இரு பிரிவுகளும் வகுக்கப்பட்டன. ஆனால் இன்று பல்வேறு பிரிவினராக மக்கள் சிதறுண்டு காணப்படுகின்றனர்.

ஆதி காலத்து மனிதர்கள் காடுகளில் மிருகங்களைப் போன்று வாழ்ந்தனர். உணவு மட்டுமே அவர்களின் தேடலாக இருந்தது. பலவேளைகளில் உணவுக்காக இவர்கள் போரிட்டதுமுண்டு. மேலும் ஒழுக்க விழுமியங்களையும் இவர்கள் உணராதவர்களாகவே இருந்தனர். ஆனால் இந்த மனிதர்கள் தமக்குள் வேற்றுமை பாராட் டியதில்லை. தம்மில் ஒரு சாராரை ஒதுக்கி வைக்கவில்லை. அனைவரும் சமமாகவே மதிக்கப்பட்டனர்.

காலம் செல்லச் செல்ல மனிதர்களிடத்தில் நாகரிக வளர்ச்சி ஏற்படலாயிற்று. புதிய சிந்தனைகளும் அவர்களிடத்தில் தோன்றின. இதன் விளைவாகவே வேற்றுமைகளை வளர்க்கும் எண்ணம் அவர்களின் மனங்களில் துளிர்விட ஆரம்பித்தது.

உடல் வலிமை படைத்தவர்கள் ஏனையோரை அடக்கி வைப்பதற்குத் தலைப்பட்டனர். மேலும் கிடைக்கும் வளங்களையும் தம்வசப்படுத்திக் கொண்டனர். இதுவே மனிதர்களிடத்தில் ஏற்றத் தாழ்வுகளும், வேற்றுமைகளும் வளர்வதற்குக் காரணமாக அமைந்தது.

> நாகரிக வளர்ச்சி ஏற்பட்டபோது. புதிய சிந்தனைகள் மனிதர்களிடத்தில் இதன் விளைவாகவே வேற்றுமைகளை வளர்க்கும் எண்ணம் அவரவர் மனங்களில் துளிர்விட ஆரம்பித்தது.

வல்லமை படைத்த மனிதர்கள் தமது தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு தொழில் ரீதியாக மக்களைப் பிரித்து வைத்தனர். இதுவும் காலப் போக்கில் சாதியடிப்படையில் மனிதர்கள் வேறுபடுவதற்கு காரணமாக அமைந்து விட்டது. இதுவே இன்றுவரை மனிதர்களிடத்தில் களையப்படாது காணப்படும் சமூக வேறுபாடுகளுக்கு வித்திட்டது எனலாம். மேலும் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடும் இன்று முக்கிய இடத்தை வகிக்கின்றது. வசதி படைத்தவர்கள் சகல வசதிகளையும் அனுபவித்து சுகபோக வாழ்க்கை வாழும் போது, வேறு ஒரு சாரார் ஒருவேளை உணவுக்குக் கூட வழியின்றி காய்ந்த வயிற்றுடன் பசிக் கொடுமையை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானோர் கொடிய வறுமைக்குள் சிக்கித் தவிக்கின் றனர். இவர்களில் பலர் பசியுடனேயே தமது வாழ்நாளைக் கழிக்கின்றனர். இதே வேளை தினமும் ஏராளமான உண வுப் பொருள்கள் வீணே வீசப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின் றன. இந்த நிலை தொடருமானால் உணவுக்காக போர் ஒன்று மூண்டாலும் ஆச்சரியப்படுவதில்லை.

பணம் படைத்தவர்கள் மட்டுமல்ல, ஆள்பலம், அரசியல் பலம் ஆகிவற்றைக் கொண்டுள்ள வர்களும் சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

பணபலம் படைத்த ஒருவன் ஏனையவர்களை இழிவாகக் கருதுகின்றான். இதைப் போன்று ஆள்பலம் படைத்தவர்களும் அரசியல் பலம் கொண்டவர்களும் தமது இஷ்டம் போலச் செயற்படுகின்றனர். இவர்கள் தவறான காரியங்களில் ஈடுபடும்போது தண்டிக்கப்படுவதில்லை.

ஆனால் சாதாரண மனிதன் ஒருவன் சிறுகுற்றமொன்றைப் புரிந்தால் கூட அது பெரிதாக மாற்றப்பட்டு விடுகின்றது.

மேலும் மதரீதியான பிளவுகள் இன்று உலகெங்கும் பரவலாகக் காணப்படுகின்றன. ஆதிகாலத்தில் மனிதர்கள் இயற்கையையே தெய்வமாகப் போற்றினர். கல், மரம், தீ, பறவைகள், விலங்குகள், ஆகாயம், கடல் என்பன கூட இவர்களது கண்களுக்கு தெய்வங்களாகக் காட்சியளித்தன.

இவற்றையே அவர்கள் வணங்கினர். தமது குறைகளை இவற்றிடமே முறையிட்டு அவற்றுக்குப் பரிகாரமும் தேடிக் கொண்டனர்.

ஆனால் இன்று பல்வேறு வகையான மதப் பிரிவுகள் தோன்றிவிட்டன. ஒரு மதத்தைப் பின்பற்றுபவர்களே பல கூறுகளாகக் காணப்படுகின்றனர். இவர்களுக்குள் வேறுபாடுகள், மோதல்கள் காணப்படுகின் றன. இறைவன் ஒருவனாக இருந்த போதிலும், அவனை அடைவதற்கான மார்க்கங்களாகவே மதங்கள் கருதப்பட்டு வருகின்ற போதிலும் இன்று அவை உருவாக்கப்பட்டதன் நோக்கங்கள் திசைமாறிப் போயுள்ளன.

செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்று வருவதற்கும், அங்கு குடியேறுவதற்கும் பலர் பெரும் பணத்தைச் செலவிடுவதற்குத் தயாராக உள்ளதாக அறிகின்றோம்.

ஆனால் பலகோடி மக்கள் போதிய வீதி வசதிகளின்றிப் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் வாழ்கின்றனர். விண்வெளியில் பயணிப்பதற்குச் செலவிடும் பணத்தின் ஒரு சிறு பகுதியைக் கொண்டே இந்த மக்களின் குறையைத் தீர்த்து வைக்க முடியும். ஆனால் எவரும் இது தொடர்பாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை.


இன்று உலகளாவிய ரீதியில் பயங்கரவாதச் செயல்கள் இடம்பெறுவ தற்கான அடிப்படைக்காரணம் என்னவென்பதை நாம் முதலில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இன, மொழி, மத, நிற ரீதியான வேறுபாடுகள் காண்பிக்கப்பட்டு ஒரு பிரிவு மக்கள் ஒதுக்கி வைக்கப்படும் போதுதான் அங்கே பிரச்சினைகள் உருவாகின்றன. தம்மீது விதிக்கப்படும் தடைகளைத் தகர்க்க வேண்டுமென்ற வெறியுணர்வு பின்னர் ஆயுத ரீதியான போராட்டமாக உருவெடுக்கின்றது. எமது நாட்டில் கூட இதுதான் நடந்தது. இன்னும் பல நாடுகளில் இப்போதும் இடம்பெற்று வருகின்றது. ஆனால் இதற்கான மூலகாரணத்தை எவரும் ஆராய்ந்து பார்ப்பதற்குத் துணிவதில்லை. அவ்வாறு துணிந்து விட்டால் தீர்வை வழங்க வேண்டி நேரிட்டு விடுமோ என்ற அச்ச உணர்வே இதற்கான முக்கிய காரணமாகும்.

நடந்து முடிந்த உலக மகா யுத்தங்கள், தற்போது நடந்து கொண்டிருக்கும் மோதல்கள், முரண்பாடுகள் அனைத்துக்கும் மனிதர்களிடத்தில் காணப்படும் வேறுபாடுகளும், ஏற்றத் தாழ்வுகளுமே முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன. இவைகளையப்படாத பட்சத்தில் மனிதர்களிடையிலான பூசல்கள் வலுக்கவே செய்யும்.

ஆகவே இதன் தாற்பரியத்தை உணர்ந்து அனைவரும் ஒன்றிணைந்து இவற்றைக் களைவதற்குப் பாடுபட வேண்டும். மனிதர்கள் அனைவரும் சமம் என்றதொரு நிலை உருவாக்கப்படவேண்டும்.

தவறும் பட்சத்தில் மனிதர்கள் மென்மேலும் பிரிவுகளை எதிர்கொள்வார்கள். போராட்டங்கள் வலுப்பெறும். இந்த உலகம் அமைதியை இழந்து தடுமாறி நிற்கும்.

எனவே உலகம் வாழ்வதும் அழிந்து போவதும் எமது கரங்களிலேயே தங்கியுள்ளது.



> உடல் வலிமை படைத்தவர்கள் ஏனையோரை அடக்கி வைப்ப தற்குத் தலைப்பட்டனர். மேலும் கிடைக்கும் வளங்களையும் தம்வசப் படுத்திக் கொண்டனர். இதுவே மனிதர் களிடத்தில் ஏற்றத் தாழ்வுகளும், வேற்றுமைகளும் வளர் வதற்குக் காரணமாக அமைந்தது.



# தனிமை

மயூரி

சிலருக்கு எப்போதுமே தனிமை பிடித்த விடயம். மணிக்கணக்கில் தனிமையில் இருக்க விரும்புவார்கள். எதற்குத் தனிமை? தன்னைத்தானே சிறைப்படுத்திக்கொள்கிற மாதிரி எதற்காக தீவு மாதிரி மற்றவர்களிடம் இருந்து துண்டித்துக் கொள்ள வேண்டும் என்ற கேள்விகளை இதுமாதிரியான தனிமை விரும்பிகளிடம் கேட்டால் அவர்களிடம் இருந்து உடனடியாக பதில் வராது. அமைதி காப்பார்கள். அந்த அமைதிக்குப் பின்னால் ஓர் ஆழமான சோகம் இருக்கும். அது என்னவென்று அத்தனை விரைவாக வெளிப்படுத்தி விடமாட்டார்கள்.

மற்றவர்களிடம் தங்களின் விடயங்களை சொல்லும்போது அது வெளியரங்கமாகி இன்னும் விபரீதத்தை ஏற்படுத்தும். அதன்பிறகு நாம் தவறாக விமர்சிக்கப்படுவோம் என்கிற அவமானத்தை தவிர்க்கிற போக்கே இந்தப் பயத்துக்கு காரணம்.

சரி, மனம் விட்டுப்பேச ஒருவர் கூடவா இல்லாமல் போய் விடுவார்கள்? இருப்பார்கள். ஆனால் இவர்கள் மனம் விட்டுப் பேசினால் தானே. பொதுவான விஷயங்களைப் பேசுவார்கள். நாட்டு நடப்பு பற்றிக்கூட அவ்வப்போது விசாரித்துக் கொள்வார்கள். அதே நேரம் தங்கள் விடயம் என்று வரும்போது மட்டும் வாயை இறுக மூடிக் கொண்டு விடுவார்கள்.

ஒரு விடயத்தை சரியா, தவறா என்று கணிப்பதில் ஏற்படுகிற குழப்பமே இவர்களின் விடயங்களை இருட்டுக்குள் தள்ளி வைக்கின்றன.

**சிலருக்கு நண்பர்கள் அமைய மாட்டார்கள். தவறிப்போய் அப்படி அமைந்தாலும் அதை முன்னாயத்தம் செய்துகொள்ளத் தவறி விடுவார்கள். இவர்களின் விருப்பத்துக்கும் நண்பர்கள் சுவைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. அதனாலும் தனிமைப் படுத்தப்படும் இவர்கள் அதையும் நல்லதுக்கென்றே எடுத்துக் கொள்வார்கள்.**



விடை வராத கணக்கை போட்டுப் போட்டுப் பார்த்து கால நேரத்தை வீணடிக்கிற மாதிரி தீர்க்கமுடியாத விடயங்களை தங்களுக்குள்ளாக போட்டுப்போட்டு குழம்பி கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களில் பலர் தங்கள் மனைவி, பிள்ளைகளிடம் கூட இது விடயமாய் கலந்து பேசமாட்டார்கள். இதுமாதிரியான அனுகுமுறைகளில் ஒரு நாள் திடீரென பிரச்சினை வெடித்து கடைசியில் அமளிதுமளியில் கொண்டு வந்து விட்டுவிடும். அத்தோடு இவர்களால் ஒட்டுமொத்த குடும்பமும் மீட்சி இல்லாமல் அவதிப்படுகிற நிலைமையும் ஏற்பட்டு விடக்கூடும் சிலர் இருக்கிறார்கள். பேசினாலே வம்பு என்று நினைத்துக்கொள்கிற ரகம் இவர்கள். பல நேரங்களில் அமைதி விரும்பிகளாகவே இருந்து விடுவார்கள். ஆனால் இவர்களிடம் ஆற்றல் இருக்கும். எப்போது எங்கே பேச வேண்டுமோ அங்கே கட்டாயம் இவர்கள் குரல் நேரத்துக்கு ஒலிக்கும்.

இது நிச்சயமாக ஆபத்தில்லாத அமைதி. தேவையில்லாத நேரங்களில் எல்லாம் எதற்கு வீணாகப் பேசி பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிற ரகமாக இவர்கள் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொள்வார்கள். அதில் தங்கள் கருத்தைச் சொல்லாவிட்டாலும் அதில் உள்ள சாராம்சத்தைக் கிரகித்துக் கொண்டு விடுவார்கள். அது மட்டுமன்றி ஒருவர் அதிகம் பேசுவதால் எந்த மாதிரியான புதுப்புது பிரச்சினைகளில் சிக்குகிறார்கள் என்பதையும் அவர்களால் சட்டென கிரகித்துக் கொண்டுவிட முடிகிறது.

சிலருக்கு நண்பர்கள் அமைய மாட்டார்கள். தவறிப்போய் அப்படி அமைந்தாலும் அதை முன்னாயத்தம் செய்துகொள்ளத் தவறி விடுவார்கள். இவர்களின் விருப்பத்துக்கும் நண்பர்கள் சுவைக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. அதனாலும் தனிமைப் படுத்தப்படும் இவர்கள் அதையும் நல்லதுக்கென்றே எடுத்துக் கொள்வார்கள். வீட்டில் இருந்து அலுவலகம், அலுவலகம் விட்டால் வீடு என்கிற உணர்வைக் கொண்டிருக்கிற பலரும் இந்த வகையைச் சேர்ந்தவர்கள் தான்.

கலகலப்பாகப் பேசுவது என்பது சிலருக்கு கைவந்த கலை. ஒரு வீட்டுக்குள் இப்படி கணவன் - மனைவி இருவரில் ஒருவர் கலகலப்புப் பேர்வழியாகவும் அடுத்தவர் அமைதி விரும்பியாகவும் இருந்தால், வீட்டில் ஒருவித அசாதாரண அமைதி குடி கொண்டிருக்கும். கலகலப்புக்கு மௌனம் ஆட்சி செய்கிற இடத்தில் பெரும்பாலும் வேலை இருக்காது.

# தன்னடக்கம்

அறிவை, அதன் பலனை பிறருடன் பகிர்ந்து கொள்ளாத அறிவாளிகளை யாரும் மதிப்பதும் இல்லை,விரும்புவதும் இல்லை. யாருக்கும் பயன்படாத பணத்தை காக்கும் பணக்காரனைப் பற்றி தெரிந்து கொள்ள திருடனைத் தவிர யாரும் ஆர்வம் காட்டுவதில்லை. புகழ் வரும்போது தன்னடக்கத்தை பேண வேண்டும். புகழ் மமதையைத் தருமானால் மமதை விரைவில் அந்த புகழை அழித்து விடும்.

கல்வியும் சிந்தனையும் ஒருவனுக்கு சாபக்கேடாகக்கூட மாறலாம். கல்வியும் சிந்தனையும் ஒருவனை, அவனது உலகத்தை விரிவுபடுத்துகின்றன. அத்தோடு சேர்ந்து அவனது தான் என்ற அகந்தையும் வளர்கிறது. பிறருக்கும் அவனுக்கும் இடையே முதலாளி, தொழிலாளி என்ற இடைவெளி அதிகரிக்கிறது. தனித் தனி தீவுகளாக மாறுகிறார்கள். இதனால் தான் கற்றவர்கள் மத்தியில் ஒருவருக்கொருவர் ஒத்துப்போவ தில்லை. படித்தவர்கள் தான் அதிகம் விவாகரத்து செய்கிறார்கள். கற்றவர்கள் தான் அதிகம் குழம்புகிறார்கள். உதாரணத்தைப் பாருங்கள். நாட்டு வைத்தியத்தில் எல்லா நோயும் வாதம், பித்தம், கபம் என்பதில் அடங்குகின்றன. ஆங்கில மருத்துவத்தில் இதற்கு எத்தனை பிரிவுகள் தேவைப் படுகின்றன. கணினியியல் இன்று எத்தனை பிரிவுகளில் அறி யப்படுகிறது? எத்தனை விதமான இயக் கும் முறைகள் உள்ளன?

பிறர் பேச்சை காது கொடுத் துக் கேட்பதும் பணிவு தான். தன்னடக்கம் உடைய வனது அதிகாரம் மந்திரக் கோல் போன்றது. பணிவுள்ளவன்தான் சிறந்த தலைவனாக முடியும்.அரச இயந்திரத்தின் பல் சக்கரங்களில் பலருக்கும் பதவி மட்டும் தான் அடையாளம். அதிகார போதையில் பொதுமக்களிடம் பணிவின்றி நடந்து கொண்டவர் பலரும் பதவி போன பின் கிழிந்த துணி தரை துடைக்க போவது போல் ஆகிவிடுகிறார்கள். சண் டியர்கள் வாழ்வின் பிற்பகுதியில் அனாதைப் பிணமாகிறார்கள்.

சில பெரிய வியாபார நிறுவனங்களில் முதலாளியே வாடிக்கையாளர்களை கும்பிட்டு வரவேற்பார்கள். அல்லது அதற்கென்றே தனி ஆள் நியமித்திருப்பார்கள். அவர்கள் போடும் கும்பிடுகள்தான் அந் நிறுவனத்தின் மூலதனம். வாடிக்கையாளர்களை மதிக்காத எந்த நிறுவனமும் உருப்பட்ட தில்லை.

தன்னைச் சுற்றித்தான் உலகம் எனும் மாயையை ஒழித்து, உலகத்தில் தான் ஒரு பாகம் என்ற அகந்தயற்ற நிலையே மிக உயர்வான நிலை. எதையும் நாம் கொண்டு வரவில்லை, எதையும் எடுத்துச் செல்லப் போவதுமில்லை. எதையும் புதிதாக அறிகிறோமேயன்றி எதையும் நாம் உருவாக்கி விடவும் இல்லை. நாம் உலகத்தில்தான் மாற்றங்களை ஏற்படுத்துகிறோம். பூமி சுழல்வதை நிறுத்தும் சக்தி எமக்கில்லை. பின் ஏன் இந்த அகந்தை?

இறைவன் இருக்கிறான் என நம்புவதும் இல்லை என்று நம்புவதும் அவரவர் நம்பிக்கை. அவரவர் நிலைப்பாடு. இரண்டுமே சரிதான். அது இறைவன் என்று கொண்டாலும்சரி, எம்மைச் சுற்றியுள்ள உலகம் என்று கொண்டாலும் சரி அந்த மாபெரும் சக்திக்கு எமது வாழ்வின் போக்கை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு உண்டு என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. அந்த சக்தியிடம் பணிவு காண்பிக்க வேண்டும். இந்தச் செல்வமும் புகழும் இறைவன் தந்தவையே. அவை இறைவனுக்கே சொந்தம் என்பது பணிவின் சின்னம். மகிழ்ச்சியை, வெற்றியை உலகத்தோடு பகிர்ந்துகொள்ள வேண்டும். இதில் இறைவன் என்பது 'நான்' நீங்கலாக உள்ள உலகம் எனவும் பொருள் கொள்ளலாம். இப்படி தன்னை சுற்றியுள்ளதை பெருமைப் படுத்தும் தன்னடக்கமான உள்ளம் மிளிரும். காரணம் தன்னைச் சுற்றியுள்ள உலகத்தின் பிரதிபலிப்புத்தான் என்பது.

எல்லா மதங் களும் முதலில் பணிவை, கீழ் படிதலை அல்லது அகந்தையை ஒழிப்பதைத்தான் போதிக்கின்றன. குழந்தைப் பருவத்திலிருந்தே கடைப் பிடிக்க வேண்டிய முதன்மைப் பண்பு இதுதான். இந்த இரகசியத்தை புரிந்து கொள்ளாதவர்களினன் வாழ்க் கைப் பயணம் மிக கஷ்டமான பாதையில் தான் தொடரும்.



**கல்வியும் சிந்தனையும் ஒருவனுக்கு சாபக்கேடாகக்கூட மாறலாம். கல்வியும் சிந்தனையும் ஒருவனை, அவனது உலகத்தை விரிவு படுத்துகின்றன. அதோடு சேர்ந்து அவனது அகந்தை. அதாவது தான் என்ற அகந்தையும் வளர்கிறது.**

ரஜி





- மிது

# மனதை சந்தோஷமாகவும் வைத்திருக்க முயல்வோம்

நாம் நாமாக இருப்பது இந்த உலகில் பலர் தம்மிடம் இல்லாது ஒன்றை இருப்பதாகக் காண்பிப்பது, சுமையே. எம்மிடம் இல்லாதுதற்காக நாம் மற்றவர்களால் நேசிக்கப்படுவதை விட, இருப்பதற்காக வெறுக்கப்படுவது எவ்வளவோ மேல். இதனால் எப்போதும் நாம் நாமாகவே பிரகாசிக்க முடியும்.

உலகில் இருக்கும் அனைவருமே ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கையைக் கழிக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் சில சமயங்களில் அதை எப்படி செயற் படுத்துவது என்று தெரியாமல் குழம்புகிறோம். இத்தகைய குழப்பங்களால் உடல் மற்றும் மனதில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. சொல்லப்போனால், வாழ்க்கையே சிலருக்கு வெறுமையாகிவிடும். இத்தகைய வெறுமை ஏற்பட்டால் எப்படி உலகில் வாழ வேண்டுமென்ற ஆசை ஏற்படும்? எனவே மனதை இலேசாகவும் சந்தோஷமாகவும் வைத்திருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

சிலர் வாழ்க்கையை சந்தோஷமாக அமைத்துக் கொள்ள பல முயற்சிகளை மேற்கொள்கிறேன் என்ற பெயரில் தவறான வழியில் சென்றுவிடுகின்றனர். அவ்வாறு சென்ற பின்னர் அதிலிருந்து மீள்வதற்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர். ஆகவே எந்த ஒரு செயலையும் செய்வதற்கு முன்னர், நாம் செய்வது நல்லதுதானா என்பதை உறுதிபடுத்திக் கொண்டு, பின்னர் செயற்பட்டால் வாழ்க்கையே சந்தோஷமாகவும் ஆரோக்கிய மாகவும் இருக்கும். இப்போது அந்த வாழ்க்கையை சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் வைத்துக் கொள்ள எப்படி இருக்க வேண்டுமென்று பட்டியலிட்டுள்ளோம். அதைப்படித்து தெரிந்து கொண்டு வாழ்வை சந்தோஷமாக வாழுங்கள். போதுமான உறக்கம் இது உங்களை ஆரோக்கியமாக மட்டுமல்ல மகிழ்ச்சியாகவும் வைத்திருக்கும்.

ஒவ்வொரு இரவும் 8-10 மணி நேரம் உறங்குவதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். படுக்கைக்கு போவதற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவே மனதை இலேசாக்கிக் கொள்வது நல்லது. அதிலும் பாட்டு கேட்பது மனதை லேசாக்கும். இதனால் தூங்கப்போனவுடன் நல்ல நிம்மதியான தூக்கம் வரும்.

## சத்தான உணவு

எல்லா நொறுக்குத் தீனிகளையும் குறைத்து விட்டு, தினமும் உணவில் காய்கறிகள் மற்றும் பழங்களின் அளவை அதிகரிக்கவும். இதனால் உடலில் புத்துணர்ச்சியும், மனதில் உற்சாகமும் அதிகமாகும். தண்ணீரை அதிகம் குடிக்கும்போது சருமம் பளபளப்பாக இருப்பதால் தோற்றம் பற்றி நம்பிக்கை அதிகரிக்கின்றது. உடல் ஆரோக்கியத்துக்கும் தண்ணீர் முக்கிய ஆதார மாக உள்ளது. எனவே சந்தோஷமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க, ஒரு நாளில் 8 குவளை தண்ணீரைக் குடிப்பது அவசியமாகிறது

## உடற்பயிற்சி

வேகமான நடை, மிதமான ஓட்டம், அறையில் நடனம் இப்படி ஏதாவது ஒன்றை உடற்பயிற்சிக்காக தேர்ந் தெடுத் துக் கொள்ளுங்கள். ஏனெனில் உடலை உறுதியாகவும், மனதை இலேசாவும் உணர வைக்கும் ஒரு மாயமே உடற் பயிற்சியாகும்.

## நண்பர்கள்

உண்மையான நண்பர்களை அருகில் கொண்டிருப்பதுடன், அவர்களை பாராட்டி உற்சாகப்படுத்தும் வழக்கத்தைக் கடைப்பிடியுங்கள். நாம் எந்த மாதிரியான அன்பையும், மரியாதையையும் மற்றவர்களிடம் எதிர்பார்க்கிறோமோ, அவை அனைத்தையும் அவர்களுக்கு வாரி வழங்குங்கள்.

## உதவி


அம்மாவுக்கோ அல்லது மனைவிக்கோ வீட்டு வேலைகளில் உதவுங்கள். வீட்டை ஒழுங்கு படுத்துங்கள். இவையெல்லாம் அவர்கள் உங்களை மேலும் நேசிக்கத் தூண்டும். இதனால் ஒருவித மனநிறைவு கிட்டும். பொழுதுபோக்கு ஏதாவது ஒன்றில் ஆர்வத்தைச் செலுத் துங்கள். அது இசையோ, ஓவி யமோ அல்லது விளையாட் டாகவோ இருக்கலாம். இதில் கவனத்தைச் செலுத்தினால், சாதனை புரிய முடியும். எம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையும் வளரும்.

## புன்னகையும் சிரிப்பும்

எதற்கும் சோகபாவம் கொள் ளாமல் நகைச்சுவைக்கு முதன்மை கொடுத்து முகம் கோணாமல் இருக்க முயலுங்கள். புன்னகையும் சிரிப்பும் எப்போதுமே மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும். சில நேரங்களில் உங்கள் புன் னகை, யாரோ ஒருவரின் சோக தினத்தையே வேறுவிதமாக மாற்றக் கூடும்.

## மன அழுத்தத்தை குறைப்பது

ஒருவரின் ஆரோக்கியத்தை கெடுப்பது மனஅழுத்தம். ஆகவே யோகா போன்ற மனப்பயிற்சிகளில் ஈடுபட்டு, மன அழுத் தத்தைக் குறைக்க வேண்டும். மேலும் எழுதுவது, புத்தகம் படிப்பது, இசை கேட்பது, இயற்கையை ரசிப்பது போன்ற செயல்களாலும் மனதை இலேசாக்கலாம். நண்பர்களோடு வெளியில் செல்வது, நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, உறவினர்களை சந்திப்பது அல்லது சந்தோஷத்துக்காக பைக்கில் வெளியே செல்வது அல்லதுசெல்லப்பிராணியுடன்வெளியில் செல்வதுபோன்றஏதாவதுஒருசெயலை சாதாரண நேரங்களில் செய்தால், மனதில் கஷ்டம் இல்லா மல் மனமும் இலேசாகும். ஏனெனில் இதுபோன்ற சுற்றுச்சூழல் தான் எப்போதுமே மனதைஇலேசாக்கும்சக்திகொண்டது. நாம் நாமாக இருப்பது இந்த உலகில் பலர் தம்மி டம் இல்லாத ஒன்றை இருப்பதாக காண்பிப்பது, சுமையே. எம்மிடம் இல்லாததற்காக நாம் மற்றவர்களால் நேசிக்கப்படுவதை விட, இருப்பதற்காக வெறுக்கப்படுவது எவ்வளவோ மேல். இதனால் எப்போதும்நாம்நாமாகவேபிரகாசிக்கமுடியும்.











யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கலாசாரப் போட்டிகள் யாழ்ப்பாணம் சன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இடம்பெற்ற கிராமின நடன நிகழ்வில் கலந்துகொண்ட அணிகள் சிலவற்றின் நிகழ்வுகள்..

# பூனையுடன் நெருங்கிப்பழகினால் மூளைக் கோளாறு அபாயம்



நீங்கள் நாய்கள் மீது பிரியமான வரா? பூனை என்றால் உங்களுக்கு உயிரா? முதல் விடயம் இன்னும் ஆராய்ச்சி அளவில் தான் இருக்கிறது. ஆனால் பூனை பற்றிய அபாய எச்சரிக்கைகள் இப்போது வெளியே வந்து விட்டன. மூளையைக் கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி ஒன்று உள்ளது. அது 99.9 சதவீதம் பூனையில் இருந்துதான் மனிதர்களுக்குத் தொற்றுகிறது: அவ்வாறு தொற்றும் ஒட்டுண்ணி தான் மூளையை முழுமையாகக் கட்டுப்படுத்தி மூளைக் கோளாறுகளுக்குக் காரணமாகிறது என்ற உண்மையை விஞ்ஞானிகள் இப்போது பகிரங்கப்படுத்தியுள்ளனர்.

பூனையிடம் அவ்வளவு சுலபமாக, பொறி வைக்காமலேயே சிக்கிக் கொள்கிறதே எலி எப்படி? அதில் தான் இந்த ஒட்டுண்ணியின் பிறப்பு ஆரம்பிக்கிறது. எலி பிறக்கும் மூன்று மாதத்துக்கு உள்ளேயே ஒரு பரசைட். ஒட்டுண்ணி அதன் மூளையில் உருவாகி விடுகிறது. இந்த ஒட்டுண்ணி, மூளையை அப்போதில் இருந்தே ஆட்டிப் படைக்க ஆரம்பித்துவிடுகிறது. இந்த ஒட்டுண்ணியின் பெயர் 'டெக்சோபிளாஸ்மா கோண்டீ' எதைச் செய்ய வேண்டும். எதை செய்யக்கூடாது. எங்கே போகலாம் போகக்கூடாது என்பது முதல் பைத்தியமான காரியங்களைச் செய்வது வரை அவ்வளவுக்கும் இந்த ஒட்டுண்ணி தான் கட்டளை பிறப்பிக்கிறது. எலிக்கு அதென்னவோ பூனை, பூனையின் சிறுநீர் என்றால் பிடிக்கும். அப்படி என்ன சுவையோ என்று எண்ண வேண்டாம். உண்மையில் இந்த ஒட்டுண்ணி வேலைதான் அது. எலிக்கு பிடிக்காமலேயே இந்தப் பழக்கத்தை ஏற்படுத்தியது ஒட்டுண்ணி. அதனால் தான் தெரிந்தே. பூனையிடம் மாட்டி இரையாகிறது எலி. சரி. எலியை கடித்து சாப்பிட்ட பூனை ஒரு ஏப்பம் விட்டுவிட்டுப் படுத்து விடும். இந்த பூனை வீட்டுப்பூனையாக இருக்கலாம். திரியும் பூனையாக இருக்கலாம். எலியைப் பிடிப்பதில் பாகுபாடு இல்லை. எலியைச் சாப்பிடுவதிலும் வேறுபாடு இல்லை. அப்படியே தூங்கி எழுந்த பின் சிறுநீர். மலங்கழிக்க போவதிலும் அவ்வளவு ஒற்றுமை. அங்கு தான் பிரச்சினையே ஏற்படுகிறது. ஏற்கனவே, எலியைச் சாப்பிட்டதால் அதன் மூளையில் உள்ள ஒட்டுண்ணி பூனையின் மூளைக்கு போய் விடும். அதன் சிறுநீர், மலம் மூலம் ஒட்டுண்ணி. மற்றவர்களுக்கு பரவ வாய்ப்பு அதிகம். வீட்டுப் பூனையாக இருந்தாலும் வெளிப்பூனையாக இருந்தாலும், இவ்வாறுதான் மற்றப் பூனைகளுக்கு மட்டுமல்ல, மனிதர் களுக்கும் பரவி விடும் அபாயம் உள்ளதாக அமெரிக்க நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள பெர்க்லே நகரில் உள்ள கலிபோர் னியா பல்கலைக்கழக நிபுணர் வெண்டி இங்க்ராம் தலைமையிலான குழு இது தொடர்பாக விரிவான ஆராய்ச்சிகளைச் செய்து பல திடுக்கிடும் தகவல்களைச் சேகரித்துள்ளது.

டெக்சோபிளாஸ்மா கோண்டீ என்ற பரசைட் தான் மனித மற்றும் உயிரினங்களின் மூளையை எல்லாவகையிலும் கட்டுப்படுத்துகிறது.

இது ஒரு வகை ஒட்டுண்ணி. பிறக்கும் போதோ, மனிதன் மற்றும் சில உயிரினங்களுக்கு தொற்றுவதன் மூலமே மூளையை அடைகிறது.

பூனை, எலி போன்ற உயிரினங்களுக்கு அதன் பழக்க வழக்கங்கள், அணுகுமுறை போன்றவற்றில் மாற்றங்களை இந்த ஒட்டுண்ணிதான் செய்கிறது. எந்தச் சமயத்தில் இந்த ஒட்டுண்ணி செயற்படும் என்று கூறுவது இயலாத காரியம். மூளையைக் கட்டுப்படுத்துவதில் வல்லமை படைத்தது. மனிதர்களைப் பொறுத்த வரை, மூளையைச் சீர்படுத்துவதைத் தவிர மற்ற அபாய மாற்றங்களைச் செய்வது இந்த ஒட்டுண்ணி தான்.

சிஸ்ரோபெர்னியா, பைபோலார் கோளாறு, அப்சசிவ் கம்பல்சிவ் சிண்ட்ரோம் போன்ற மூளைகோளாறுக்கு காரணமே இந்த ஒட்டுண்ணி தான். பார்ப்பதற்கு சாதாரண மனிதராக தான் வளர்வர்; ஆனால் போகப்போக பழக்க வழக்கம் மாறும். அதற்கு இந்த ஒட்டுண்ணியே காரணம். இந்த பழக்க வழக்கம் மாறுவது முதல் பலவகைமன, மூளை கோளாறு வருவது வரை இந்த ஒட்டுண்ணியின் வேலை தான். கொக்கு வாயில் தெரிந்தே சிக்கும் மீன். அப்படி மீன் நடந்து கொள்ள முதன் மூளையை ஆட்டிப்படைப்பதும் இந்த ஒட்டுண்ணியே.

மனிதர்களைப் பொறுத்த வரை இது குழந்தைப் பருவத்தில் தொற்றவே வாய்ப்பு அதிகம். எப்போது வேண்டுமானாலும் அது செயற்பட ஆரம்பிக்கும். பெண்களுக்கு அதிகளவில் குறிப்பாக கர்ப்பிணிகளுக்கு ஒட்டுண்ணி தொற்ற வாய்ப்பு அதிகம். பூனை முதல் மனிதன் வரை மூளையில் தொற்றும் ஒட்டுண்ணி, முதலில் செய்வது மூளையை பலமிழக்க வைப்பதுதான். அடுத்ததாக தன் வசப்படுத்தி மூளையின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதும் இந்த ஒட்டுண்ணியின் வேலை தான். இவ்வாறு ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓ.சி.டி: மூளைக் கோளாறுகளில் ஒன்று தான் அப்சசிவ் கம்பல்சிவ் டிசார்டர். இது 99 சதவீதம் பேருக்கு பல வகையில் இருக்கும். ஆபத்தான் பழக்க வழக்கங்கள் அதிமாகும் போது தான் சிகிச்சை எண்ணமே வருகிறது வீட்டைப் பூட்டி விட்டோமா என்று பூட்டைப் பல முறை இழுத்துப்பார்ப்பது 108 முறை பிள்ளையாருக்கு தோப்புக் கரணம் போட்டு விட்டோமா என்று சந்தேகப்படுவது. சிறிய சத்தம் கேட்டாலும் கண்டபடி குழப்பம் அடைவது. ஏதாவது வாசம் வந்தால் சிலிண்டர் கேஸ் தானா என்று சந்தேகிப்பது இந்த வகை தான்.

அவர் சிரிக்கவில்லை. நாம் ஏன் சிரிக்க வேண்டும் என்று 'உர்ர்ர்' என இருப்பது. இவன் ஏன் சிரித்தான் என்று குழம்புவது. இவன் எமக்குக் குழி தோண்டுகிறானோ என்று நண்பனை சந்தேகிப்பதும் இந்த ஒட்டுண்ணியின் வேலை தான்.


சிரிப்பு, அழுகை, பதற்றம், குழப்பம் எல்லாமே நார்மல் அளவை தாண்டிவிட்டால் உஷாராக இருக்க வேண்டும்.

**சிஸ்ரோபெர்னியா:** சம்பந்தமே இல்லாமல் பேசுவது, அடிக்கடி உணர்ச்சி வசப்படுவது தெரியாத விடயங் களில் பயப்படுவது போன்றவை தான் இந்தக் கோளாறு.

**பைபோலார் டிசார்டர்:** இந்தக் கோளாறு பெரும்பாலும் பெரிய திறமைசாலிகளுக்கு வர வாய்ப்பு அதிகம். சிறிய வயதில் பெரும் சாதனைகளைச் செய்திருப்பர்; குறிப்பிட்ட துறையில் சாதித்திருப்பவராக இருக்கலாம். ஆனால் எதிர்காலம் பற்றியோ. வாழ்க்கைப் பற்றியோ சிந்தனையே இவற்றுக்கு இருக்காது.

பெரிய முடிவுகளை சுலபமாக எடுத்து விட்டதாக நினைத்து, பிரச்சினை குழியில் விழுந்து விடுவர். நம்பி மோசம் போவதும் இந்த ரகம் தான். இப்படி பிரச்சினைகளில் தவிப்போருக்கு மூளை பாதிப்பு தான் இந்தக் கோளாறு.

கர்ப்பிணியாக இருக்கும் பெண்கள், பூனையிடம் இருந்து விலகி இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். இதற்குக் காரணம் இந்த ஒட்டுண்ணியே. காரணம், இந்த ஒட்டுண்ணி, பிறக்கும் குழந்தையைக் கருவிலேயே பாதிக்க வாய்ப்பு அதிகம். பொதுவாக மனித உடலில் உள்ள எதிர்ப்புச் சக்தி பலவீனமாகும் போது இந்த ஒட்டுண்ணி தனது வேலையை ஆரம்பிக்கும். எதிர்ப்புச் சக்தியை பலவீனமாக்கி விட்டு கோளாறுகளை ஆரம் பிப்பதும் இதன் வேலையே.



CALTEX

# கல்டெக்ஸ் உடன்
## வியாபார உதவியாளராக
## இணைந்து இலாபத்தினைப் பெற்றிடுங்கள்

இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனையில் முக்கிய இடத்தில் இருக்கும் வரையறுக்கப்பட்ட இலங்கை செவ்ரோன் லுப்ரிகன்ட்ஸ் பொதுக் கம்பனியானது, உலகின் எரிபொருள் நிறுவனங்களுக்கிடையில் பெரிய மற்றும் அதிக போட்டித்தன்மையுள்ள நிறுவனம் ஆகும்.

அவற்றின் விநியோகத்தினை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளும் குறிக்கோளில் கல்டெக்ஸ் ஒயில் விற்பனை நிலையங்கள் இல்லாத பிரதேசங்களில் **"கல்டெக்ஸ் ஒயில் மார்ட்"** வியாபார நிலையத்தை ஆரம்பிப்தற்கு எங்கள் நிறுவனம் தீர்மானத்தினை மேற்கொண்டுள்ளது.

**தகைமை**

- குறைந்தபட்சம் 15 X 15 அடி அளவுள்ள வியாபார இடமொன்று இருத்தல் வேண்டும்.
- அது கட்டாயமாக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து 100 மீற்றர் எல்லையினுள் இருத்தல் வேண்டும்.
- வியாபார நேரத்திற்கு மேலதிகமாக பணிபுரிவதற்கான விருப்பம் இருத்தல் வேண்டும்.
- முயற்சி, அர்ப்பணிப்பு மற்றும் உத்வேகமுள்ள உங்களுக்கு இது பொருத்தமான சுயதொழில் ஆகும்.

**மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளவும்.**

வடக்கு மாகாணம்: 0773 404 158 | வட மத்திய மாகாணம்: 0777 772 712, 0777 729 970

வடமேல் மாகாணம்: 0777 729 970, 0773 648 955 | மேல் மாகாணம்: 0773 667 006, 0777 712 962, 0773 733 095

கிழக்கு மாகாணம்: 0773 116 888 | மத்திய மாகாணம்: 0777 772 712, 0777 420 795

சப்ரகமுவ மாகாணம்: 0773 116 889, 0777 420 795 | ஊவா மாகாணம்: 0773 116 889, 0773 751 988

தென் மாகாணம்: 0777 751 703, 0773 751 988

செவ்ரோன் லுப்ரிகன்ஸ் லங்கா பிஎல்சீ
இலக்கம் 490, காலி வீதி, கொழும்பு 03

## சில நாடுகளின் சிறப்புப் பெயர்கள்

* பியுஜியாமா (ஜப்பான்)
  புனித மலை
* சான்பிரான்ஸிஸ்கோ (அமெரிக்கா)
  பொற்கதவு
* ரோமாபுரி (ரோம்)
  7 குன்றுகளின் நகரம்
* ஐஸ்லாந்து
  நெருப்புத்தீவு
* ஸ்கொட்லாந்து
  ரொட்டி நாடு

## கெஸட்

கி.மு.59ஆம் நூற்றாண்டில் ஜூலியஸ்சீசர் கையால் எழுதப்பட்ட தினசரி செய்தித்தாளை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். அவை முக்கியமான இடங்களில் ஒட்டப்பட்டன. கூட்டன் பர்க்கின் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்புதான், செய்தித்தாள் தொழில் முறையில் தயாரிக்கப்பட்டது. 16ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் செய்தியைப் பொதுமக்களுக்கு படித்துக் காட்டுவதற்கு வெனிஸ் நகர மக்கள் காசு கொடுத்தனர். அதற்கான விலை, ஒரு சிறிய இத்தாலிய செப்பு நாணயம். அதன் பெயர் கெஸட்டா. அதிலிருந்துதான் செய்தி ஏட்டுக்கு 'கெஸட்' என்ற பெயர் வந்தது.

சி.சிந்து, சுதுமலை.

# நரியும் கொக்கும்



அது ஓர் அடர்ந்தகாடு. அங்கு பல மிருகங்கள் வாழ்ந்து வந்தன. அந்தக் காட்டில் நரி ஒன்று வசித்து வந்தது. அதற்கு எப்போதும் யாரை யாவது ஏமாற்றி, அவர்கள் ஏமாறு வதைக் கண்டு மனம் மகிழ்வது பொழுது போக்காக இருந்தது. அதே காட்டில் அறிவு மிக்க கொக்கு ஒன்றும் இருந்தது. அந்தக் கொக்கு அனைத்து மிருகங்களிடமும் நன்மதிப்பைப் பெற்று இருந்தது. இதைப் பொறுக்கமுடியாத நய வஞ்சக நரி, அந்தக் கொக்கை எப்படியா வது ஏமாற்ற வேண்டும் என்று நினைத்தது. ஒருநாள் கொக்கு நரியின் குகை இருக்கும் வழியால் வந்து கொண்டிருந்தது. நரி அந்தக் கொக்கைப் பார்த்து நண்பனே!உன்னுடைய அறிவைப் பற்றிக் கேள்விப் பட்டு இருக்கிறேன். நான் நாளை உனக்கு ஒரு விருந்து வைக்க விரும்புகிறேன். உன்னால், வர முடியுமா? என்று கேட்டது. கொக்கும் 'சரி வருகிறேன்' என்று கூறி விட்டுச் சென்றது.



அடுத்த நாள், நரி சுவைமிக்க சூப் ஒன்றைச் செய்தது. அன்று மாலை கொக்கு நரியின் இடத்துக்குச் சென்றது. நரியோ திட்டமிட்டபடி, சூப்பை அகன்ற இருதட்டுகளில் ஊற்றியது. ஒன்றைக் கொக்கிடம் கொடுத்தது. கொக்கினால் வாய் அகன்ற தட்டில் உள்ள சூப்பைச் குடிக்க முடியவில்லை. நரியோ நக்கிநக்கி அந்தச் சூப்பை குடித்துவிட்டு, 'நண்பனே இந்த சூப்பை உனக்காகச் செய்தேன். எப்படி இருந்தது?' என்று சிரித்து கொண்டே கேட்டது. கொக்கு தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்தது. நரியிடம், 'நண்பனே சூப் மிகவும் ருசியாக இருந்தது' என்று கூறியது. 'கொக்கு நரியிடம், இரவு நேரம் ஆகபோகிறது. நான் செல்ல வேண்டும்' என்று கூறியது. செல்லும்முன் 'இன்று நீ எனக்கு விருந்து வைத்தாய்! பதிலுக்கு நான் நாளை உனக்கு விருந்து வைக்கலாம் என்று நினைக்கிறன். உன்னால் வரமுடியுமா?' என்று கேட்டது. நரியும் அதற்குச் சம்மதம் தெரி வித்தது. நரியோ, கொக்கை ஏமாற்றி விட்டேன் என்ற கர்வத்துடன் சந்தோசமாக உறங்கச் சென்றது. கொக்கு பசியுடனும், வருத்தத்துடனும் பறந்து சென்றது. அடுத்த நாள் கொக்கு நரிக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும் என்று நினைத்தது. பெரிய அளவில் இறைச் சிகளைப் போட்டு சுவை மிக்க சூப் ஒன்றைச் செய்தது. அதன் வாசனை அந்தக் காடு முழு வதும் பரவியது. அன்று மாலை நரி கொக்கின் வீட்டுக்குச் சென்றது. கொக்கு, நரி வந்தவுடன், அந்த சுவை மிக்க சூப்பைச் சிறிய துளை கொண்ட இரண்டு குவளைகளில் ஊற்றியது. அந்தச் சூப்பின் வாசனையை முகர்ந்தவுடன் நரிக்கு வாயில் எச்சில் ஊறியது. இன்றைக்கு நல்ல வேட்டைதான் என்று நரி நினைத்தது. கொக்கு குவளையை நரியிடம் கொடுத்தது. கொக்கு தன் அலகை குவளையில் நுழைத்து சூப்பை ருசித்தது. நரியினால், குவளையின் வாய்ப் பகுதி சிறிய தாய் இருந்ததால் குடிக்க முடியவில்லை. குவளையின் ஓரங்களில் சிதறி இருந்த சிறு துளிகளை மட்டுமே நக்கி உண்ண முடிந்தது. கொக்கு நரியைப் பார்த்து 'சூப் எப்படி இருந்தது' என்று கேட்டது? நரியும், 'மிகவும் அருமை. இது போன்ற ஒரு சூப்பை நான் குடித்ததேஇல்லை' என்று பொய் கூறியது. அப்போதுதான் நரிதான் ஏமாற்றப் பட்டதை உணர்ந்தது.


நரி, கொக்கிடம் 'விருந்துக்கு நன்றி' என்று கூறிவிட்டு வருத்ததுடன் சென்றது. அப்போது தான் நரிதான் மற்றவர்களை ஏமாற்றிய போது அவர்கள் எவ்வாறு வருத்தப்பட்டு இருப்பார்கள் என்பதை உணர்ந்தது. அன்று முதல் திருந்திய நரி, பிறகு ஒருபோதும் யாரையும் ஏமாற்றியதில்லை.

க.கர்ணிகா

## பழமொழிகள்

அ- அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி.
ஆ- ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
இ- இளங்கன்று பயமறியாது.
ஈ- ஈட்டி எட்டியமட்டும் பாயும், பணம் பாதாளம் மட்டும் பாயும்.
உ- உப்பிட்ட வரை உள்ளளவும் நினை.
ஊ- ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.
எ- எறும்பூரக் கல் தேயும்.....?
ஏ- ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது.
ஐ- ஐயர் வரும் வரை அமாவாசை காத்திருக்குமா?
ஒ- ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.
ஓ- ஓட்டைச் சட்டியானாலும் கொழுக்கட்டை வெந்தால் சரி.
ஔ- ஔவியம் பேசுதல் ஆக்கத்துக்கு அழிவு.

## எமது ஆசிரியர்கள்




அன்பு என்னும் மெட்டமைத்து
பண்பு என்னும் பாட்டமைத்து
அறிவுடன் எம்மை கட்டமைத்து
பரிவுடன் கல்வி ஊட்டியவர்கள்

நல்லொழுக்கம் பல போதித்து
பல் துறையில் நாம் சாதித்து
பெருமையைச் சேர்க்க பாடசாலைக்கு
பொறுமையுடன் வழி காட்டுபவர்கள்

பிழைகள் பல திருத்தியமைத்து
கலைகள் பலவும் கற்பித்து
சிலைகள் போல் மிளிர வைத்து
மலைபோல் எம்மை நிமிர வைத்தவர்கள்

பார் எம்மைப் போற்ற
நற்குடிமகளாய் எம்மை மாற்ற
எம் வாழ்வில் தீபம் ஏற்ற
தன்னை மெழுகாக்கியவர்கள்
எமது ஆசிரியர்கள்!

மீரா குபேரமூர்த்தி
ஆண்டு-11பி
யா/இனுவில் இந்துக் கல்லூரி



## சேவல்

1. சேவல் ஒரு பறவை.
2. சேவல் வானில் பறக்காது.
3. சேவல் கூவும்.
4. சேவல் இறைச்சியை உண்பார்கள்.
5. சேவல் பூச்சி, புழுக்களை உண்ணும்.

# சுதந்திர தேவி சிலை



அமெரிக்கப் புரட்சியின் போது ஐக்கிய அமெரிக்காவுக்கும், பிரான்ஸுக்கும் இடையே நிலவிய நட்புறவின் வெளிப்பாட்டினை எடுத்தியம்பும் முகமாகவும், அமெரிக்கா சுதந்திரம் அடைந்த நூற்றாண்டுகள் நிறைவு பெற்றதை சிறப்பிக்கும் வகையிலும், பிரான்ஸ் நாட்டினால் ஐக்கிய அமெரிக்காவுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதே இந்த சுதந்திர தேவி சிலை. இது சர்வதேச ரீதியில் நட்பையும், விடுதலையையும், மக்கள் ஆட்சியினையும் வெளிப் படுத்தும் சின்னமாக விளங்குவதோடு, தற்போது அமெரிக்காவின் தேசிய சின்னமாகவும் திகழ்கின்றது.

அமெரிக்கா 1776 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி சுதந்திரப் பிரகடனம் செய்து அமெரிக்கக் குடியரசானது. அதன் நூற்றாண்டு பூர்த்தியான 1876 ஆம் ஆண்டில் இருந்தே இந்தச் சிலை நியூயோர்க் துறைமுக வாயிலின் அருகேயுள்ள லிபர்டி தீவில் கம்பீரமாகக் காட்சி தருகிறது. எனினும் இது 1886 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதியன்றுதான் திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சிலை 12 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. இதன் உயரம் 151 அடி ஆகும். இதன் எடை சுமார் 252 தொன் ஆகும். 1902 ஆம் ஆண்டு வரை இது கலங்கரை விளக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. சுதந்திர தேவி சிலையின் பிரதான அம்சம் ஒரே நேரத்தில் 25 ஜன்னல்கள் வழியாக 30 பேர் நியூயோர்க் நகரைப் பார்வையிடலாம். அமெரிக்கா-பிரான்ஸ் போன்ற நாடுகளின் சுமுகமான நட்புறவின் வெளிப்பாடாக இந்த சிலை அடையாளப் படுத்தப்படுகின்றது.

த.சஞ்ஜீவன், தரம் 9 ஈ, புனித பத்திரிசியார் கல்லூரி.








# புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவை யானைகள்





**யா**னைகள் மற்ற விலங்குகளைப் போலல்லாமல், ஒருவர் சுட்டிக்காட்டுவதைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவை எனப் புதிய ஆய்வொன்று கூறுகின்றது. சிம்பாப்வேயில் பழக்கப்பட்ட யானைகள் மத்தியில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலமே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

யானைகள், முழுமையாக நிரப்பப்பட்ட உணவு வாளிகளை, மனிதர்கள் சுட்டிக் காட்டும்போது, உணவு இல்லாத வாளிகளிடமிருந்து பிரித்து உணரும் திறன் கொண்டவையாக இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டனர்.

சுட்டிக்காட்டும் சைகை, மற்றவர்களிடமிருந்து கிடைக்கும் உதவி, ஆதரவு என்பன மிகவும் பயனுள்ள ஒரு தகவல் தொடர்புச் சாதனம் என்று மனிதர்களைப் போலவே யானை களும் உணர்ந்திருக்கின்றன என்று அந்த ஆய்வின் முடிவு கூறுகின்றது.

## கண்ணழகைப் பராமரிக்க எட்டு மணி நேரம் உறங்குங்கள்

**நம்** அழகை அதிகப்படுத்திக் காட்டுவதில் கண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உதடுகள் சிரித்தாலும், உள்ளத்தின் சோகத்தைக் கண்கள் காட்டிக் கொடுத்துவிடும். சந்தோஷமோ, துக்கமோ எதுவானாலும் அதைக் கண்கள் பிரதிபலித்துவிடும். கண்கள் உங்கள் அழகைத் தெரிந்து கொள்ள உதவும் கண்ணாடிகள். கண்கள் பளபளப்பாக, புத்துணர்வோடு இருந்தால்தான் அழகு. சோர்ந்து களைத்துப்போன கண்கள் முக அழகையே கெடுத்து விடும்.

கண்களின் அழகைப் பராமரிக்க தினமும் எட்டு மணி நேரத் தூக்கம், சத்தான உணவு, கல்சியம், விற்றமின்கள் நிறைந்த உணவுகள் உட்கொள்ள வேண்டும். கண்களின் அழகுக்கு பால் மற்றம் பால் சார்ந்த உணவுகள், கீரை, முட்டை, மஞ்சள் நிறப் பழங்கள் உட்கொள்ள வேண்டும்.

கண்களின் அழகை பராமரிக்க போதிய அளவு தண்ணீர் குடிக்க வேண்டியது மிக முக்கியம். உடலுக்கு மட்டுமன்றி கண்களுக்கும் பயிற்சி அவசியம். ஏனெனில் கண் தசைகளோடு, மூளையுடன் தொடர்புடைய ஏராளமான நரம்புகள் இணைக்கப்பட்டுள்ளன. நீண்ட நேரம் கணினி முன்னால் அமர்ந்து வேலை பார்ப்பவர்கள் அடிக்கடி கண்களுக்குக் குளிர்ச்சியைத் தரும் நீலம் போன்ற நிறங்களை பார்க்க வேண்டும்.

## நீருக்கடியில் ஓர் அழகிய நகரம்

சீன நாட்டின் புராதன நகரங்களின் ஒன்றான சிங்க நகா என அழைக்கப்படும் இடம், கடந்த 53 வருடங்களாக நீருக்குள்ளே மூழ்கியுள்ளது இருக்கின்றது. 1300 வருடங்களின் முன் உருவாக்கப்பட்ட இந்த நகர் சீனாவின் அழகிய ஆயிரம் தீவு ஏரியின் கீழ் ஏறத்தாழ 85 அடி ஆழத்தில் புதைந்து இருக்கின்றது.






## உடல்நிலை சரியில்லாத போது .......

**வி**டுமுறை நேரம், ஓய்வு நேரம் போன்ற நேரங்களில் நமக்குப் பிடித்த உணவுகளை வீட்டில் செய்தோ அல்லது வெளியில் வாங்கியோ தருவார்கள்.

நாமும் அனைத்தையும் உண்போம். அதனால் இக்காலத்தில் அடிக்கடி சளியும், காய்ச்சலும் ஏற்படுகின்றன.

இந்தச் சளியைப் போக்க பூண்டு, இஞ்சி சேர்த்



தல் எனப் பல இயற்கை முறைச் சிகிச்சைகள் இருக்கின்றன. எனினும் எந்த உணவு வகையைத் தவிர்த்தால் நோய்வாய்ப்படாமல் இருக்கலாம் என்பதைத் தெரிந்து கொண்டால் அவற்றைத் தவிர்த்து நோயெதிர்ப்பு சக்தியை ஊக்குவிக்கும் உணவுகளை உட்கொண்டு வந்தால் வெகு விரைவிலேயே குணம் அடையலாம்.

சாதாரண நேரத்தைவிட நோய்வாய்ப்பட்டிருக்கும்போது சில உணவு வகைகளை தவிர்க்க சொல்வதால் அந்தநேரத்தில் அவற்றைச் சுவைக்க அதிக ஆவல் ஏற்படுவது மனித இயல்புதான்.

ஆனால் நாவைக் கட்டுப்படுத்தி தவிர்க்க வேண்டிய உணவுகளைத் தவிர்த்தால் தான், சீக்கிரமே குணம் அடைய முடியும்.

நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்தில் கண்டிப்பாக சொக்லெட் அல்லது பிஸ்கட்டுகளை அதிகமாக சாப்பிடக் கூடாது. ஏனெனில் இனிப்புகளில் அதிக அளவு புரதக் கொழுப்பு உள்ளது. இது செரிமான அமைப்பில் இறுக்கத்தை ஏற்படுத்தும்.

நோய்வாய்பட்டிருக்கும்போது வேர்க்கடலைப் பருப்புகளைச் சாப்பிட்டால் அளவுக்கு அதிகமான சளியை உண்டாக்கிவிடும். ஏற்கனவே சளியால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் போது, இது கூடுதல் சிரமமாக மாறிவிடலாம்.

மாட்டிறைச்சியும் உடலை பாதிக்கும். மாட்டிறைச்சியில் அதிகளவு கொழுப்பு இருப்பதால், அதனை கரைத்து செரிமானம் செய்வதற்கு, உடல் சிரமப்படும். உடல்நலம் சரியில்லாத போது மாட்டிறைச்சி சாப்பிட்டால் சிக்கலை ஏற்படுத்திவிடும்.

மதுபானம் என்பது இரசாயன மூளைத்திறன் குறைப்பு மருந்து. அதனால் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, உண்ணும் அனைத்து மருந்துகளையும் மதுபானம் செயலிழக்கச் செய்து விடும். மேலும் மதுபான வகைகள் பலவும் அமிலத்தன்மை கொண்டவையாகும். இதனால் வயிறும் பாதிப்படையும். உடல்நிலை முன்னேறுவதற்கு காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பது நல்ல யோசனையாகத் தான் தோன்றும். அதில் ஒன்றும் தவறில்லை.

ஆனால் அந்தக் காய்கறிகள் வேகவைக்கப்பட்டிருக்க வேண்டும். காய்கறிகளை பச்சையாக எடுத்துக் கொண்டால், செரிமான பிரச்சினை ஏற்படும். அதனால் பக்றீரியாத் தொற்றுக்கள் ஏற்படும்.

பால் சம்பந்தப்பட்ட பொருள்களில்தான் அதிக அளவிலான கொழுப்புகள் உள்ளன. அதனால் அவை செரிமானத்துக்கு கஷ்டத்தைத் தருகின்றன. எனவே உடல்நிலை சரியில்லாத போது தவிர்க்க வேண்டிய உணவுகளை தெரிந்துகொண்டு பொருத்தமான உணவுகளை உண்ண வேண்டும்.



# கல்விப் புலத்தின் தீர்க்கதரிசி...



கல்வியியலாளர் என்ற மகுடத்துடன் மாற்றமற்ற சமூக விழுமியங்களைப் பேணி வந்த கால கட்டத்தில் தன்னை இனம் காட்டியவர் காலஞ்சென்ற அதிபர் இராஜதுரை. யாழ்ப்பாணத்து கல்வியியலாளர்களில் இவர் வேறுபட்ட சிந்தனைகளைக் கொண் டிருந்தார்.

வேகமும், விவேகமும் இவர் எடுக்கும் முடிவுகளில் சிறப்பம் சமாகும். திட்டமிடலில் நல்ல தேர்ச்சியை வெளிப்படுத்தினார். முன்னாயத்த நடவடிக்கைகள் இவரின் வெற்றிக்கு உதவின. ஈர்க்கவும், தள்ளவும், புதிய சக்தி பிறக்கவும் உதவும் மனிதக்காந்தமாய்த் திகழ்ந்தவர்.

இராசதுரை ஆற்றல் மிகு ஆசானாக மாணவ உலகினைக் கவரும் திறன் மிக்கவராகத் திகழ்ந்துள்ளார். மாணவரை அறிந்து மாணவர்க்காகத் தேடிக் கற்பிக்கும் இவரின் திறன் பாராட்டத் தக்கதாகும். விசேட கல்விமாணிப் பட்டதாரியாக ஆசிரியத்துறையில் புகுந்த இவர் சுயமான திறனோடு தொழிற்துறையிலும் ஏற்ற வாண்மையை உரிய வகையில் பெற்றிருந்தார்.

இவரது எழுத்தாற்றல் வீரியமானது. பத்திரிகைகளிலும் நூல்களிலும் ஆக்கங்கள் வெளிவந்தன. கருத்தரங்குகளில் புதிய சிந்தனையைத் தூண்டும் உரைகளை வழங்கினார். தன் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுத்த செயற்றிட்டங்களை பாடசாலைகளில் செயற்படுத்தினார். இலத்திரனியல் ஊடகங்களில் அறிவையும் தேர்ச்சியையும் வளர்த்துக் கொண்டார். இணையத் தளங்களில் தேடவும் பல்லூடகக் கற்பித்தல் முறையை அறிமுகப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொண்டார்.

தமது ஆரம்பக் கல்வியை மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆரம்பித்த அவர் இரண்டாந்தரக் கல்வியை யாழ்.மட்டுவில் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் பெற்று, 1971 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகம் புகுந்து கல்வித்துறையில் பட்டம் பெற்றார்.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியதுமே கிழக்கு மாகாண கிண்ணியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் ஆசிரிய சேவைக்காக வைத்த காலடி தான் கடைசியாக மண்ணில் புதையுறும் வரை சோர்வடையாமல் செயற்பட்டமை கண்கூடு. இப்படியாக முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் உப அதிபராகவும், யாழ்.கட்டுவன் புலம் மகாவித்தியாலயம், யாழ்.நடேஸ்வரா கல்லூரி, யாழ்.அச்சுவேலி மகா வித்தியாலயங்களில் அதிபராகவும் சேவையாற்றினார். அதன் பின்னர் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த யாழ். மத்திய கல்லூரியினை மீட்டெடுக்க இவரது அதிபர் பணி வித்திட்டது.

## நீத்தார் நயப்புரை

அதிபர் நிலையில் நின்று இவர் செய்த கல்விப் பணியினைத் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டும் காலம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் பணிக் காலமாகிய 1996 முதல் 2005 வரையான காலமாகும். அதிபரின் பேரும் புகழும் ஓங்குவதற்கு அவரது ஆளுமைப் பண்பும் கல்விச் சேவையும் காரணமாகின.

யாழ்.மத்திய கல்லூரியை இராசதுரை அதிராகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது அவர் முகத்தில் தயக்கம் காணப்பட்டதாக எவரும் சொல்லவில்லை. மாறாக புத்துயிர் கொடுத்து முதற்தர பாடசாலையாக்கிக் காட்டுகிறேன் என்ற துணிவான கம்பீரமான முகத் தெளிவு தென்பட்டதாகவும் அதனைச் செய்து நிரூபித்துக் காட்டியதாகவும் அவருடன் இணைந்திருந்தோர் இன்றும் சொல்கிறார்கள்.

மத்திய கல்லூரியினை கட்டியெழுப்ப வேண்டிய பெரிய பொறுப்பை கையேற்று வெற்றிகரமாகச் செயற்படுத்தினார். யாழ்.மத்திய கல்லூரியின் வரலாற்றில் நீண்ட வருடங்கள் ஏறக்குறைய 10 வருட காலமாக அதிபராகச் சேவையாற்றிய பெருமை மிக்க ஒரே அதிபராக இராசதுரை திகழ்கிறார்.

இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு கழகங்கள், மன்றங்கள், சாரணியம் போன்ற அமைப்புக்களை உருவாக்கி வைத்தார்.

யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்ப பிரிவுக் கட்டடங்கள், ஜேம்ஸ்சின் 3 ஆம் மாடிக் கட்டடம், தம்பர் மண்டபத்தின் கீழ்ப் பகுதியும் 150 ஆவது ஆண்டு நிறைவு மண்டபமும், விஞ்ஞான ஆய்வுகூடம், நூற்றாண்டு விழா மண்டபம் ஆகியன திருத்தப்பட்டு மாணவர் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டுக்கான பௌதிக வளத் தேவை பூர்த்தி செய்யப்பட்டது. கட்டடங்களை மாத்திரமல்ல கல்லூரியின் சகல துறைகளையும் கட்டியெழுப்பியுள்ளார்.

கணினி மூல வள நிலையம், கணினிப் பயிற்சி நிலையம் என்பன வேண்டிய கணினி வசதிகளுடன் அமைக்கப்பட்டன. றொமையின் குக் மண்டபம், சிமித் மண்டபம் என்பனவும் சீர் செய்யப்பட்டன. இறுதியாக இவர் தொடக்கிய புதிய மூன்று மாடிக் கட்டடம் முடிவடைந்து பாவனையிலுள்ளது. இவ்வாறு பல்வேறு விதமான பௌதிக வசதிகளை மாணவர் நலன் கருதி இவர் வகுத்து அமைத்துச் சென்றுள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியிலே அதிபர் இராசதுரையின் அயரா முயற்சியில் அமைக்கப்பட்ட கந்தசாமி உயிரியல் பூங்கா பல்வேறு வகையிலும் மாணவ உலகுக்கு பயனுள்ள ஒன்றாகவே விளங்கி வருகின்றது.

இவை மாத்திரமின்றி அதிபரின் பேரும் புகழும் ஓங்குவதற்கு அவரது ஆளுமைப் பண்பும் கல்விச் சேவையும் காரணமாகின. ஏற்றமிகு கல்வியியலாளரான இவர் வாண்மை மிக்க ஆசானாக, திறன் மிக்க முதனிலை முகாமையாளரான, அதிபராக, ஆற்றல் மிக்க சமூக சேவையாளராகத் திகழ்ந்து ஆற்றிய கல்விப் பணிகள் ஒரு புறம் நோக்கத்தக்கவை.

இணைக் கலைத்திட்ட அடிப்படையிலே அதிபர் இராசதுரை மத்திய கல்லூரிக்கு வரும் முன்பும் மத்திய கல்லூரிக் காலத்திலும் பற்பல பணிகளைப் புரிந்துள்ளார், யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம், அகில இலங்கைப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் என்பவற்றின் தலைவராக அகில இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்க யாழ்.மாவட்ட இணைப்பாளராக, பாடசாலைக்கு வெளியிலே அவரது சேவையானது பன்முக நிலையில் செறிந்து சென்றது.

மேலும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை, கெடற் சேவை, சாரணியம் போன்ற பல்துறை அம்சங்களும் இலக்கிய சமய கலாசார மன்றங்களும் சீர்பெற செயற்படச் செய்து இணைக் கலைத் திட்டச் செயற்பாடுகளை ஏற்றமுற வைத்து மாணவ உலகின் மறுமலர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

இந்த வகையிலே யாழ்ப்பாண மாவட்டத்தின் போர்ச் சூழல் நிலைமையிலும் எதிர் நீச்சல் போட்டு தன் பணியினை சிறப்புற முன்னெடுத்த வகையிலே தாழடைவு நிலை பெருமளவு தடுக்கப்பட்டது. பொதுப் பரீட்சைகளில் (க.பொ.த. உயர்தரம், க.பொ.த. சாதாரண தரம் 5, ஆம் புலமைப் பரிசில்) சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதற்கும் ஆவன செய்த வகையிலே சாதனை படைத்த அதிபராகவும் மிளிர்ந்துள்ளார்.

கல்வித்துறையோடு தொடர்பான வடமாகாண அதிபர் சங்கத் தலைவராக அவர் இருந்த போது, ஏனைய அதிபர்களுக்கும் உறுதுணையாக இருந்து ஆலோசனைகள் வழங்கி வந்துள்ளார்.

போரிலே பொசுங்கிக் கிடந்த மத்திய கல்லூரியினைக் கட்டியெழுப்ப வேண்டிய பெரிய பணி ஒரு புறம். மிகவும் தாழ்நிலை உற்று நின்ற மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வது மறுபுறம். அதே நேரத்திலே கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டு நிலையிலே முறை மறை இணைக் கலைத்திட்ட அம்சங்களையும் விருத்தி செய்தல் இன்னொரு புறம். ஏனைய புத்தாக்கச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றொரு புறம் என்றவாறாக அவரது கல்விப் பணிகள் பல்வேறு நிலைகளில் பரவி நின்றன.

அவர் நேர்மை மிக்க கல்வியியலாளர் ஒருவர் என்பதை இந்த விடயத்தில் நாம் வலியுறுத்த வேண்டும். தன்னலங்கருதாத சமூக நோக்கோடு கல்விப் பணியினை நல்கி நின்ற அதிபர் இராசதுரை அவரது ஞாபகங்கள் நிலைக்க அவரின் பெயரால் மாணவர் கல்வி சார் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படல் வேண்டும். அந்த வகையில் மறைந்தும் மறையாத மாமணியாக, சாவினைச் சாதனையால் சாகடித்த தனிப்பெரும் சாதனையாளராக இவர் என்றென்றும் நம்மிடையே நின்று நிலைத்திருப்பார்.

பு.ஸ்ரீஸ்கந்தராஜா,
முன்னாள் விஞ்ஞான ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி.

# வாசகர் திருமுகம்

## தமிழரின் உயிர் நாடி பண்பாடும் பாரம்பரியமும்

தமிழர்களுக்கு உயிர்நாடியாக இருப்பது தனித்துவமான வீரமும், பண்பாடும், பாரம் பரியங்களும், கலாசாரங்களும் தான். இத்தகைய தமிழ் இனம், காலத்தால் முந்திய தொன்மை வாய்ந்த வரலாற்றைக் கொண் டது. எனினும் தற்போது தமிழர்களின் கலை, கலாசாரம் பாரம்பரிய பண்பாடுகளை கடைப்பிடிப் போரின் தொகை குறைந்து வருகிறது. இதற்கு காரணம் பிற நாகரிக கலாசாரங்களுள் இயல்பாகவும் வற்புறுத் தலின் பேரி லும் கவரப்படுகிறார்கள்.

இதனால் தமிழரின் கலாசார பண்பாடு கேள்விக் குறியாகவே இருக்கிறது. தமிழர் கள் செறிந்து வாழும் டென்மார்க்கில் அண் மையில் இடம்பெற்ற தமிழ்த் திருமண விழா வில் வாழையிலையில் அங்கு வந்தவர் களுக்கு உணவு பரிமாறப் பட்டது. ஆனால் தமிழர் பாரம்பரியங்களைக் கொண்ட யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் திருமண வைபவங்களில் வாழையிலையில் உணவு பரி மாறப்படுவது அருகி வருகிறது. இப்படியாக தமிழ் மண்ணில் வேற்றுக் கலாசாரத்தை பின்பற்ற வேற்று கலாசார மண்ணில் தமிழ் முறைகளும் பாரம்பரியங்களும் பின்பற்றப் பட்டு வருகின்றன. ஓர் இனத்தை, அந்த இனத் தின் மொழியை அடையாளப்படுத்துவது அந்த மொழிக்கே உரித்தான பாரம்பரியங்களும் கலாசார வாழ்வியல் முறைகளுமே.

எனவே எமது கலாசார பண்பாடுகள், பழக்க வழக்கங் களை சீரழிய விடாது தடுப்பது எமது கடமையாகும். அப்பொழுதுதான் எமது இனம் பண்பாட்டோடு வாழ்ந்ததற்கான அடையாளம் இருக்கும். இல்லையேல் அனைத்தையும் தொலைத்து எமக்கென்றொரு வாழ்வு முறை இல்லாமல் போய் விடும் என்பதே உண்மை.

தே.விருஷன், சித்தன்கேணி.

## வாய்க்காலை திறக்கவும்

யாழ்.காங்கேசன் துறை வீதிப் புனரமைப்பின் போது மூடப்பட்ட மழை நீர் வடிந்தோடும் வாய்க்கால் வீதி புனரமைக்கப்பட்டும் திறக் கப்படவில்லை. கனகசபை அவனியூ ஊடாக சிவலிங்கப் புளியடியில் அமைந் துள்ள மதகு மூலம் பிரதான வாய்க்காலை அடையும் இந் தப் பகுதிக்கான வீதி புனரமைப்பு முடிந்த பின்பும் கூட இன்னமும் திறந்து விடப்படாத நிலையில் உள்ளது.

இதனால் வரப்போகும் பருவ மழையின் போது இந்தப் பகுதியில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் சம் பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை தெரி யப்படுத்தியிருந்தும் எந்தவொரு நடவடிக் கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. எனவே இனியும் காலம் தாழ்த்தாமல் மழை நீர்வடிந் தோடும் வாய்க்காலை உடனடியாகச் சரிசெய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி களை அந்தப் பகுதி மக்கள் கேட்டு நிற்கின்றனர்.

தி.றகுணா

## பெயர்ப் பலகையில் எழுத்துப் பிழைகள்

யாழ்.தென்மராட்சி சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமமான எழுதுமட்டு வா(ள்)ழ் கிராமத்தை வரவேற்கும் பெயர் பலகையில் எழுத்துப் பிழை காணப்படு கிறது. இதனை அந்த வீதியால் சென்று வருவோர் கண்டுகொள்வதில்லையா?

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் ஏ-9 வீதி புனரமைக்கப்பட்டது. அந்த வீதியில் கிராமங்களின் எல்லைகளை அடையாளப் படுத்தும் பெயர்ப் பலகைகள் நடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் போது வீதியின் இடது புறமாக எழுதுமட்டுவாள் என கிராமத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு பெயர்ப்பலகை நடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் நோக்கி வரும் போது வீதியின் வலது புறமாக எழுது மட்டுவாழ் என கிராமத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு பெயர்ப் பலகை நடப்பட் டுள்ளது. இரண்டிலும் வாழ், வாள் என்பதில் பிழைகள் காணப்படுகின்றன. இதே போன்று மத்திய பேருந்து நிலையத்தில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் என்பதில் குற்றுக்கள் காணப்படவில்லை. இதனைச் சுட்டிக்காட்டிய போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டவில்லை.

தில்லை

# புத்தகசாலை

## நூல் : பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்



ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களின் பொருளியல் பாடத் துக்குக்குரிய பொருளாதார வளர்ச்சியும் அபி விருத்தியும் என்னும் நூல் வெளி வந் துள்ளது. யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வே.கருணா கரன் இந்த நூலை எழுதியுள் ளார். ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களின் புதிய பாடத் திட்டத்துக்கு ஏற்ப வினா விடை வடிவில் இந்நூல் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. வர்த்தக சகட வோட்டம், பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி எனும் மூன்று தலைப்பில் விவரிக்கப்பட் டுள்ளது.

குமார்.

## நூல் : இங்கிலாந்து மகாராணி எலிசபெத்



யாழ்.திருநெல்வேலியில் பிறந்து லண்டனில் வசித்து வரும் வ.மா.குலேந்திரன், 'இங்கிலாந்து மகாராணி எலிசபெத்' என்ற நூலை எழுதி வெளி யிட்டுள்ளார். பிரிட்டன் மகாராணியார்பற்றி தமிழில் முதலாவதாக வெளிவந்த நூல் இதுவாகும்.

ஆட்சிப் பீடம் அழைக்கிறது. நால்வரல்லவோ நாம், போர்க் காலத்தில், அரச குடும்ப அகதிகள், நேரில் வந்தார் இளவரசர், என் தேவதை இவள்தான், மணி முடி சூடும் நாள் வந்தது, என் காதல் உன்னோடு தான், புதிய போக்குகள், கொமன் வெல்த் பயணங்கள், அரச குடும்பம் மனம் பார்க்கிறது, நான் பெற்ற பேறு, மணமகள் தேர்வு, குடும்ப சச்சரவுகள், உறவும் பிரிவும் வெறும் சொற்களல்ல, கடவுள் ராணியைக் காப்பாராக, நினைவில் பதிந்த சுவடுகள் என்ற தலைப்பில் கட்டுரைகளாக மகா ராணியின் வாழ்வுப் பயணத்தை புகைப்படங்களோடு ஆவணமாக வெளியிட் டுள்ளார்.

நிலா

## நூல் : மத்திய தீபம்



யாழ். இணுவில் மத்திய கல்லூ ரியின் மத்தியதீபம் நூல் வெளி வந்துள்ளது. கல்வி அதிகாரிகளின் ஆசிச் செய்திகளுடன் கல்லூரி யின் செயற்பாடுகளும் அதன் பெறு பேறுகளை உள்ளடக்கி நிகழ்வுப் படங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. மேலும் பாட சாலை மாணவர்களின் ஆக்கங்களுடன், போட் டிகளில் வெற்றியீட்டிய கல்லூரி மாணவர்களின் படங்களுடன் பேராசிரியர், விரிவுரையாளர்களின் கனதியான கட்டுரைகளையும் கொண்டு 170 பக்கங்களுடன் மத்திய தீபம் வெளி வந்துள்ளது.

தரணி.

## நூல் : இலட்சியத்தை அடைதல்



கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை யின் இலட்சியத்தை அடைதல் எனும் 28 நூல் வெளிவந்துள்ளது. இது அவரின் நூலாகும் 5 நாடகங்கள், 7 கட்டுரைகள், ஒரு சிறுகதை இந்த நூலில் உள்ளடங்குகின்றன.

யாழ். கங்கை அச்சகம் இந்த நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளது. இந்த நூலில் வெளிவந்த கட்டுரைகள் வீர கேசரி, தினக்குரல், உதயன் பத்திரிகைகளில் வெளிவந் தமை குறிப்பிடத்தக்கது.

கலைமதி


# மௌனம், தனிமை சூழ்ந்த கணங்கள் அன்ரனியோனியின் திரைப்படங்கள்




மைக்கலேஞ்சலோ அன்ரனியோனி 1912 செப்ரெம்பர் 29 ஆம் திகதி இத்தாலியிலுள்ள ஃபெராரா எனும் நகரத்தின் வடக்குப் பகுதியில் பிறந்தார். அவரது பெற்றோருக்குச் சொந்தமாக நிலங்கள் இருந்ததால் உலகின் பல கலைஞர்களுக்கு வாய்த்து விடும் வறுமைச் சூழல் அன்ரனியோனியை நெருங்கவில்லை. 1931 முதல் 1935 வரை போல்கனோ பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பட்டப் படிப்பை மேற்கொண்டார். பட்டப்படிப்பை முடித்ததும் கதைகள், திரை விமர்சனங்கள், ஓவியங்கள் எனத் த்னது கலைப் பணியைத் தொடங்கினார்.

1935-1939 வரை பத்திரிகையாளராகவும், வங்கிப் பணியாளராகவும் இருந்தார். பின்பு 1940 இல் ரோம் நகருக்குச் சென்று சென்டரோ ஸ்பெரிமன்டல் டி சினி மாடோ கிராஃபிகா என்ற திரைப்படக் கல்வி நிறுவனத்தில் 1940-1941 கால கட்டத்தில் திரைப்படக் கல்வியை மேற்கொண்டார். இந்த நாள்களில் சினிமா என்ற இதழிலும் மற்றும் வேறு சில சினிமா இதழ்களிலும், திரைப்பட விமர்சனங்களை எழுதியதோடு, 1942 இல் மார்செல் கார்னே மற்றும் என்ரிகோ ஃபுல்சிக்நோனியிடம் உதவி இயக்குநராகப் பணியாற்றினார். திரைக்கதையாசிரியராக இவரது முதல் படம் ரொபர்ட்டோ ரோஸலினியின் பைலட் திருப்புதல். 1942-1952 வரை ஃபெட ரிகோ ஃபெலினி உள்ளிட்ட பல உலகப் புகழ் பெற்ற திரைப்பட இயக்குநர்களிடம் திரைக் கதையாசிரியராகப் பணியாற்றினார். ஆவணக் குறும் படங்களை இயக்கினார். 'குரோனகா டி உன் அம்மார்' இவரது முதல் திரைப்படமாகும். பத்தாண்டுகளுக்குப் பிறகு எல் அவென்ஞ்சுரா என்ற படத்தை எடுத்தார். இந்தப் படத்திலிருந்தே அன்ரனியோனி தனக்குரிய திரைப் பாணியை வரையறுத்துக் கொண்டார். எனினும் இந்தப் படம் பார்வையாளர்களை ஈர்க்கும் வகையில் அமையவில்லை.

அன்ரனியோனிக்கும் பார்வையாளர்களை ஈர்க்கும்படியான திரைப் படங்களை எடுப்பதில் நம்பிக்கையில்லை. அவரது திரைப் பாணியை உள்ளுணர்ந்து கொள்ளும் தனித்த விருப்பமுள்ள பார்வையாளரையே அவர் எதிர்பார்த்திருந்தார். எல் அவென்ஞ்சுரா தொடங்கி அவரது அனைத்துப் படங்களுமே காட்சிகளின் ஒருங்கிணைப்பின் அடிப்படையில் கதைக்களம் சிதைவுற்ற படங்களாகவே அமைந்திருந்தன. பார்வையாளருக்கு ஒரு முழு வடிவிலான கருப்பொருளையும் அதற்குரிய தெளிவையும் அவை அளிக்கவில்லை. மாறாகக் கலைத்துப்போட்ட விதமாய்த் தோற்றம் தந்தன. படங்களில் வரும் நீண்ட தொனியிலான காட்சியமைப்புகளும், தேக்கமடையும் கால இருப்பும் கதாபாத்திரங்களை முழுமையாக மையப்படுத்ததாக ஒளிப்பதிவுக் கோணங்களின் புதிய முயற்சியும், அவர்களின் இடையறா மன முரண்களும் அந்தக் காலத்தில் வெளியான வழக்க வகைக்குட்பட்ட படங்களை ஏற்றுக் கொண்டிருந்த பொதுப் பார்வையாளர்களால் நிராகரிக்கத் தக்க காரணங்களாக அமைந்தன. இருப்பினும் அன்ரனியோனி அது குறித்த கவலையை ஒரு போதும் வெளிப்படுத்தியதில்லை. தனது தனித்த இரசனைக்குட்பட்ட திரைப் போக்கையே இறுதி வரை கடைப் பிடித்தார். பார்வையாளர்களை ஈர்க்காத பட்சத்திலும் எல்.அவென்ஞ்சுரா, 'கேன்ஸ்' திரைப் பட விழாவில் நடுவர் குழுவின் சிறப்பு விருதைப் பெற்றது.



*962 இல் உலகில் வெளி வந்த சிறந்த 10 படங்களில் எல் அவென்ஞ்சுரா தெரிவானது. அன்ரனியோனி எடுத்த ஆவணப் படங்கள் மூலம் போருக்குப் பிந்திய நாட்டின் தனிமை மனோ நிலையை, அதன் சிதையாத உள்ளுருவத்தோடு சித்திரித்த சினிமாக் கலைஞராக அவதானிக்கப்பட்டார்.*

1962 இல் உல கில் வெளிவந்த சிறந்த 10 படங்களில் எல் அவென்ஞ்சுரா தெரிவானது. அன்ரனியோனி எடுத்த ஆவணப் படங்கள் மூலம் போருக்குப் பிந்திய நாட்டின் தனிமை மனோ நிலையை, அதன் சிதையாத உள்ளுருவத்தோடு சித்திரித்த சினிமாக் கலைஞராக அவதானிக்கப்பட்டார்.

அன்ரனியோனியின் முழு நீளத் திரைப்படங்கள் முரண்படுதல், நவீன வாழ்வின் காதலற்றக் காம நுகர்வும், துன்புறுத்தப்பட்ட மனோ நிலை எனப் பல்வேறான மனவினைகளைத் திரைப்படுத்துகின்றன.

குறிப்பாக அவரது முப்படங்களான எல் அவென்ஞ்சுரா, லா நோட்டே, எல் எக்லிஸ் ஆகிய படங்களில் தோன்றும் நடிகை மோனிகா பட்டி கதா பாத்திரத்தின் மனச் சிக்கல்களை முற்றிலும் உட்கொண்ட விதமான இயல்புடன் நடித்திருந்தார். அவரது சின்னச் சின்ன அசைவுகள் கூட அந்த முரண் கூறுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்திருந்திருக்கும். பெண் கதா பாத்திரங்கள் நிகழ்த்திய தாக்கம் ஐரோப்பிய சினிமாவில் பெண் கதா பாத்திரங்களின் மன முரண் சார்ந்த தீர்வற்ற பிரச்சினைப் பாடுகளுக்கு முன்னோடிப் பிரதிகளாக நடமாடிச் சென்றவை அன்ரனியோனியினது பெண் கதாபாத்திரங்கள் 1960 களுக்குப் பின்னர் அன்ரனியோனியின் வருகை இத்தாலியச் சினிமாவில் அழகியல் பூர்வமான சினிமா மொழியின் வருகையாகக் கணிக்கப்பட்ட நிலையில் 1966 இல் இத் தாலிய பிரபல சினிமாத் தயாரிப்பாளரான கார்லோ போன்ட்டி மூன்று ஆங்கிலப் படங்களை இயக்கித் தரும் படி அன்ரனியோனியிடம் கேட்டுக் கொண்டார். ப்ளோ அப் என்ற முதல் படம் ஒரு புகைப்படக் கலைஞன் தன்னையறியாமல் பதிவு செய்த ஒரு கொலை நிகழ்வைப் பற்றிய அப்படத்தின் செறிவடைந்த கதைப் போக்கும் பெரும் வெற்றியளித்தது. இரண்டாவது படம் சப்ரிக்ஸ்கி, மூன்றாவது படம் திபே சஞ்சர். அன்ரனியோனி அவரது 25 படங்கள் மற்றும் திரைக் கதைகளுக்காக வாழ்நாள் சாதனை விருதைப் பெற்றார். இவரது திரைப் படங்களில் இருளுக்கு மிகவும் முக்கியத்துவம் இருக்கும். இவரது அதிரும் லநோட்டோ திரைப்படம் இருள் சூழ்ந்த காட்சிகளையே கொண்டுள்ளது.

இருளைத் தப்புதலுக்குரிய வடிவமாகவும் மன அயர்வை ஒத்தி வைக்கும் வெளியாகவும் அன்ரனியோனி அனுபவமாக்குகிறார். அன்ரனியோனியின் திரைப்படங்கள் மௌனமும் தனிமையும் சூழ்ந்த எமது கணங்களையும் கொண்டிருப்பவைதான். எமது மன வெம்மையில் விளையும் குணப் பிளவுகளை நாம் பதற்றத்துடன் அமர்ந்து கவனத்தில் கொள்ளும்படி திரையில் நேரெதிரே நடமாடிக் கொண்டிருக்கின்றன அவரது கதாபாத்திரங்கள்.

பார்வையாளன்.

---

# தமிழ் மக்கள் மீதான அக்கறையின் வெளிப்பாடா இது?

கோப்பாய் சண்முகம்

கதையோடு செய்தி

மகாபாரதப் போரில் ஒரு காட்சியில் அம்புப் படுக்கையில் பீஷ்மர் கிடக்கிறார். தர்மராஜன் அவரிடம் உபதேசம் பெற மண்டியிட்டு நிற்கிறான். "பிதாமகரே பிறக்கப் போகும் கலியுகத்தில் நாடுகளை ஆளும் அர சியல் தலைவர்கள் எப்படி இருப்பார்கள்" என்று அவன் கேட்க பிதாமகர் பீஷ்மர் பதில் சொல்கிறார்.

"ஒரு குடியானவன் இருந்தான். அயராது உழைப்பதில் வல்லவன். அதனால் அவனிடம் வறுமை இல்லை. உடலில் வலிமை குன்றவில்லை. ஆனாலும் அவன் மனதில் ஆறாத குறை ஒன்று இருந்தது. அது தனக்கு குழந்தை இல்லையே என்ற குறை. தெய்வங்களை வழிபடுவதற்காக அவன் போகாத கோயில் இல்லை. தர்மங்கள் செய்தான். மனைவி கர்ப்பமானாள். குடியானவன் அடைந்த சந்தோஷத்துக்கு அளவே இல்லை. குழந்தை பிறந்தது, வளர்ந்தது. ஒருநாள் நோயில் மரண தேவனின் காலடியில் சென்று குழந்தை விழுந்தது. எவரால் தாங்க முடியும். கதறி அழுதார்கள் மயானத்துக்கு எடுத்துச் சென்றான். மயானத்தின் வாசலில் அவன் காலடி வைக்கவும் அங்கே இருந்த கழுகு ஒன்று அவனிடம் பேசியது. "எத்தனை பாடுபட்டு இந்தப் பிள்ளையைப் பெற்றாய். கண் தூங்காமல் விழித்திருந்து வளர்த்தாயே, நீ படும் துயரத்துக்கு ஆறுதல் சொல்ல வார்த்தையே இல்லையே? நீ பாலும் தேனும் கொடுத்து வளர்த்த குழந்தையை மண்ணில் புதைத்துவிட்டுப் போகாதே. நாயும், நரியும் குழியைத் தோண்டி குழந்தையை குதறித் தின்று விடும்.

எட்டாத உயரத்தில் மரக் கிளையின் உச்சியில் போட்டு விட்டுப் போ. எந்த நரியும் தீண்டாது" என்று சொன்னதாம். கழுகு சொன்னதை அப்படியே செயலாக்கப் போனான். அதைக் கண்ட நரி தடுத்து நிறுத்தி "என்ன காரியம் செய்யத் துணிந்தாய். மரத்தின் மேல் போட்டால், உன் பிஞ்சுக் குழந்தையின் பஞ்சு மேனியை கழுகுக் கூட்டம் கொத்தித் தின்று விடும். மண்ணில் புதைத்து விடு. ஆனால் ஆழத்தில் புதைக்க வேண்டாம்" என்று சொன்னதாம்.

குழந்தை பற்றிய கவலை கழுகுக்கும் இல்லை. நரிக்கும் இல்லை. அவைகளுக்கு தங்களது பசிக்கான உணவைப் பற்றிய கவலை தான் இருந்தது. அதற்காக தர்மம் செய்வது போலவே சுயநலத்தை மனதிருத்திப் பேசின. இந்தக் கழுகு மற்றும் நரியைப் போலவேதான் கலியுகத்தில் அரச தலைவர்கள் இருப்பார்கள். அவர்கள் பேசுவது மக்கள் நலன் போலவே தெரிந்தாலும் சொந்தநலன் தான். மிகுந்திருக்கும். ஆளப்படுகின்ற மக்களைப், பற்றிய அக்கறை என்பது இருக்கவே இருக்காது" என்று பீஷ்மர் சொன்னார்.

எமது அரசியல்வாதிகள் எந்தக்காலத்திலும் சொந்த நலனை விடுத்து மக்கள் நலன் குறித்துச் சிந்திக்க மாட்டார்கள். தமது எதிர்பார்ப்புக்களுக்காக உள் வீட்டுக் குத்து வெட்டு, கருத்து முரண்பாடுகளிலும் ஈடுபடுகிறார்கள். அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டு சத்தியப் பிரமாணம் எடுத்த நிகழ்வை சில உறுப்பினர்கள் புறக்கணித்தனர். புறக்கணித்துவிட்டு அதற்காக ஏதோ காரணங்களையும் கூறித் தம்மை நியாயப் படுத்துகின்றனர்.

மக்களுக்காகச் சேவை செய்ய வந்தவர்கள் என்றால் கண்டிப்பாக ஒத்த பாதையில், ஒற்றுமையாகச் சென்றிருப்பார்கள். "பிரபாகரன் பெயரைக் கூறியே தேர்தலில் வென்றிருக்கிறார்கள்" என்று கூறுபவர்கள் தாங்களும் அதையே பின்பற்றுகின்றனர்.

எனவே நடந்து முடிந்த எமது ஆயுதப் போராட்டத்தைப் பற்றி எவரும் பேசாமல் இருக்க முடியாது. அப்படி பேசினால்தான் தமிழ் மக்கள் தமது வாக்கை அளிப்பார்கள் என்பது உண்மை. வன்னியில் இறுதிப் போர் நடந்து கொண்டிருந்த போது அந்தப் போராட்டத்துக்குப் பக்க பலமாக ஒன்றுமே செய்யாமல் இருந்து விட்டு இன்று அந்த இடத்துக்குப் போக நிற்கிறார்கள்.

வேடிக்கையாக இல்லை? இதற்கெல்லாம் அமைச்சுப் பதவி ஆசைதான் காரணமாக இருக்கிறது. தனிப்பட்ட ஒருவரது தேவைக்கானதாக இருக்காமல் மக்களுக்கான தேவைக்காக இருந்தால் இந்தப் பிரிவினை இருக்காது. வடமாகாண அமைச்சர்கள், உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வில் முதலமைச்சர் உரையாற்றும் போது "எவரையும் நான் விலக்கவில்லை. ஆனபடியால் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து இந்த வடமாகாண சபையின் ஆட்சியைச் சிறந்த முறையில் நடத்த வேண்டும். அப்பொழுது தான் வாக்குப் போட்ட மக்கள் எம்மை மதிப்பார்கள்" என்றார்.

முதலமைச்சராக ஒருவரைத் தேர்ந்தெடுத்து விட்டு அந்தத் தலைமைக்கு கட்டுப்படாமல் இருந்து கொண்டால் பிறகு எதற்கு முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்தார்கள் என்று தான் மக்கள் கேட்கிறார்கள். அமைச்சுக் கனவில் எல்லாம் தொலைந்து போகக் கூடாது. இவ்வளவு காலமும் அரசியல் தீர்வில் தமிழர்களுக்கு நல்ல விடயம் நடந்துள்ளதா? புதிதாக வந்திருக்கும் அமைச்சர்களையும் விட்டுப் பாருங்களேன். நீங்கள் செய்யாததை அவர்கள் செய்தால் அவர்கள் பாராட்டப் படவேண்டியவர்களே.

தமிழர்களின் தேவைக்காக நடக்க இருக்கிற செயற்பாடுகள் அனைத்தையும் பீஷ்மர் சொன்னது போல தனிப்பட்ட தேவைக்காக குழப்பி விடாதீர்கள். புதிதாக நியமனம் பெற்ற அமைச்சர்களை களமுனையில் இறக்கிப் பாருங்கள். முல்லைத்தீவு மண்ணை அந்தப் பகுதியில், உள்ள மக்கள் மட்டும் நினைவில் கொள்வார்கள் என்றில்லை அனைத்து தமிழ் மக்களின் இதயங்களில் குடி கொண்ட நிலம் அது.

எனவே புதிதாக நியமனம் பெற்ற மாகாண சபை அமைச்சர்கள் முதலில் முல்லைத்தீவைத் தான் கவனத்தில் எடுப்பார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. முல்லைத்தீவுக்கு ஓர் அமைச்சர் பதவி ஒதுக்கிக் கொடுக்கவில்லை என்று முல்லைத்தீவு மக்களைக் கேட்டால் அவர்கள் "எங்களுக்கு அமைச்சுப் பதவி வேண்டாம்" என்றுதான் சொல்லுவார்கள். ஏனெனில் அந்த மக்கள் என்றைக்கும் பதவிகளை எதிர்பார்ப்பவர்களல்லர். செயற்பாடுகளில் இறங்குபவர்கள்.